# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 301 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 06, வியாழக்கிழமை 22.09.2016



கமநலம்
Govisetha
அதிக கோடீஸ்வரர்களை உருவாக்கும் கொவிசெத
இன்றைய சுப்பர் பரிசு
ரூபா 49,669,824.40
நம்பிக்கையுடன் வாங்குங்கள்


## தியாகி திலீபனுக்கு நேற்று நல்லூரில் மக்கள் அஞ்சலி



யாழ்ப்பாணம், செப். 22
நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு பொதுமக்கள் சிலர் நேற்று அஞ்சலி செலுத்தினர். பூத் தூவி, ஈகச் சுடரேற்றி இந்த அஞ்ச்லியை நேற்றுக் காலை அவர்கள் முன்னெடுத்தனர்.

பாரததேசத்துக்குஎதிராகஅகிம்சை வழியில் போராடிய திலீபன் 12 தினங்கள் பட்டினிப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்தார். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி >> 23ஆம் பக்கம்

## தடுப்புக் காவல் கொலை;
# ஓ.ஐ.சி. உட்பட 5 பொலிஸாரை கைது செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சுமன் என்பவரைச் சித்திரவதை செய்து கொலை செய்த குற்றச்சாட்டு வழக்கில், நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் சுருக்க முறையற்ற விசாரணைக்கோவை நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. அதனையடுத்துச் சந்தேக நபர்களைக் கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறு கொழும்பு கூட்டுக் கொள்ளை விசாரணைப் பிரிவுக்கு மன்றில் வைத்து நீதிவான் நேற்று உத்தரவிட்டார். >> 23ஆம் பக்கம்

## வடக்கில் தண்டப்பணம் வருமானம் ரூ. 114 மில்லியன்

யாழ்., செப். 22
வடக்கு மாகாணத்தின் ஆளுகைக்கு உள்பட்ட 34 உள்ளூராட்சி மன்றங்களில் 32 உள்ளூராட்சி மன்றங்களுக்கு, நீதிமன்றத்தின் ஊடாக தண்டம் விதிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட 114.62 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண தலைமைச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

நீதிமன்றங்கள் ஊடாக விதிக்கப்படும் தண்டப் பணம் வடக்கு மாகாண அரசுக்கு வருமானமாக கிடைக்கப் பெறுகின்றது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் நடப்பு ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரையில் 114.6 மில்லியன் ரூபா வடக்கு மாகாண அரசின் திறைசேரிக்குக் கிடைக்கப் பெற்றது. வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில் 32 உள் >> 25ஆம் பக்கம்

## 2,436 பேருக்கு எச்.ஐ.வி.

கொழும்பு, செப். 22
இலங்கையில் 2 ஆயிரத்து 436 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 631 பேர் எயிட்ஸ் நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். எதிர்வரும் காலத்தில் அரச சேவை ஆள் சேர்ப்பின்போது எச்.ஐ.வி. பரிசோதனை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் சுகாதார அமைச்சர் >> 25ஆம் பக்கம்

# 96 அரசியல் கைதிகளில் 23 பேருக்கு மறுவாழ்வு

## வழங்க முடிவென்கிறார் புனர்வாழ்வு அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 22
சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 96 தமிழ் அரசியல் கைதிகளில் சிறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 23 அரசியல் கைதிகளை, தடுத்துவைக்கப்பட்டிருந்த காலத்தைக் கருத்திற்கொண்டும், குற்றச்சாட்டுக்களைக் குறைத்தும் அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கி சமூகமயமாக்குவதற்கான யோசனையை சட்டமா அதிபர் திணைக்களம் முன்வைத்துள்ளது.

நீதி அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு ஆகியவற்றின் ஆலோசனையை, சட்டமா அதிபர் திணைக்களம் கோரியுள்ளது.

தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி அநுராதபுரம் சிறையில் அரசியல் கைதிகள் நேற்று பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் இந்த அறிவிப்பு வெளி யாகி உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நீதி அமைச்சர் விஜயதாச, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல, மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமி >> 23ஆம் பக்கம்



## கிளிநொச்சி சந்தை தீ விபத்து திருஷ்டி கழிப்புக் காரணமா?

கிளிநொச்சி, செப்.22
கிளிநொச்சி பொதுச் சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தீ விபத்து ஏற்பட்டது. இதனால் 125 கடைகள் பாதிக்கப்பட்டன. 220 மில்லியன் ரூபா வரையில் இழப்பீடு ஏற்பட்டது. இந்தத் தீ விபத்துக்கு திருஷ்டி கழிப்பு எரித்த போது அதிலிருந்து பறந்த தணல் பற்றியதனால்தான் தீ விபத்து ஏற்பட்டது என்று கிளிநொச்சியில் பலராலும் பேசப்படுகிறது. >> 25ஆம் பக்கம்

## தமிழ்க் கைதிகள் நேற்றுமுதல் மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 22
அநுராதபுரம் மற்றும் வவுனியா சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

அநுராதபுரம் சிறப்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கை வவுனியாவுக்கு மாற்று மாறும், நீண்ட காலம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்குமாறும் கோரியே தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பு போராட்டத்தை திட்டமிட்டவாறு நேற்றுக் காலை ஆரம்பித்தனர்.

போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளமை தொடர்பிலான கடிதத்தை சிறைக் கைதிகளிடமிருந்து அநுராதபுரம் சிறைச்சாலை ஆணையாளர் பெற்றுக்கொண்டார். இருப்பினும், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர், முதலமைச்சர் உள்ளிட்டோருக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதங்களைச் சமர்ப்பிக்குமாறு >> 25ஆம் பக்கம்

## இணையத்தளத்தின் ஊடாகவே பல்கலைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 22
2015/2016 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குதகுதிபெற்றுள்ள மாணவர்கள் இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
வெட்டுப் புள்ளிகள் வெளியானதன் பின்னர் சகல மாணவர்களுக்கும் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம், தெரிவு செய்துள்ள பாடநெறிகள் போன்ற விவரங்களுடனான கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும். அந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றதும் குறித்த மாணவர், குறித்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்கிறாரா இல்லையா என்பதை அறிவிக்க வேண்டும். பதிவு செய்ததன் பின்னர் >> 25ஆம் பக்கம்

## இலங்கையின் எதிர்காலத்துக்கு அமெரிக்கா முழுமையான உதவி

### மைத்திரியிடம் தெரிவித்தார் ஒபாமா

கொழும்பு, செப். 22
இலங்கையில் தற்போது ஏற்பட்டுவரும் மாற்றங்கள் உலகுக்கு முன்மாதிரியாகும் எனக் குறிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இலங்கையின் எதிர் காலப் பயணத்துக்குத் தேவையான முழுமையான உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச்சபையின் 71ஆவது கூட்டத் தொடர் நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் பங்குபற்றும் அரச தலைவர்களுக்காக ஐ.நா. பொதுச்செயலாளினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு பகல் போசன விருந்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை நேற்று சந்தித்த போதே >> 25ஆம் பக்கம்

# மாகாண சபை சாதித்தது என்ன? கேள்வி எழத்தான் செய்கிறது

## வடக்கு முதலமைச்சர் தன்னிலை விளக்க அறிக்கை

யாழ்ப்பாணம், செப்.22
வடக்கு மாகாண மக்கள் எமது வடமாகாண சபையினரைத் தேர்தலில் தேர்ந்தெடுத்த [illegible] நாம் [illegible] இன்றாகும் (நேற்று). இன்னும் இரு வருடங்களில் எமது பதவிக்காலத்தை முடிவுறுத்த இருக்கும் இந்த நேரத்தில், இது வரையில் நாம் சாதித்தவை என்ன என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட தன்னிலை விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இதுவரையான எமது பயணத்தை சுருக்கமாக விளக்குகின்றேன்.
முதலாவதாகத் தமிழர் பெரும்பான்மையான >> 24ஆம் பக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவையான விதை நெல்லை குடாநாட்டில் பெறலாம்

யாழ்ப்பாணம், செப்.22
காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தமக்குத்தேவையான விதை நெல்லைக் குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் (சிக்கோ) பெற்றுக்கொள்ள முடியும் என்று சிக்கோவின் பொதுமுகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.
இதுவரைக்கும் இரண்டாயிரம் புசல் விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆயிரம் வரையிலான புசல் விதை நெல் கையிருப்பில் உள்ளன. விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் திருநெல்வேலியில் உள்ள சிக்கோவில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். பிஜி 406 இனத்தைச் சேர்ந்த இந்த விதை நெல்லே இந்த முறை விவசாயிகளுக்கு காலபோக செய்கைக்காக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அனேகமான விவசாயிகள் இந்த விதை நெல்லில் ஆர்வம் காட்டிப் பெற்றுள்ளனர் என்றார் சிக்கோவின் பொதுமுகாமையாளர் ரி.ரவிமயூரன். (வ-17)

# அரச உத்தியோகத்தர்களின் தவறும் வாகன விபத்துக்களுக்குக் காரணம்

### *யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், செப். 22
அரச உத்தியோகத்தர்களும், ஏனைய அலுவலர்களும் குறுகிய நேரத்திலேயே தத்தமது வீடுகளிலிருந்து புறப்பட்டு அலுவலகங்களுக்குச் செல்கின்றனர். அவர்களின் வேகமான சாரத்தியத்தினால் பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. வேகமாகச் செல்வதே விபத்துகளுக்குப் முக்கிய காரணம்.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி.
வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் நினைவாக எழுந்து நிற்போம் என்னும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அது பற்றிய செய்தியாளர் சந்திப்பு வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அரச உத்தியோகத்தர்கள் போதியநேர இடைவெளியில் வீடுகளில் இருந்து அமைதியாகச் செல்வதில்லை. குறுகியநேர இடைவெளியில் வீடுகளில் இருந்து புறப்படுகின்றனர். அதனை அவர்கள் மாற்றியமைக்க வேண்டும். இனியாவது திட்டமிட்டுப் புறப்படவேண்டும். அவர்களில் ஒரு பகுதியினர் பாடசாலை பிள்ளைகளையும் ஏற்றிக்கொண்டு வேகமாகப் பாடசாலைகளை நோக்கி ஓடுகிறார்கள். ஏனையவர்கள் அலுவலகத்தை நோக்கி வாகனங்களில் வேகமாக ஓடுகிறார்கள். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. வீதி ஒழுங்குகளை உரிய முறையில் பின்பற்றாததனாலும், அதிக வேகத்தில் செல்வதனாலுமே வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.
போதிய நேர இடைவெளியில் வீட்டிலிருந்து புறப்படுவதன் ஊடாகப் பெரியளவிலான விபத்துக்களைத் தவிர்க்கலாம். வீதிகளில் 40 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தும், அந்த வேகத்தையும் தாண்டி வாகனங்களில் ஓடுகிறார்கள். இதனால் மிஞ்சுவது விபத்துக்கள் மட்டுமே– என்றார் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி.
வட பகுதியில் அண்மைக் காலத்தில் அதிகரித்த வீதி விபத்துக்களால், விலைமதிக்க முடியாத பல உயிர்கள் நினைவாக எழுந்து நிற்போம் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரை கவனவீர்ப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுத் தெரிவித்தது.
இது தொடர்பிலான செய்தியாளர் சந்திப்பில் மருத்துவர் குலநாயகம் தெரிவித்ததாவது: அண்மைக் காலமாக வீதி விபத்துக்களில் பல உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இனிவரும் காலங்களில் சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக விபத்துக்களைத் தடுப்பதற்கு வடமாகாணத்தில் உள்ள அனைவரிடமும் கோருகின்றோம்.
விழிப்புணர்வு இடம்பெறும் தினத்தன்று, அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாதபடி தத்தமது வேலைகளை நிறுத்தி தங்கள் அலுவலக, வேலைத்தல வாசல்களில் கூடிநின்று வீதி விபத்துக்களால் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதுடன், முறையான வகையில் சட்டங்களை பின்பற்றுவோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.
விழிப்புணர்வின் முடிவில், அதில் பங்கு பற்றும் வட பகுதி தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளால் வீதி விபத்துக்களைத்தடுப்பதற்கு சட்டங்களை முறையாக வலியுறுத்திக் கையொப்பமிடப்பட்ட மனு யாழ். மாவட்டச் செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பிரதிகள் பிரதமர், எதிர்க் கட்சித்தலைவர், நீதி அமைச்சர், சட்ட ஒழுங்கு அமைச்சர், வட மாகாண முதலமைச்சர், வட மாகாண ஆளுநர் , பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும் – என்றார்.(வ-4,ரி7)

## பன்னாட்டு சமாதான தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப்.22
பன்னாட்டு சமாதான தினத்தை முன்னிட்டு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில்நேற்றுக் காலை அமைதியை நோக்கி என்ற பல் கலாசார நிகழ்வு நடைபெற்றது.
நீதி மற்றும் சமாதானத்திற்கான நிலைய அழைப்பில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார், கௌரவ விருந்தினராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் மற்றும் முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் மௌலவி சுபியான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (வ-32)

## ஐவர் கைது

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய 5 பேரை நேற்று மதியம் கைது செய்ததாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.
கைதானவர்களில் களுத்துறைப் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரும் அடங்கியுள்ளார். பொலிஸாரைக் கண்டதும் 5 பேரும் தப்பியோடி யுள்ளனர். ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியமை, முன்னுக்கு பின் முரணான வகையில் தகவல்களை வழங்கியமை தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
(வ-4,107)

# குடும்பப் பெண்ணை ஏமாற்றி 80 பவுண் நகைகள் மோசடி

### *கைதான இரு பெண்களுக்கு விளக்கமறியல்*

யாழ்ப்பாணம், செப். 22
குடும்பப் பெண் ஒருவரை ஏமாற்றி 80 பவுண் தங்க நகைகளை மோசடி செய்த குற்றச்சாட்டில் 2 பெண்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் மன்று உத்தரவிட்டது.
புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த குடும்பப் பெண்ணிடமே இவ்வாறு மோசடி செய்யப்பட்டது. திருமண வீட்டுக்குச் செல்வதற்கு அணிந்துவிட்டுத் திருப்பித் தருவாகக் கூறியே 2 பெண்களும் நகைகளைப் பெற்றுள்ளனர். பின்னர் அந்த நகைகளை அவர்கள் திருப்பிக் கொடுக்கவில்லை.
நகைகளைக் கேட்கும் போதெல்லாம், அவற்றை அடகு வைத்துள்ளதாகவும், அந்த நகைகளை எடுப்படுதற்கு பணம் இல்லை எனவும் கூறியதோடு, சகல நகைகளையும் மீட்டுத் தருவதாகக்கூறி மேலும் பல தடவைகள் நகைகளை 2 பெண்களும் பெற்றதாக பாதிக்கப்பட்ட பெண் குற்றஞ்சாட்டினார்.
இவ்வாறாக 80 பவுண் நகைகளை 2 பெண்களும் பெற்றுள்ளனர். அவற்றை உரியவரிடம் மீள ஒப்படைக்காது விட்டுள்ளனர்.
இந்தநிலையில் திருமண வீடு ஒன்றுக்குச் செல்வதற்காக பாதிக்கப்பட்ட பெண் வீட்டார் தயாரான நிலையில் நகைகள் எங்கே என்று அவரது கணவன் கேட்டபோதே, சம்பவங்கள் தெரியவந்தன. பாதிக்கப்பட்ட பெண் என்பதனால் 2 பெண்களும் சேர்ந்து மோசடி செய்ததனை கணவன் உணர்ந்து சுன்னாகம் பொலிஸில் முறையிட்டார்.
அதனையடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார், குற்றஞ்சாட்டப்பட்ட 2 பெண்களையும் கைது செய்து மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அவர்கள்கைதுசெய்யப்பட்டதனையடுத்து, அவர்களது உறவினர்கள் சட்டத்தரணிகள் மூலமாக மன்றில் வழக்கை எதிர்கொண்டனர். அந்தப் பெண்ணுக்கு உரிய நகைகளை பகுதி பகுதியாகச் செலுத்துவதாக அவர்கள் சார்பில் கூறப்பட்டது.
பாதிக்கப்பட்ட பெண்ணிடம் மோசடி செய்த விவகாரம் தொடர்பில் 2 பெண்களையும் நீதிவான் கடுமையாக எச்சரித்தார். அதன் பின்னர் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் [illegible] உத்தரவிட்டார்.
(வ-4,107)

# வடக்கு ரயில் கடவை ஊழியர்கள் முதலமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

கிளிநொச்சி செப் 22
கொழும்பு அரசின் போக்குவரத்து அமைச்சரின் உறுதிமொழிகள் வழங்கப்பட்ட காலத்திற்குள் நிறைவு செய்யப்படாத நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் மகஜர் ஒன்றினை கையளித்தனர் வடக்கு மாகாண ரயில் போக்குவரத்து கடவை காப்பாளர்கள் ஒன்றியத்தினர்.
கடவை காப்பாளர்களாக இருப்பவர்களுக்கு மாதாந்தம் 7,500 ரூபா சம்பளமே வழங்கப்படுவதாகவும் தற்போதுள்ள பொருளாதார நிலையில் இந்தச் சம்பளம் போதாது என தெரிவிக்கப்பட்டது. எனினும் அது தொடர்பில் எவருமே கவனமெடுக்காத நிலையில், கடந்த 7ஆம் மாதம் வடக்கு மாகாணம் முழுவதும் ஒன்றிணைந்து மதவாச்சியில் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.
இந்தநிலையில் ரயில் கடவைக் காப்பாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் பத்திரம் ஒன்றை முன்வைத்து உள்ளதாகவும் தீர்வை விரைவில் பெற்றும் தருவதாகவும் போக்குவரத்து அமைச் சர் உறுதிமொழி வழங்கினார். அத்துடன் அது தொடர்பில் எழுத்து மூலமும் அறிவித்த பின்னர் வடக்கு ரயில் கடவைக் காப்பாளர்கள் தமது போராட்டத்தை கைவிட்டனர்.
கடந்த மாதம் துறைசார் திணைக்கள அதிகாரிகளுடன் போக்குவரத்து அமைச்சர் கலந்துரையாடியிருந்தார். எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் செய்ய உங்களுக்கு அதிகாரம் இல்லை. உங்களை தற்காலிகமாகத்தான் சேவையில் வைத்துள்ளோம். ஊழியர் அற்ற தானியங்கிக் கடவைகள் அமைக்கப்படவுள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் அச்சுறுத்தும் பாணியில் தெரிவித்தாக வடக்கு ரயில் கடவைக் காப்பாளர்கள் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ரயில் கடவை உழியர்களின் பிரச்சினை தொடர்பாக கேட்டபோது, 14 நாட்களுக்குள் தீர்மானம் பெறப்படும் என போக்குவரத்து அமைச்சர் தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த காலப் பகுதி நிறைவடைந்த நிலையிலும், சம்பள உயர்வு தொடர்பாக தாம் 2 வருடங்களாக தெரிவித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என்று வடக்கு மாகாண ரயில் கடவை காப்பாளர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (வ- ரி3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் ரயர்களைப் போட்டு எரித்த இளைஞன் கைதானார்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ். நகர முட்டாஸ் கடைச் சந்தியில் காப்பற் வீதியில் நேற்றுக் காலை ரயர்கள் போட்டுக் கொளுத்தப்பட்டன. அவ்வாறு கொளுத்திய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்ததாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர் மனநலம் பாதிக்கப்பட்டதாக விசாரணையில் கூறப் பட்டதனால் அவரை மருத்துவ சோத னைக்காக வைத்தியசாலையில் சேர்த் துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இளைஞர் ஒருவர் சந்திகள் தோறும் உடைந்த போத்தல்கள், ஓடுகளைக் கொட்டுவதாகத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்குச் சென்று அந்த இளை ஞனைக் கைது செய்தோம். அவர் ரயர்களை வீதியில் போட்டு அவற் றுக்குத் தீ மூட்டியுள்ளார். ரயர்கள் வீதி யில் எரிந்தன. பின்னர் அவை அணைக்கப்பட்டன. அவர் விசார ணைக்குட்படுத்தப்பட்டார்.

யாழ். நகரில் தங்கியிருந்து வேலை செய்பவர் என்றும், முல்லைத்தீவின் உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்கவர் என்றும் ஆரம்ப விசாரணையில் தெரியவந் துள்ளது என்று பொலிஸார் தெரிவித் தனர். (வ-4.101.106)



# அதிபர் சேவை முரண்பாடுகளுக்கு தீர்வை வலியுறுத்திப் போராட்டம்





கொழும்பு, செப். 22

இலங்கை அதிபர் சேவைக் குள் பலர் உள்வாங்கப்பட்ட போதும், அதிபர் சேவையின் முரண்பாடுகளுக்கு இன் னும் தீர்வு காணப்படவில் லை என்று குற்றஞ்சாட்டிய இலங்கை ஆசிரியர் சங்கம், அனைத்துத் தரத்திலும் உள்ள அதிபர்களின் பிரச் சினைகளுக்குத் தீர்வை விரைவில் முன்வைக்கு மாறு வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் நடத்தப்பட்டது. 500 க்கும் மேற் பட்டோர் அதில் கலந்து கொண்டனர் என்று சங்கம் தெரிவித்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் தமக் கான தீர்வை வலியுறுத்தி ஜனாதிபதி அலுவலகம் நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். இதன்போது லோட்டஸ் வீதி யில் வைத்து பொலிஸார் ஊர்வலத்தை வழிமறித்தனர். அதனால் போக்கு வரத்துப் பாதிக்கப் பட்டது.

வழிமறிக்கப்பட்ட தன் பின்னர் அதி பர்களுக்கும் பொலி ஸாருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் தொழிற் சங்கஉறுப்பினர்கள் ஐவரைப் பொலிஸார் தமது வாகனத்தில் ஜனாதிபதி அலுவல கத்துக்கு ஏற்றிச் சென்றனர். அங்கு வைத்து ஜனாதிபதி யின் மேலதிக செய லாளர் சுனந்த காரியப்பெருமவுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித் தார்.

இலங்கை அதிபர் சேவையில் அனைத்துத் தரங்க ளிலுமுள்ள அதிபர் கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தொழிற் சங்க உறுப்பினர்க ளால் தெளிவு படுத் தப்பட்டது. அதனை உறுதிப்படுத்தும் எழுத்துமூல ஆவ ணமும் வழங்கப் பட்டது. அதிபர்க ளின் பிரச்சினை களை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதுடன் - மேற்கொள் ளப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக நாளை அறிவிப்பதாகவும் விரைவில் கல்வி அமைச்சருடனான பேச்சுவார்த் தையை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினை களுக்கு தீர்வுகாண முயல்வதாகவும் மேலதிக செயலாளர் உறுதியளித்தார். அதன் பின்னர் தமது போராட்டம் நிறுத் தப்பட்டது என்றும் ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்தார்.

(வ-4)

காணி விற்பனைக்கு
கொக்குவில் மேற்கு, K.K.S வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
0777 111400

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை, கொடிகாமம் வீதியில் 'வருவன்' என்ற இடத்தில் (கொடிகாமத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில்) 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பயன்தரு மரங்கள் மற்றும் வீடும் மின்சார வசதிகளுடன் உண்டு.
077 204 5270

கலர் பிரதியாக்கம்
Colour Printing
- சான்றிதழ்கள்
- புத்தக கவர்கள்
- துண்டுப்பிரசுரங்கள்
- விசிற்றிங் கார்ட்
- CD கவர், ஸ்ரிக்கர்
- அழைப்பிதழ்கள்
Colour
போன்றவற்றை உயர்தரம் வாய்ந்த பிரதியாக்கல்களாக மிகக் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள........
அச்சகத்தாரர்களுக்கு விசேட விலைக்கழிவு
MOORTHY
DIGITAL IMAGING SERVICE
021 222 1358
60/20 STANLEY ROAD, JAFFNA.

விற்பனைக்குண்டு
1 1/2 வயது நிரம்பிய மண்ணிற அல்சேசன் நாய் (Alsation Dog) விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 5177575, 077 2648969

## யாழ். மாவட்டத்திலுள்ள வீதி திருத்தத்திற்கான கேள்வி கோரல் - 2016

2016.06.14 ஆம் திகதி தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் நல்லூர் பிரதேச செயலகப்பிரிவின் அரியாலை உதயபுரம் பிரதான வீதியானது தெரிவு செய்யப்பட்டு திறந்த கேள்வி கோரப்பட்டிருந்தது. அவ்வீதியானது "I Road" செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் அதற்குப்பதிலாக உதயபுரம் பிரதான வீதியின் கிளை வீதியினை புனரமைப்பு செய்வது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் 2016.09.29 திகதிக்கு முன் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுத்து மூலமாக அறியத்தருமாறு கேட்டுக் கொள் கின்றேன்.

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

Galaxy Star
வெற்றி வாரம் 094 | திகதி 2016.09.21
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 | 11 15 18 27
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,186,600/-

அகவை 60 இல் எம் வாழ்த்துக்கள்



பொன்னுத்துரை
ஸ்ரீஸ்கந்தராசா
(ஊர்காவற்துறை பிரதேசசபை)
அவர்கள் 60 ஆவது அகவையில் சேவை பூர்த்தி செய்வதனை இட்டு சகல செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ்கவென இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.
அத்தான் குடும்பம்,
தம்பி குடும்பம்
547, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்
## மாகாணக் கல்வித் திணைக்களம் வடமாகாணம்

மாகாணக் கல்வித் திணைக்களப் பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1998 அல்லது அதற்கு பிற்பட்ட வாகனங்கள் (வான்) மூலதன வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு 05 மாவட்டங்களுக்கும் 13 வாகனங்களும் மற்றும் மாகாணத்திற்கு ஒன்றுமாக மொத்தம் 14 வாகனங்கள் (Van) தனித்தனியாக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ் விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை மாகாணக் கல்வித் திணைக்களம் மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு 22.09.2016- 05.10.2016 வரை அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் ரூபா 500.00 (மீள்பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2016.10.06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னராக எமக்குக்கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் (பிரதம கணக்காளர் மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்.) 021 224 2804

தலைவர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்,
மருதனார் மடம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை பிரச்சனைகளிலிருந்து
நம்மை விடுவித்து வாழ்வை வளமாக்கும்

'ஜியோபதிக் ஸ்ட்ரெஸ் ஹீலிங்'



விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட இயற்கை சக்திகளின் மூலம் தீர்வு காணலாம்.

எனர்ஜி ஸ்கேனர் மூலம் உடல் நலக் குறைபாடுகளைக் கண்டுபிடித்து தீர்வு பெறலாம்.

வீடு, மனை, வியாபார இடங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு Geopathic Stress Healing மூலம் தீர்வு பெறலாம்.

ரெய்கி தீட்சை பெற்று உடல், மனம் ஆரோக்கியத்துடன் வாழ்க்கை சிறப்பாக அமைய ஆலோசனை பெறலாம்.

* வாஸ்து பார்த்து கட்டிய பின்னும் வீட்டில் பிரச்சனைகளா?
* உடல் நலக்குறைவினால் நிம்மதியின்மையா?
* திருமணத் தடை, குழந்தையின்மை பிரச்சனையா?
* வியாபார முன்னேற்றத்தில் தாமதமா?
* குடும்ப பிரச்சனைகளால் மனதில் குழப்பமா?



Dr.A.Meenakshi M.B.B.S., D.G.O.,
International Grand Master - Reiki

நாளை யாழ்ப்பாணத்தில்
இலவச அறிமுக நிகழ்வு!

சனி, ஞாயிறு தினங்களில்
அற்புத ரெய்கி வகுப்புகள்
முன்பதிவுக்கு முந்துங்கள்!

திருகோணமலையில் ஒக். 1, 2ம்
திகதிகளில் பயிற்சி வகுப்புகள்!

முன்பதிவிற்கு:
0755674227
0752467942
email: drameenakshi@yahoo.com | Website: www.energynests.com

## பகிரங்க ஏலவிற்பனை
## மாந்தை மேற்கு பல.நோ.கூ.சங்கம் - திருக்கேதீஸ்வரம்

| | |
|---|---|
| 01. LANKA ASHOK LEYLAND LORRY | - 68 - 4452 |
| கொள்ளளவு | - 9000kg |
| ஆரம்ப பெறுமதி | - 550000.00 |
| 02. ROBER MODEL BOWZER | - 47 - 0427 |
| கொள்ளளவு | - 8000L |
| ஆரம்ப பெறுமதி | - 150000.00 |
| 03. பழைய இரும்புகள் | - 1000kg |
| 04. பழைய CHANGFA JENEROTER | - 5kv - 01 |
| உள்நுழைவுக்கட்டணம் | - 1000.00 |

கட்டணம் மீளளிப்பு செய்யப்படமாட்டாது.
பகிரங்க ஏலவிற்பனை திகதி 14.10.2016
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : மா.மே.ப.நோ.கூ.சங்கம் திருக்கேதீஸ்வரம்

**தொடர்பு: 023 205 0815/ 077 023 3474**
**தலைவர்**
**மாந்தை மேற்கு பலநோக்கு கூ.சங்கம்**
**திருக்கேதீஸ்வரம்.**

## மக்கள் வங்கி அறிவித்தல்

எதிர்வரும் 24.09.2016(சனிக்கிழமை) நடைபெறவிருந்த மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகள், சேவை நிலையங்களில் 31.07.2015 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகளின் ஏலவிற்பனையானது 25.09.2016(ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதி கிளையில்வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ் ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | ...... |
| நெல்லியடி | ...... |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2601/ 021 222 8602
தொலை நகல் : 021 222 2602

## பெயர்மாற்றம்

நடுவுத்திருத்தி, புங்குடுதீவு மேற்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட **முருகேசு இராசேஸ்வரி** ஆகிய எனது பெயரை இன்று முதல் **முருகேசு ஞானாமிர்தம்** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் முருகேசு ஞானாமிர்தம் என்றே கையொப்பமிடுவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

**முருகேசு ஞானாமிர்தம்**

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 135 Massey Ferguson உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.

**071 157 3116, 077 199 9661**

# போர் குறித்து தெளிவை ஏற்படுத்தும் எனது நூல்

## கூறுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப். 22

தாம் விரைவில் வெளியிடவுள்ள நூல், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தொடர்பான தெளிவான விளக்கத்தை வழங்கும் என்று–அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

போர் தொடர்பாக, ஒரு இராணுவ அதிகாரி அண்மையில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தொடர்புபட்ட ஏனைய பல அதிகாரிகளும்மேலும் பல நூல்களை வெளியிடலாம். ஒரு இராணுவத் தளபதி என்ற வகையில் எனது பங்கை உள்ளடக்கியதாக வெளியிடவுள்ள நூல், போருடன்தொடர்புடைய சம்பவங்கள்தொடர்பாகஇன்னும் தெளிவான விளக்கத்தைவழங்கும் –என்று தெரிவித்தார்.

முன்னதாக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதி வெளியிட்ட 'நந்திக் கடலுக்கான பாதை' நூலில் இராணுவ இரகசியங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தார்.

எனினும், தாம் எந்த இராணுவ இரகசியத்தையும் வெளிப்படுத்தவில்லைஎன்றும்– போர்தொடர்பான இரகசியங்கள் தன்னுடன் புதைகுழியிலேயே புதைக்கப்படும் என்றும்–மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணசபை
## பாவனையிலிருந்த வாகனங்களின் பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

பிரதம செயலாளர் வடக்கு மாகாணசபை அவர்களால் வட மாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களின் பாவனையிலிருந்த பின்வரும் வாகனங்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| தொ.இல | வாகன இல | வகை | உற்பத்தி |
|---|---|---|---|
| 01 | 21 - 3604 | முச்சக்கர வண்டி | Bajaj |
| 02 | NPQP 0029 | முச்சக்கர வண்டி | Atul |
| 03 | NPJO 6123 | முச்சக்கர வண்டி | Minidor |
| 04 | 49 - 2335 | நான்கு சில்லு உழவு இயந்திரம் | Benye |
| 05 | 37 - 9160 | நான்கு சில்லு உழவு இயந்திரம் | H.M.T |
| 06 | 37 - 9122 | நான்கு சில்லு உழவு இயந்திரம் | H.M.T |
| 07 | 124 - 8840 | மோட்டார் சைக்கிள் | Honda |
| 08 | NP HX 6013 | மோட்டார் சைக்கிள் | TVS |
| 09 | EP GV 2718 | மோட்டார் சைக்கிள் | Yamaha |
| 10 | EPMI 6166 | மோட்டார் சைக்கிள் | LML |
| 11 | EPMI 6091 | மோட்டார் சைக்கிள் | LML |
| 12 | EPMI 6206 | மோட்டார் சைக்கிள் | LML |
| 13 | EPMI 6068 | மோட்டார் சைக்கிள் | LML |
| 14 | 143 - 3780 | மோட்டார் சைக்கிள் | TVS |

**ஏலவிற்பனை நடைபெறும் இடம் : நாவற்குழி அரச உணவுக்களஞ்சியத்தில் உள்ள வடமாகாண சபையின் தற்காலிக வாகனத் தரிப்பிடம்.**

**காலம்: 27.09.2016**
**நேரம்: முற்பகல் 10.30**

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் மேற்படி வாகனங்களை 22.09.2016 திகதி முதல் மேற்படி வாகனத் தரிப்பிடத்தில் பார்வையிடலாம்.

**ஏலவிற்பனை நிபந்தனைகள்**

01. ஏலவிற்பனையில் பங்குபெற விரும்பும் கேள்விதாரர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் ஒன்றை(அடையாளஅட்டை / கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம்) சமர்ப்பித்தல் வேண்டும்.
02. ஏல விற்பனையில் சித்தி பெறும் கேள்விதாரர் அதற்குரிய பணத்தின் 50% இனை உடனடியாகக் காசாகச் செலுத்த வேண்டும். மீதிப்பணம் ஏலவிற்பனைத் திகதியிலிருந்து இருநாள்களுக்குள் முழுமையாகச் செலுத்தப்படல் வேண்டும்.
03. பணம் முழுமையாகச் செலுத்தப்பட்டு இரு நாள்களுக்குள் உரிய ஆவணங்களைப் பெற்று உரிய வாகனத்தினை மேற்குறித்த வாகனத் தரிப்பிடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
04. இவ்விடயம் தொடர்பாக பிரதம செயலாளரின் தீர்மானமே இறுதியானது.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்,
வடமாகாணம்
22.09.2016

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், செப்.22

'சரசோதிமாலை நூல்'அறிமுகவிழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார். (ற–ரி)

விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
DMI COMPUTER EDUCATION
புதிய பிரிவுகள் ஆரம்பம்

Dip.in Information Technology
Diploma in Office Automation
Dip. in Pre-Press Desktop Publishing
Diploma in Pc Applications
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Video Production & Multimedia
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Master Dip.in Mulitmedia & Animation
#Auto CAD, C++, JAVA#

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
Diploma in English

IELTS
•Unique Test Tips
•Latest course Materials
IELTS Life Skills



புதிய பிரிவுகள் ஆரம்பம்
24/09/2016 (Sat) - 9.30 am.
26/09/2016 (Mon) - 9.30 am.

(ISO 9001:2008) CERTIFIED

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19,A9 வீதி, (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியப் படை சாவுக்கு மைத்திரிபால இரங்கல்

கொழும்பு, செப். 22
ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 18 இந்தியப் படையினர் கொல்லப்பட்டமைக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தொலைபேசி மூலம் வருத்தம் தெரிவித்தார்.

ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி, நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

இதன்போது, ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் ஊரி என்ற இடத்தில் கடந்த 18ஆம் நாள் அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலில் 18 இந்தியப் படையினர் கொல்லப்பட்டமைக்கு இந்தியப் பிரதமரிடம் ஜனாதிபதி இரங்கலைத் தெரிவித்தார்.(து)

# அவன்காட் மீளாய்வு மனு விசாரணைக்கு அனுமதி

அவன்காட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி மற்றும் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்ணான்டோ ஆகியோரை பிணையில் விடுவித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. 355 இலட்சம் ரூபா மோசடி வழக்கில் அவன் காட் பணிப்பாளர் நிசங்க சேனாதிபதி மற்றும் அவன்காட் நிறுவனத்தின் இராணுவ தொடர்பாளர் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஓய்வு பெற்ற மேஜர் பாலித பெர்ணான்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை நேற்றுக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் நிசங்க சேனாதிபதி மற்றும் ஓய்வு பெற்ற மேஜர் பாலித பெர்ணான்டோவுக்கான பிணை வழங்குவதை எதிர்த்து மனுத் தாக்கல் செய்யப்பட்டதால் இந்த மனு தொடர்பில் சந்தேக நபர்கள் இருவருக்கும் அழைப்பாணை அனுப்புமாறு நீதிவான் எம்.டீ.சி.எஸ் மொராயஸ் உத்தரவிட்டார். எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னதாக பிரதிவாதிகள் தங்களது ஆட்சேபனைகளை வெளியிட முடியும் என்றும் நீதிவான் அறிவுறுத்தினார். (து)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
22.09.2016



செல்வி தரன்சி ஜொனினா பெர்னாண்டோ

திரு.திருமதி வின்சன் அஞ்சலின் தம்பதியின் சிரேஷ்ட புதல்வி செல்வி தரன்சி ஜொனினா பெர்னாண்டோ இன்று (22.09.2016) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
செல்வி ஜொனினாவை அவரது அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார் மற்றும் மாமிமார், அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

திரு. வின்சன்,
இல.15, அடப்பன் வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.



யாழ். போதனா வைத்தியசாலை
தூய ஆரோக்கிய அன்னையின்
வருடாந்த திருவிழா
25.09.2016
"அன்னையின் ஆன்மீகத்தில் அர்ப்பணத்தை வாழ்வாக்குவோம்"

| | |
|---|---|
| 22.09.2016 வியாழக்கிழமை (கொடியேற்றம்) | "இறை இரக்க ஆண்டு கடந்தாலும் தொடரப்படவேண்டிய விசுவாச வாழ்வு" 2 திமொத்தேயு 2 : 1-13 லூக் 15 : 1-10 |
| 23.09.2016 வெள்ளிக்கிழமை | "பிறரன்புச் செயல்களில் வாழப்பட வேண்டிய உண்மையான இறைபிரக்கம்" கலாத்தியர். 6 : 1-10 லூக். 16 : 19-31 |
| 24.09.2016 சனிக்கிழமை நற்கருணைக் கொண்டாட்டம் | "சுமைகளைக் குறைத்து சுகம்தனைத் தரும் இறைபிரக்க விருந்து" 1 கொரிந்தியர் 11 : 23-32 யோவான் 6 : 51-58 (மாலை – ஆராதனையும், நலம்பெறும் வழிபாடும்) |
| 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை (அன்னையின் திருவிழா) | "அவர் சொல்வதை செய்திட அன்னையை மாதிரியாய் கொள்வோம்" எசாயா 66 : 10-14 எ.பே. 1 : 3-6, 11-12 யோவான் 2 : 1-11 |

* திருவிழாவுக்கான ஆயத்த நாள்களில் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.
* நற்கருணைக் கொண்டாட்ட திருப்பலி மதியம் 12:00 மணிக்கும் மாலை சிறப்பு வழிபாடு 4.30 மணிக்கும் நடைபெறும்.
* திருநாள் திருப்பலி காலை 7.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.
* ஆயத்த நாள்களின் சிறப்பு வழிபாடுகளிலும் திருவிழாத் திருப்பலியிலும் முழுமையாகப் பங்குபற்றி ஆரோக்கிய அன்னையின் ஆசீர்பெற அன்போடு அழைக்கின்றோம்.

மறையுரைஞர் – அருட்பணி யா.சதீஸ்குமார் (றமேஸ்) அ.ம.தி.அடிகளார்.
ஆன்ம குருவும், வைத்தியசாலை பணியாளர்களும், நலன் விரும்பிகளும்.

A/L இன் பின்னர்



edexcel PEARSON London South Bank University UNIVERSITY OF WOLVERHAMPTON CIOB RICS

INTAKE NOW ON

Sharpen your skills with BCAS today for Colourful Careers tomorrow

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யும் வாய்ப்பு

UGC Recognized TVEC Approved

ENG ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

BM MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

IT COMPUTING & SYSTEM DEVELOPMENT

BMS BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY

LLB LAW

QS QUANTITY SURVEYING

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna

18 YEARS
ISO 9001:2008

HOTLINE : 021 2219910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் வீரகத்தி
சுப்பிரமணியம்

தோற்றம் 26.09.1961
மறைவு 25.08.2016

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.09.2016) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 24.09.2016 சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கன்னிநகர்,
கைதடி.
(கே/4682)(11.17)
குடும்பத்தினர்.

## 55 ஆம் ஆண்டு நினைவு நாள்



22.09.2016

நீர்வேலி
அமரர்
முகாந்திரம் முதலியார்
அ. அத்தியார் (J.P)
மலர்வு 27.08.1887
நினைவலையில் 22.09.1961

சிந்தையும் சொல்லும்
செயலும் ஒன்றியிருந்தார்
இவரை நினைவு கூர்வோம்.

"அத்தி அகம்"
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி.
(J.4745)(13.18)
திரு.திருமதி
ந.சிவகுமாரன்
- குடும்பம்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
கமலாசனி
(ராணி)
தில்லைநாதன்



மண்ணில் 06.05.1953
விண்ணில் 06.09.2012

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
ஆண்டுகள் நான்கு ஆனதே!
அன்புத் தெய்வமே உமைப் பிரிந்து
கண்முன்னே உங்கள் உருவம் கண்ணீரில் கரைகிறது
பாசத்தின் பொருளாய் இருந்து எமை வழி நடத்திய
தெய்வத்தின் தெய்வமே எத்தனை வருடங்களானாலும்
உமை மறவோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய
கொண்டலடி விநாயகரை நித்தமும் வேண்டுகின்றோம்.

44/8, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.08.2016 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்
அமரர்
செல்லையா கந்தையா
(கந்தராசா)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.09.2016) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
குடும்பத்தினர்.

# புதுக்குடியிருப்புப் படுகொலை நினைவு தினம் நேற்று கிழக்கில்

கொழும்பு, செப்.22

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 26ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டுப் புதுக்குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுக் காலை 7.30 மணி அளவில் விசேட பூசை வழிபாடுகளுடன் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்துடன், உயிரிழந்தவர்களின் நினைவாக புதுக்குடியிருப்பு கடற்கரைப் பகுதியில் நிறுவப்பட்ட தூபியில் நேற்றுக் காலை 8.00 மணிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதேச மக்களும் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி புதுக்குடியிருப்புக் கிராமத்துக் குள் புகுந்த ஊர்காவற்படையினர் அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டும், வாளால் வெட்டியும் கொன்று குவித்தனர்.

இதில் சிறுவர்கள், பெரியவர்கள், வயது முதிர்ந்தவர்கள் என 17 பேர் உயிரிழந்ததுடன் 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் 26ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்று, உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி புதுக்குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

அத்துடன், பாலர் பாடசாலையில் இரத்த தான நிகழ்வு நடைபெற்றது. உயிரிழந்தவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவுத் தூபியில் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் நினைவுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி. துரைராசசிங்கம், மற்றும் பிரதித் தவிசாளர் இ.பிரசன்னா, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கோ. கருணாகரம், மா. நடராசா, இரா. துரைரெத்தினம், ஞா. கிருஷ்ணபிள்ளை மற் றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், கிராமப் பெரியோர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (து)

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலி 1 : 21

## 45 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி ஆராதனை அழைப்பும்



கடந்த 06.08.2016 சனிக்கிழமை அன்று
கர்த்தருக்குள் நித்திரையடைந்த
அமரர் பேரின்பம்
காந்தரூபன்
(பணியாளர். யாழ்.ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)
தோற்றம் 10.12.1973
மறைவு 06.08.2016

அன்னாரின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும்படியாக இன்று (22.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உடுவில் தெற்கு சத்தியபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நன்றி ஆராதனையும், அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் தெற்கு, சத்தியபுரம்.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 02.10.2015
வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவி
திருமதி பரிமளம்
கனகசபை

தோற்றம் 27.10.1927
மறைவு 02.10.2015

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று (22.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுப்பிரமணியம் கிறைண்டிங் மில்,
நாவற்குழி, கைதடி.
(கே/4740)(11.17.18.)
குடும்பத்தினர்.

## 90 ஆவது பிறந்தநாளும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அமரர்
மனோன்மணி
சுந்தரம்
(நாரந்தனை)



தோற்றம் 16.09.1926
மறைவு 23.08.2016

எமது அன்பின் தெய்வமே எம்மை விட்டுப்பிரிந்து
ஒரு மாதமானாலும் உங்கள் இன்முகமும்
அன்பான பேச்சும் பாசமுள்ள இணைப்புகளும்
கருணை உள்ளமும் அமுதசுரபியான விருந்தோம்பலும்
எங்கள் மனதைவிட்டு அகலவில்லையம்மா!

உங்கள் 90 ஆவது பிறந்தநாளுக்கு முன்பாக இறைவனடி சேர்ந்தீர்கள். எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

82/22, செட்டித்தெரு,
நல்லூர்.
குடும்பத்தினர்.

# நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

அச்சுவேலி, செப்.22

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், பழைய மாணவர்களான திருமதி பாலசவுந்தரி சிவகுமார், ஆ.இராசநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர். நிறுவுநர் நினைவுப் பேருரையை ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர் த.ந.பஞ்சாச்சரம் வழங்குவார். (ற-11)

# மாணவர் விவரங்களை உறுதிப்படுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.22

கொக்குவில் இந்துக்கல்லூரியில் 2015ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 1ஆம், 2 ஆம் தடவையாக பரீட்சைக்கு தோற்றிப் பல்கலைகழகத்துக்குத் தெரிவான மாணவர்களின் பெயர் விவரங்கள் பாடசாலை பெயர்ப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. குறித்த மாணவர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள பரிசுத் தினத்தில் பரிசில் வழங்கப்படவுள்ளதால் அவர்கள் தங்களது பெயரையும், துறைகளையும் எதிர்வரும் 2 7ஆம் திகதிக்கு முன் உறுதி செய்துகொள்ளவேண்டும் என்றுகல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் கேட்டுள்ளார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதிக் கள்ளை விற்க வன்னியில் அனுமதி கிடையாது

## மாவட்ட சீவல் தொழிலாளர் குற்றச்சாட்டுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் விளக்கம்

முல்லைத்தீவு, செப்.22
முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எனது அனுமதி இன்றியே தென்பகுதிக் கள்ளை கொள்முதல் செய்து விற்பனை செய்கின்றன.
இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க.
மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கள் போத்தல்களில் அடைப்பதற்கு போதிய அளவு இருப்பில் இருந்தும் அதை விற்பனை செய்யாது தென்னிலங்கைக் கள்ளை விற்பனை செய்வதிலேயே பொது முகாமையாளர்களும் தலைவர்களும் விரும்புகின்றனர். அதற்கு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார். இதனால் சீவல் தொழிலை மட்டும் நம்பியிருக்கும் எங்கள் குடும்பங்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது.- என்று முல்லைத்தீவு மாவட்ட சீவல் தொழிலாளர்கள் குற்றச்சாட்டினர்.

> தென்னிலங்கை கள்ளை விற்பனை செய்வதிலேயே பொது முகாமையாளர்களும் தலைவர்களும் விரும்புகின்றனர். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அதற்கு அனுமதி வழங்கியுள்ளார். சீவல் தொழிலை மட்டும் நம்பியிருக்கும் எங்கள் குடும்பங்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது என்று தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

தென்பகுதிக் கள்ளை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கு நான் எந்தவித அனுமதியும் வழங்கவில்லை - என்று தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுபசிங்க.
முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை. மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம், முல்லை.கிழக்கு பனை தென்னை அபிவிருத்திச் சங்கம் தவிர்ந்த ஏனைய சங்கங்களிடம் விற்பனைக்கு கள் இல்லை. சங்கங்கங்களின் துணை விதிக்கு அமைவாக வியாபார நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். கள்ளைத்தான் விற்க வேண்டும். மரக்கறியையோ, மீனையோ நாங்கள் விற்பனை செய்ய முடியாது என்று என்னுடன் விவாதிக்கிறார்கள். சங்கத் துணை விதியின் அடிப்படையிலேயே தென்பகுதிக் கள்ளை கொள்முதல் செய்து விற்பனை செய்கிறார்கள். நான் எந்தவித அனுமதியும் அவர்களுக்கு வழங்கவில்லை.- என்று அவர் குறிப்பிட்டார்.
(ற-5-ரி7)

# கால்வாய் அணைச் சுவர் இடிந்துள்ளதால் ஆபத்து

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கொழும்புத்துறை மக்கள் கோரிக்கை



கொழும்புத்துறை, செப்.22
கொழும்புத்துறை வீதியில் உள்ள யோகர் சுவாமிகள் சமாதிக் கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள கால்வாயின் அணைச் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.
இலந்கைக்குளத்தில் இருந்து கடலுக்கு நீர் வடிந்தோடும் பிரதான கால்வாயின் பகுதிகளும் சேதமடைந்துள்ளன. வீதியில் பயணிக்கும் வாகனங்கள் கால்வாய்க்குள் கவிழும் ஆபத்து உள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் பலமுறை உரியவர்களிடம் முறையிடப்பட் டது. அவர்கள் கவனம் எடுக்கவில்லை. மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
இதுகுறித்து எந்தவிதமான முறைப்பாடும் எமக்குக் கிடைக்கவில்லை. இது தொடர்பில் கவனம் எடுக்கப்படும். சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
(ற-ரி,135)

# கிளி. மாவட்ட முதியோர்கள் அநுராதபுரத்துக்கு பயணம்

## மதங்களுக்கு இடையிலான நல்லுறவு பேணும் அமைப்பின் ஏற்பாட்டில்

கிளிநொச்சி, செப்.22
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முதியோர், மாற்றுத் திறனாளிகள் 17 பேர் இன்று அநுராதபுரம் செல்லவுள்ளனர். அநுராதபுரத்தைச் சேர்ந்த மதங்களுக்கு இடையிலான நல்லுறவு பேணும் அமைப்பு அவர்களை அங்கு அழைத்துச் செல்கின்றது.
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் உருத்திரபுரம், சிவநகர் கிராமங்களைச் சேர்ந்த 12 முதியோர்களும், 5 மாற்றுத் திறனாளிகளும் அனுராதபுரம் செல்லவுள்ளனர். அவர்களுடன் மாவட்டத்தைச் சேர்ந்த இந்து, கிறிஸ்தவ மத குருக்களும் செல்லவுள்ளனர்.
இன்று பிற்பகல் கிளிநொச்சியில் இருந்து புறப்படும் குழுவை மதங்களுக்கு இடையிலான நல்லுறவைப் பேணும் அமைப்பு அநுராதபுரம் கதிரேசன் ஆலயத்தில் வரவேற்கும். அந்தப் பகுதியில் உள்ள முஸ்லிம், சிங்கள மக்களின் வீடுகளில் அவர்கள் தங்க வைக்கப்பட்டு நாளை நல்லுறவுக் கலந்துரையாடல்கள், கிராமிய நல்லுறவுக் கலந்துரையாடல்கள் நடத்தப்படும். அங்குள்ள கிராமங்களுக்கு சுற்றுலாவாகவும் அழைத்துச் செல்லப்படுவர்.
குறித்த அமைப்பினர் கடந்த ஜூன் மாதம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவநகர் கிராமத்துக்கு வந்தனர். அங்குள்ள முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங் கினர். பாடசாலையில் சிரமதானப் பணிகள் செய்தனர்.
(ற-5,9)

## எழுத்தாளர்களுக்கு ஊக்கத் தொகை

யாழ்ப்பாணம், செப்.22
நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் வசதி குறைந்த எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை தரமானதாக பதிப்புச் செய்வதற்காக உதவி செய்யும் வகையில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊக்கத் தொகையாக பதிப்புக்கு இருபதாயிரம் ரூபா வரையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
குறித்த பிரதேச எல்லைக்குட்பட்ட வசதி குறைந்த எழுத்தாளர்கள் நிதி உதவி தேவைப்படின் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கும்படி பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுள்ளார்.
(ற-ரி)

# பகலில் கதவுடைத்து காரைநகரில் திருட்டு

## பெறுமதி மிக்க இலத்திரனியல் பொருள்கள் பறிபோயின என முறைப்பாடு

பட்டப்பகலில் வீட்டுக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள், சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் காரைநகர் மணல்திட்டி பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மடிக்கணினி, சம்சுங் ஒளிப்படக்கருவி, நொக்கியா கைபேசி என்பன உட்பட 92 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டாளரால் தெரிவிக்கப்பட்டது.
காலை 7 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையே திருட்டு இடம்பெற்றுள்ளது என்று முறைப்பாட்டாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-4,107)

## போதையில் சாரத்தியம்: சாரதி அனுமதி பத்திரம் தடை

யாழ்ப்பாணம், செப். 22
மதுபோதையில் அபாயகரமான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதியின் சாரதிப் பத்திரம் 4 மாதங்களுக்குத் தடை செய்யப்பட்டது.
6 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தது மல்லாகம் நீதிமன்று.
சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸாரால் கைதான இளைஞன் நேற்று மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ற-107)

# உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் வடமாகாண சபைக்கும் வருகிறது

## ஈ.பி.டி.பியால் பிரேரணை முன்வைப்பு

உடுவில் மகளிர் கல்லூரி விவகாரத்தை வடக்கு மாகாண சபையில் விவாதத்துக்கு ஈ.பி.டி.பி.யினர் கொண்டு வரவுள்ளனர்.
வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்காக அவசர பிரேரணையாக எதிர்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. உறுப்பினருமான சி.தவராசா இந்த விடயத்தைச் சமர்ப்பித்துள்ளார்.
பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
உடுவில் மகளிர் கல்லூரியின் புதிய அதிபர் நியமனம் தொடர்பாக கல்லூரி மாணவிகளால் நடத்தப்பட்ட அமைதியான போராட்டத்தில் கல்லூரியின் சில ஆசிரியர்களும், மதகுரு ஒருவரும், வேறு வெளியாள்களும் மாணவிகள் மீது தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்தும், மிரட்டியும், தாக்குதல் நடத்தியும் உள்ளனர் என்று மாணவிகளின் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. அவற்றுக்கு ஆதாரமாகக் காணொலிப் பதிவுகளும் இருக்கின்றன.
இந்தக் கல்லூரியில் கடந்த பல வருடங்களாகப் பல சீர்கேடுகள் இருந்துள்ளன என்றும், அவை மூடி மறைக்கப்பட்டிருந்தன என்றும் தற்சமயம் முறைப்பாடுகள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாகப் பாடசாலையைச் சேர்ந்த சில ஆசிரியர்களும் (இருபாலாரும்) சில விடுதிப் பணியாளர்களும், பிறழ்வான நடத்தைகளில் ஈடுபட்டனர் என்று முறையிட்டுள்ளனர். பாடசாலை நிர்வாகம் இதனைக் கண்டும்காணாமலிருந்து தவறு செய்பவர்களுக்குத் துணை போயுள்ளது என்றும் கூறப்பட்டது.
மாணவிகளின் விடுதிகளின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாகவும் வேதனையளிக்கக் கூடிய தகவல்கள் பரவியுள்ளன. தற்போது கடமையாற்றும் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் பொருத்தமான கல்விசார் தகைமைகளைக் கொண்டிராதுள்ளனர் என்றும், தமது தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் மாணவிகள் விளங்கிக்கொள்ளும் வகையில் விரசமாகப் பயன்படுத்துகின்றனர் என்றும், ஒரு சில ஆண் ஆசிரியர்கள் ஒழுக்கப் பிறழ்வான வகுப்பறை செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.
90 சத வீதத்துக்கும் மேலாக சைவசமயத்தைப் பின்பற்றும் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில், அவர்கள் வழிபடுவதற்கு வழிபாட்டிடம் இல்லை.
இவ்வாறான முறைப்பாடுகளின் உண்மைகளை வெளிக்கொணர்ந்து உரிய நடவடிக்கைகளுக்காகப் பரிந்துரை செய்வதற்கேதுவாக முதலமைச்சர் ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, அவை தொடர்பான உண்மையை வெளிக் கொணர்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது.
(ற-5)

## அனுமதியின்றி ஆடுகள் ஏற்றிச்சென்றோர் கைது

யாழ்ப்பாணம், செப். 22
அனுமதிபத்திரம் இன்றி உரும்பிராயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஆடுகளை ஏற்றிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த ஒட்டோவை இராசவீதிப் பகுதியில் மறித்த கோப்பாய்ப் பொலிஸார், சோதனை செய்தபோது அதில் ஆடுகள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. சாரதி உட்பட்ட இருவர் கைது செய் யப்பட்டனர். ஆடுகளும், ஓட்டோவும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.
(ற-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேய்ப்புப் பணி மாநாடு 29இல்

கொழும்புத்துறை, செப்.22
யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க திருச் சபையால் முன்னெடுக்கப்படும் மேய்ப்புப் பணி மாநாடு 2016 எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை புனித பத்திரிசியார்கல்லூரியில்நடைபெறும். யாழ்.மறை மாவட்ட ஆயராக மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொறுப்பேற்ற பின்னர், அவரது ஏற்பாட்டில் 'புதிதாய் வாழ்வோம்' என்னும் தொனிப் பொருளில் நடைபெறும் முதலாவது மாநாடு இதுவாகும்.
கத்தோலிக்க மக்கள் மற்றும் குருக்களின் ஆன்மிகப் பணிகள் செயற்பாடுகள் பங்களிப்புக்களை விரிவுபடுத்தி புதுப்பித்தலுடன் கூடிய பகிர்தலுடன் புதியவாழ்வுப்பாதையில்அழைத்துச் செல்வதே மாநாட்டின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.
மூன்று நாள்கள் நடைபெறும் மாநாட்டில் பங்குத் தளங்கள் கத்தோலிக்க அமைப்புக்களின் பிரதிநிதிகள், குருக்கள், துறவிகள் உட்பட பல நூற்றுக்கணக்கான பேராளர்கள் பங்குபற்றவுள்ளனர்.
கருத்தமர்வுகள், குழு அமர்வுகள், பொதுஅமர்வுகள், விவாதங்கள் என்பன நடைபெற்று முடிவு செய்யப்படும் தீர்மானங்கள் எதிர்காலத்தில் யாழ்.மறை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற-135)



# தொண்டமானாறில் அமைக்கப்பட்ட தற்காலிக மண் பாதை அகற்றப்படும்

## வடக்கு நீர்ப்பாசன அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22
தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு ஆற்றின் குறுக்காக அமைக்கப்பட்ட தற்காலிகப் பாதை விரைவில் அகற்றப்படவுள்ளது.
எமது பொறியியலாளர்களின் மேற்பார்வையில், மண் பாதை அமைத்தவர்களே அதனை அகற்றுவார்கள்– என்று வடக்கு மாகாண நீர்பாசன அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஏற்பாட்டுக் கூட்டத்தில் தொண்டமானாறு ஊடாக மண்ணாலான தற்காலிகப் பாதை அமைக்க நீர்பாசனத் திணைக்களம் எதிர்ப்பு தெரிவித்தது.
தற்காலிகப் பாதைப் பாவனையை தவிர்க்க வேண்டும் என்றும் –400 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் தடுப்பணை புனரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் – நீர்பாசனப் பொறியியலாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.
திருவிழாவின் இறுதித் தினங்களில் தற்காலிக மண் அணை அமைக்கப்பட்டது. கொடியேற்றத் திருவிழாவில் அதிகளவிலான பக்தர்கள் கலந்து கொண்டனர் எனவும், இறுதித் திருவிழாக்களில் அதிகளவில் பக்தர்கள் கலந்து கொள்ளக் கூடும் என்றும் – தெரிவிக்கப்பட்டு, நீர்பாசனத் திணைக்களத்திடம் தற்காலிக பாதைக்கு அனுமதி பெறப்பட்டது.
திருவிழா முடிவடைந்து ஒரு வாரமாகின்றபோதும், அமைக்கப்பட்ட தற்காலிக பாதை இன்னமும் அகற்றப்படவில்லை.
விரைவில் இது அகற்றப்படும். எமது பொறியியலாளர்களின் மேற்பார்வையில்,மண்பாதையை அமைத்தவர்கள் அதனை அகற்றுவர் என்று வடக்கு மாகாண நீர்பாசன அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். (ற-5,26)

## மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம்தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
யாழ்ப்பாணத்தில்மாதனை,மாலுசந்தி, வதிரிசந்தி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, ஆகிய இடங்களிலும் – வவுனியாவில் தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும் –
மன்னாரில் பறையனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசிஆலை, மாந்தைஉப்புஉற்பத்திநிலையம், கீரிஐஸ்தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, மன்னார் வைத்திய சாலை, விசேட அதிரடிப்படை முகாம்,வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறை முகம் ஆகிய இடங்களிலும் மின்தடைப்படும். (ற-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





# அமரர் பொன்னம்பலம் இராமச்சந்திரன்

(இலங்கையின் சிறந்த சாரதிக்கான ஜனாதிபதி விருது பெற்ற (1986)
இ.போ.ச. கோண்டாவில் டிப்போ முன்னாள் சாரதி)

தாளையடியம்மனே தாராள குணமிழந்தோம்
வெள்ளைமாவடியானே வேரிழந்தோம்
காட்டுவளவானே கையிழந்தோம்
கரைந்தோடும் காலம் காட்டுவழியெமக்கு !

அன்பு கூட்டி அரவணைத்த
அன்னக்கா கருவறையின்
ஆருயிரே
மாரீசன் புயத்தானே
மாசற்ற நெஞ்சினாய்
முழுநிலவுச்சந்திரனே !
முழுமையாய் வெள்ளுடுத்தி
மூன்று குறி நெற்றியுடன்
முகமலர்த்தி
மலைப் பணியைத் தலை சுமந்து
மனதிருத்தி
முறையாய் முடித்து விடும் மேதாவி.

மௌனமாய்ப் படர்ந்த
மா புற்று நோய் கூட
மேனி வதைக்காமல்
மரியாதை தந்ததுவோ !
மூச்சு விட்ட பொழுதுகளில்
"போயிற்று வாரன்" என
முழுமையாய் விடைபெற்ற
மாரிபொழிந்த எழிலே !
முற்றத்து நிலவொளியில்
நினைவு நிழல்
உங்கள் பரம்பரைக்கு
நிலைத்திருக்கும்.

உந்தி மிதித்து ஈருருளி
உலாவந்த ஊர்த்தெருக்கள்
உசாரிழந்து கிடக்கின்றன
உட்கார்ந்து ஊர்பறைந்து
உறவிணைத்து

உடலலுப்புப் பாராது
உழைக்கும் உங்கள்
உண்மைக்கு நிகரில்லை
நிதானித்து கதை கூறும்
நிமிர்வு நடை
நேர்க்குணத்தில் வஞ்சமில்லை
பொய் நெஞ்சக்குணமெல்லாம்
வாய் பொத்தி விலகிவிடும்
உங்கள் தீ வேகும் உஸ்ணத்தில் !

பட்டப் பகலென்ன, இரவென்ன
படர்ந்த நெடும் பாதையெங்கும்
பாய்ந்தோடும் பேருந்தின்
இருக்கைக்கும் நோகாமல்
பவுத்திரமாய் சேர்த்துவிடும்
பேருதவிக் கரம் பெற்ற
பரிசு சொல்லும் பெருங்கதைகள்
பேரனுக்கும் சொல்லி வைப்போம்
பெருமையாய்!

இன்று (22.09.2016 வியாழக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராமாவில்,மீசாலை வடக்கு, மீசாலை. குடும்பத்தினர்

## கொடிகாமம் நகரில் நேற்று டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

தென்மராட்சி, செப்.22
தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் 52ஆவது படையணியின் ஏற்பாட்டில் நேற்று கொடிகாமத்தில் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் அடுத்த மாதம் 3ஆம் திகதிவரை நடத்தப்படவுள்ள டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தின் முன்னோடிச் செயற்பாடாக இது முன்னெடுக்கப்பட்டது.
காலை கொடிகாமம் பகுதியில் ஒன்றிணைந்த படையினர், சுகாதாரப் பிரிவினர், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், கூட்டுறவு ஆகியவற்றின் பிரதிநிதிகள், நகர வர்த்தகர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள் போன்ற இடங்களில் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.
கொடிகாமம் பஸ் நிலையத்தில் டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. படை அதிகாரி மற்றும் கொடிகாமம் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் அ.ஜென்சன் றொனால்ட் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, வரணி மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்கள் அதில் கலந்து கொண்டனர். சுகாதாரத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் மாலை விடுத்த அறிவிப்புக்கு ஏற்ப, பொதுமக்கள் தமது காணிகளில் காணப்பட்ட பாவனைக்கு உதவாத – டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய கழிவுப் பொருள்களை வீதியோரங்களில் வைத்திருந்தனர். அவற்றை சாவகச்சேரி பிரதேச சபை வாகனங்களும் படையினரின் வாகனங்களும் அப்புறப்படுத்தியிருந்தன. (ற-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் பொலிஸார் 69 பேர்

## மாவட்ட செயலகம் தகவல்

முல்லைத்தீவு, செப்.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 7 பொலிஸ் நிலையங்களில், 5 பொலிஸ் நிலையங்களில் மட்டும் தமிழ்மொழி மூலமான 69 பொலிஸார் கடமையாற்றுகின்றனர்.

மல்லாவி பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி மூலமான 27 பொலிஸாரும், மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி மூலமான 22 பொலிஸாரும், புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி மூலமான 10 பொலிஸாரும், முள்ளியவளை மற்றும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி மூலமான தலா 5 பொலிஸாரும் கடமையாற்றுகின்றனர். இந்த விவரங்கள் மாவட்ட செயலகத்தின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. குறித்த தரவுகள் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் மாவட்ட செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட முல்லைத்தீவு, வெலிஓயா பொலிஸ் நிலையங்களின் தரவுகள் மாவட்ட செயலகத்துக்கு வழங்கப்படவில்லை.

மாவட்ட பொலிஸ் நிலையங்களில் மற்றொரு முக்கிய பிரச்சினையாகக் கருதப்படும் பெண் பொலிஸார் தொடர்பான விவரங்களும் வழங்கப்படவில்லை.

(ற-5,101)

# கட்டைக்காட்டில் சிக்கியது கோடா

## 15 வயதுச் சிறுவனும் கைது

கிளிநொச்சி, செப்.22

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் 12 கோடா பரல்கள் தருமபுரம், கட்டைக்காட்டில் கைப்பற்றப்பட்டன. 15 வயதுச் சிறுவன் ஒருவன் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டான். இது தொடர்பில் மேலதிக விசாரணை கள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு அந்த இடத்தைச் சுற்றி வளைத்தது. கோடா பரல்கள் கைப்பற்றப்பட்டன. சிறுவன் கைது செய்யப்பட்டான். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் யார் என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி3)

# தெல்லிப்பழை வைத்தியசாலை பிணவறை மூடப்பட்ட நிலையில்

## மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்படாமையே காரணம்

யாழ்ப்பாணம், செப்.22

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பெரும் நிதிச் செலவில் அமைக்கப்பட்ட பிணவறை உபயோகிக்கப்படாது மூடப்பட்டுள்ளது. அதனால் தேவையற்ற அலைச்சல்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது என்று பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தேவையான மருத்துவ உபகரணங்களும், தளபாடங்களும் வழங்கப்படாதுள்ளதாலேயே பிண அறையை உபயோகிக்க முடியாதுள்ளது என்று வைத்தியசாலைத் தரப்பால் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் - வடக்கு மாகாண சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட வைதியசாலைகளில் முதல் தர வைத்தியசாலையாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை காணப்படுகின்றது. வைத்தியசாலையில் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவு, உள நல சிகிச்சைப் பிரிவு என இரு அதி சிறப்புப் பிரிவுகள் இயங்குகின்றன. தெற்கில் மகரகமவுக்கு இணையாக வடக்கில் இந்த வைத்தியசாலை உருப்பெற்று வருகின்றது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் புற்றுநோய், உளவியல் கற்கைகளுக்கான போதனா வைத்தியசாலையாகவும் இந்த வைத்தியசாலை திகழ்கின்றது.

இந்த வைத்தியசாலையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இல்லை என்றும், பிண அறை இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டதால் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட செலவில் பிண அறை நிர்மாணிக்கப்பட்டது. எனினும் அது இன்னமும் உபயோகத்துக்கு விடப்படவில்லை. இறப்பு சம்பவிக்கும்போது இறப்பு விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையே தற்போதும் காணப்படுகின்றது. இறப்பு விசாரணை அதிகாரி ஒருவர் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட போதும் அவர் பொது மருத்துவ விடுதியில் கடமையாற்றுகின்றார் என்று மக்கள் சுட்டிக் காட்டினர்.

"மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை. அதுவே பிண அறை இன்னமும் உபயோகத்துக்கு விடப்படாமைக்குக் காரணம்" - என்று தெரிவித்தார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் யோ.திவாகர்.

"நான் ஒரு மாதத்துக்கு முன்னரே வைத்திய அத்தியட்சகராகக் கடமையேற்றேன். நான் வரும்போது இறப்பு விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தற்போது பொது மருத்துவ விடுதியில் கடமையாற்றுகின்றார். பிணவறையை உபயோகத்துக்கு விடவேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள், தளபாடங்களை சுகாதாரத் திணைக்களம் இதுவரை வழங்கவில்லை. எனது முயற்சியால் சிற்றூழியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் இது தொடர்பான பயிற்சிகளைப் பெறுகின்றனர். பிண அறையைத் திறப்பது குறித்தும் அதற்கான போக்குவரத்துப் பாதை அமைப்பது குறித்தும் நான் பல தரப்பினருடன் பேசி வருகின்றேன்"- என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-25, 36)

இதோ மிக விரைவில் வெளிவரவுள்ளது

சேற்றில் பூத்த தாமரை



இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஊடகங்கள் பல இணைந்து பெருமையுடன் வழங்கும் மிகச் சிறிய வயதில் மிகச் சிறந்த பத்து நூல்களை வெளியிட்டு வடமாகாணத்திற்குப் பெருமை சேர்த்த

"பூநகரி இளம் கண்ணதாசன்"

(நற்குணம் தயான்)

அவர்களின் கைவண்ணத்தில் உருவான 11 ஆவது நூலான

" சேற்றில் பூத்த தாமரை "

என்னும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் மாணவர்களுக்கான பாடநூல்களின் வினாவிடைகள் மற்றும் வடமாகாணம் பற்றிய பாரியதோர் எடுத்துக் காட்டாக இம்முறை இந் நூல் மிகப் பிரமாண்டமாக விரைவில் வெளிவரவுள்ளது.

இந் நூலுக்கு தங்களின் ஆக்க பூர்வமான உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பூநகரி, கிளிநொச்சி,
வடமாகாணம்

எஸ். என். தயான்
எழுத்தாளன்
076 852 9157

குறிப்பு: இந் நூல் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவப் புலனாய்வு பணியகத்தின் வீழ்ச்சி நாட்டுக்கு பேராபத்து

## எச்சரிக்கிறார் கமால் குணரத்ன

கொழும்பு, செப். 22
இலங்கையின் முதன்மையான புலனாய்வுச் சேவையான இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் வீழ்ச்சியைத் தடுக்காவிடின், நாடு கடுமையான விலையைக் கொடுக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார் சிறிலங்கா இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன.

ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

உயர்மட்ட வழக்கு ஒன்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு லெப்.கேணல் அதிகாரிகள் உள்ளிட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தீவிரமான கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மரபு ரீதியான இராணுவ அச்சுறுத்தலை நாடு எதிர்கொள்ளாவிடினும், அனுபவம் மிக்க அதிகாரிகளினதும், படையினரதும் சேவைகளை இழந்து விடக் கூடாது.ஓய்வு பெறுவதற்கு முன்னதாக, ஆட்சிமாற்றத் துக்குப் பின்னர் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்படுவதால் ஏற்படும் நிலை குறித்து ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்தது.



நீர்கொழும்பில் இராணுவ உயர் மட்ட அதிகாரிகளை ஜனாதிபதி சந்தித்தபோது, இது பற்றி அவரிடம் எடுத்துக்கூறும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது ஜனாதிபதிக்கு அடுத்த ஆசனத்தில் இருந்த அமைச்சர் ஒருவர் அதனைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

நாட்டுக்காகப் பணியாற்றியவர்களின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

உலகின் வல்லமை மிக்க நாடுகளின் புலனாய்வுச் சேவைகள் மேற்கொள்ளும் நடவடிக்கையைப் போலவே, மலேசியாவில் இருந்து புலிகளின் ஆயுதக் கொள்வனவாளரான குமரன் பத்மநாதனை இலங்கை இராணுவப்புலனாய்வுப்பிரிவுகொழும்புக் குக் கொண்டு வந்தது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு நாட்டின் நலன்களுக்காக மிகச் சிறந்த சேவையை ஆற்றியுள்ளது.

ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்ற போது, புலனாய்வுச் சேவைகளால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்யக் கூடாது. அத்தகைய நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் - என்றார். (த)

# சுயலாபத்துடன் நடக்கிறது அரச மருத்துவர் சங்கம்

## கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 22
அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சாதாரண மாணவர்களின் உரிமைகளை மீறும் வகையில் செயற்படுகின்றது. பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி வருகின்றது. சுயலாபத்துக்காக அவர்கள் கோரும் சூரியனையும் சந்திரனையும் எம்மால் வழங்க முடியாது என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமைச்சுக்கள் தொடர்பான விசேட அறிவிப்பை வெளியிடும் நேரத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் கல்வி அமைச்சுக் கட்டடத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்து இரவு முழுவதும் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்குக் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அம்புலன்ஸ் வண்டியில் உணவு மற்றும் குடிபானம் கொண்டு சென்றமைக்கான சாட்சிகள் இருக்கின்றன. இட மாற்றம் பெற்றுச்செல்லும் அரச வைத்தியர்களின் பிள்ளைகளுக்கு அரச பாடசாலைகள் வழங்கப்படவேண்டும் எனக் கோரி கடந்த வாரம் கல்வி அமைச்சுக்குள் நுழைந்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், அன்றைய தினம் நடைபெறவிருந்த பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சித்திரப் போட்டியின் பரிசளிப்பு விழாவையும் நடக்கவிடாது குழப்பி இரவு முழுவதும் கல்வி அமைச்சு கட்டடத்துக்குள் தங்கியிருந்தனர்.

எமக்கு எவரையும் அரசியல் ரீதியில் பழிவாங்கவேண்டிய தேவை கிடையாது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள போலி ஆவணத்தின் காரணமாக நியாயமான மருத்துவர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. மருத்துவர் சங்கம் எம்மை முட்டாளாக்கிச் சுவரில் சாய்த்து தங்களுடைய மோசடிகளை நியாயப்படுத்த முயல்கிறது. கடந்த ஆட்சியில் அவற்றைச் சாதிக்க முடிந்தாலும் எமது ஆட்சியில் அதற்கு இடமில்லை- என்றார். (த)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**Dr.T.கோபிநாத் (J.P)**
[உரிமையாளர்-அகஸ்தியர் வைத்திய சாலை & மருந்தகம், சித்த ஆயுள்வேத வைத்தியர்]

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 17.05.1983 | 27.09.2014 |

திதி: திருதியை (04.10.2016)

பாசமுள்ள தாய்க்கும், தந்தைக்கும் உயிருக்கும் உயிரான மகன் நீ, அன்பு நிறைந்த அக்காவுக்கு செல்லமான தம்பி நீ, பாசம் நிறைந்த தம்பிமாருக்கு அருமையான அண்ணா நீ, உன் பாச மலர்களிலே பூத்த அழகான மருமக்களுக்கு அன்பான பெரிய மாமா நீ, ஐயா கோபி இப்படியாக எல்லாருடைய இதயத்தையும் கொள்ளை கொண்டவன் நீ. ஆண்டு இரண்டானாலும் இதைப்போல் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எந்நாளும் எந்நேரமும் எங்கள் இதயத்தில் இருப்பாய் கோபி. உன்னுடைய அன்பான சிரிப்பையும் உன்னையும் பார்க்க என்னுள்ளம் ஏங்குதடா மகனே. கோபி உன்னுடைய அம்மா உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று நீ வணங்கிய தெய்வங்களிடம் வேண்டுகிறேன் மகனே. உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

**இரண்டாம் ஆண்டுத் திவசம் அவரது இல்லத்தில் 04.10.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறவிருப்பதால் அன்புடன் அழைக்கின்றோம்.**

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**Dr.K.V.துரைராஜா**
(அகஸ்தியர்)
(ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர் யாழ்.போதனா வைத்தியசாலை. ஸ்தாபகர்-அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்)

அன்னை மடியில்
21.01.1949

ஆண்டவன் அடியில்
30.09.2010

திதி: ஸப்தமி (22.09.2016)

எங்கள் பாசமுள்ள அப்பாவே இந்தப் பூமியை விட்டு சென்று உங்களைப் படைத்தவன் உடனே சென்றுவிட்டீர்கள். எப்படி எங்களை மறந்தீர்கள் தெய்வமே. எங்கள் வீட்டுத் தெய்வமாகிய நீங்கள் என்றென்றும் எங்களுடனே இருப்பீர்கள் அப்பா. ஆறு ஆண்டுகள் நீங்கள் இங்கில்லை, கல்வியிலே நம்முடைய வாழ்க்கையிலே நாம் ஏற்றம் பெற ஆசை கொண்டீர்கள். உங்கள் கனவுகள் மெய்ப்பட எப்பொழுதும் எங்களுக்குத் துணையாக நீங்கள் இருங்கள் அப்பா. எங்களை வழி நடத்துங்கள் எங்களுக்கு பாதுகாப்பாகவும், எந்நாளும் இருங்கள். அம்மாவும் நாங்களும் உங்கள் பேரப்பிள்ளைகளும் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று சுட்டிவேரகத்து அம்பாளை மனமார வேண்டுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உங்களுடைய நினைவுகளுடனே வாழும்**

பிராமணோடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
077 100 7567

**குடும்பத்தினர்.**

(J/4771)(10.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக வரலாற்றின் உன்னத ஒளிர்வு தியாக தீபம்

ந.லோகதயாளன்

தி லீபனின் ஆன்மா தியாகச் சுடராகஒளிர்ந்துகொண்டிருந்தது. அணையவில்லை. உயிரின் ஊசலாட்டம் எங்கும் அங்கலாய்ப்பாய்உலவிநெஞ்சங்களிடையே உயிர்த்துடிப்பாய் படபடத்துக்கொண்டது. பாரத தேசம் கோரிக்கைகளை ஏற்று அவன் உயிரை மரணத்தின் வாயிற் படியிலிருந்து மீட்டுத் தந்திடாதா என்றதேடல் எங்கும் ஆவலாக அலைபாய்ந்து கொண்டிருந்தது. இதனிடையே யாழில் நின்றிருந்த முக்கிய தளபதிகளை தலைவர் அவசரமாக அழைக்கின்றார். அந்தச் சந்திப்பில் சூசை, புலேந்திரன், சந்தோசம், சொர்ணம், இம்ரான், ஜொனி, மாத்தையா எனப் பலரும் இருந்தனர். இந்தியாவை இனியும் நம்ப முடியாது. திலீபன் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டது. அவனுக்குஉறுதுணையாக ஒன்றுதிரண்ட மக்கள் உயிரையும் எடுக்கத் துணிந்து விட்டது. இந்த நிலமைகள் இனியும் தொடர அனுமதிக்கக்கூடாது. எமது உயிர் தேசத்திற்கானது. அதனையே தேச விடுதலைக்கான இலட்சிய வேட்கையாக வரித்துக்கொண்டவர்கள். எமக்கு எது நேர்ந்தாலும் மனதார ஏற்றுக்கொள்வோம். ஆனால் மக்களின் உயிர் தியாகத்திற்கானதல்ல, தேச விடியலின் ஒன்றுபட்ட ஆசீர்வாதத்திற்கானது. அவர்கள் மீது



மிகுந்த கவனம் கொள்ள வேண்டும். இதனை ஏனைய தளபதிகளுக்கும் தெரியப்படுத்துங்கள் என்பதான தகவல்கள் பரிமாறப்படுகின்றன.

இதேவேளை நல்லூரில் ஒன்றுகூடும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் புலிகள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து மட்டுமல்ல தென்னிலங்கையிலிருந்தும் அரசியல்வாதிகளும் இந்தியாவில் இருந்து பத்திரிகையாளர்களும், தமிழ் உணர்வாளர்களும் வருகை தந்திருந்தனர். உரிமைக்கான உன்னத உயிர் ஒன்றின் ஊசலாட்டத்தைக் காப்பாற்ற முடியாது பரீட்சிக்க வேண்டிய நிலையில் தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார் மருத்துவர் மு.வே. யோ.வாஞ்சிநாதன்.

இதனிடையே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆசீர்வாதத்துடன் தமிழர் தாயங்களில் ஊடுருவியிருந்த இஸ்ரேலிய நாட்டின் மொசாட் உளவுப் படைகள் வதந்திகளைப் பரப்பும் பணியினை கச்சிதமாகச் செய்து கொண்டிருந்தன. குழப்பங்களை ஏற்படுத்தி சில வெற்றிகளையும் கண்டனர்.

பதினொரு நாள்கள் எந்த விமோசனமும் இன்றி கடந்துபோனது. பன்னிரண்டாவது நாளின் ஆரம்பம் தியாக வேள்வியின் கனதியை உயிரின் உருக்கமாக்கியது. அச்சமின்றிய கோரிக்கைகளின் உச்சமானது எங்கும் சோகத்தின் வழியான விடுதலை உணர்வின் கதகதப்பை மனத்தெம்பாக்கியது. இலட்சியம் என்பதை எல்லோர் மனங்களிலும் உறுதியுரைப்பாக்கியது. அகிம்சையின் ஆரம்பம் தாங்கள்தான் என்று சொல்லிக் கொண்ட பாரததேசத்தின் போலி முகமூடியை கிழித்தெறிந்தது. தமிழீழத்தின் உன்னத தியாக வரலாற்றை உலகெங்கும் பறைசாற்றியது.

# சிவில் அமைப்புக்கள் கொழும்பில் பேரணி

## புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் கருத்துக்களை உள்வாங்கக் கோரி

கொழும்பு, செப். 22

மக்கள் கருத்தறியும் குழுவிடம் சிவில் அமைப்புக்கள், தனிநபர்கள் முன்வைத்த சமர்ப்பித்தல்களினதும், குறித்த குழுவின் பரிந்துரைகளினதும் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நேற்றுமுன்தினம் கொழும்பில் கூட்டம் மற்றும் பேரணியை நடத்தின.

கொழும்பு விகாரமாதேவி திறந்த வெளியரங்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்வில் குருநாகல் பெண்கள் வள நிறுவனம், மட்டக்களப்பு உழைக்கும் மக்கள், மீனவர் அமைப்பு, முஸ்லிம் பெண்கள் அமைப்பு, விவசாய அமைப்பு போன்ற பல சிவில் அமைப்புக்கள் பங்குபற்றியிருந்தன.

நாட்டின் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன் விகாரமாதேவி திறந்த வெளியரங்கில் கூடியிருந்தவர்கள் சமூக பொருளாதார நீதியை உறுதிப்படுத்தும் புதிய அரசமைப்பே எமக்குத் தேவை, சமமான அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான பெண்களுக்கு இருக்கும் உரிமையை அரசமைப்பினூடாக உறுதி செய்ய வேண்டும், எங்களது காணி உரிமைகளை உறுதிசெய், நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 30வீதமாக உறுதிப்படுத்தப்படவேண்டும், நீதியுடனான சமாதானமே எமக்குத் தேவை போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைக் காட்சிப்படுத்தியவாறு அமர்ந்திருந்தனர்.

பின்னர் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் விகாரமாதேவி அரங்கில் இருந்து பேரணியாகக் கொள்ளுப்பிட்டியை நோக்கிச் சென்றனர். கொள்ளுப்பிட்டியில் அமைந்திருக்கும் பிரதமரின் அலுவலகத்தில் பிரதமர் சார்பாக அதிகாரி ஒருவரிடம் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் கையளித்தனர். (த்)




Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போராட்டங்களின் பொருத்தப்பாடு

தியாக தீபம் திலீபன் உணவு ஒறுத்துப் போராட்டம் நடத்தி அகிம்சைத் தீயில் தன் உயிர் கருக்கிய நாள்கள் இவை. ஒரு காலத்தில் பேரெழுச்சிமிக்க புனித நாள்கள். திருவிழாக்களை மீறிய உணர்ச்சித் தருணங்கள். இன்று எல்லாமே மாறிவிட்டன.

திலீபனைத் தேடுவோர் யாருமில்லை. புனிதமானவையாக இருந்த இந்த நாள்கள் இலக்கிய நயப்புக்கும் சர்வதேசசினிமா நுகர்ச்சிக்கும் உரியவையாக மாற்றப்பட்டுவிட்டன. அவற்றைக் கேட்பார் யாருமில்லை. இந்த நாள்களில் அகிம்சை ஊர்வலம் நடத்துகிறவர்கள்கூட பார்த்தீபனின் பாதங்களைப் பணியத் துணிந்ததில்லை என்கிற அளவுக்குக் காலம் மாறிவிட்டது.

ஆனாலும் திலீபனின் வரலாறு இன்றும் எமக்குக் கற்றுத் தரும் பாடம் ஒன்றுண்டு. விடுதலையை வென்றெடுப்பதில் போராட்டங்களின் பொருத்தப்பாட்டையும் அது வலியுறுத்தி நிற்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கமும் திலீபனும் அகிம்சையைக் கையில் எடுத்தது இந்தியாவுக்கு எதிராக. அண்ணல் மகாத்மா காந்தி அகிம்சை மூலமே இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார் என்பதால் அகிம்சையை அந்த நாடு மதிக்கும் என்று கருதியே அந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அதுவே தவறான முடிவாக மாறிவிட்டது.

அகிம்சைப் போராட்டங்கள் எதற்கும் இந்தியா மதிப்பளித்ததேயில்லை. அன்று திலீபனின் போராட்டத்துக்கு மட்டுமல்ல இன்று காஷ்மீரில் நடக்கும் அகிம்சைப் போராட்டங்களுக்கும் இந்தியா மதிப்பளிக்கவில்லை. அதுவே திலீபனை நாம் இழப்பதற்கும் காரணமா கிவிட்டது. இந்த வரலாறு நமக்குக் கற்றுத் தந்த பாடம், தவறான நேரத்தில் தவறானவர்களுக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களால் பயன் ஏதுமில்லை என்பதுதான்.

திலீபனையும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் கூர்ந்து அவதானிக்கும் எவரும் இதனை மறுக்கவோ, நிராகரிக்கவோ முடியாது. ஆனாலும் தமிழர்களில் ஒரு பகுதியினரும், தம்மைத் தமிழினத் தலைவர்கள் என்றும், தமிழ் இன விடுதலைக்காகப் பாடுபடுபவர்கள் என்றும் காட்டிக்கொள்ளும் சிலரும் இந்த வரலாற்றுப் பாடத்தைக் கற்றிருப்பவர்களாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களின் நலனின் பேரால், அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் சாத்தியத்தை விரைவுபடுத்துவதன் பேரால் அவர்கள் ஏற்பாடு செய்ய முயற்சிக்கும் ஊர்வலம் இந்தக் கேள்வியை நிச்சயம் எழுப்புகின்றது. தவறான நேரத்தில் தவறானவர்களுக்கு முன்பாக நடத்தப்படும் போராட்டமாக இதுவும் இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது இந்தப் போராட்டங்களை அவர்கள் நடத்தியிருந்தால் அதனை மனதார வரவேற்றிருக்கலாம். ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் அவர்களுடன் கரம்கோர்த்திருக்கலாம். அலை கடல் எனத் திரண்டிருக்கலாம். ஆனால், அப்போதெல்லாம் தாங்களும் தங்கள் குடும்பங்களின் நலன்களும் என்று ஒதுங்கிப் பதுங்கியிருந்தவர்கள் 2015 ஜனவரியில் மக்கள் மாற்றத்தை அரங்கேற்றிய பின்னர் போராட்டங்கள் என்று குரல் எழுப்பிக்கொண்டு வருவதை எப்படித் தமிழ் மக்களின் நலன் மீதான அக்கறை என்று ஏற்றுக் கொள்வது? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்பவர்கள் என்றுதானே இவர்களைச் சொல்லவேண்டும். சந்தர்ப்பவாதிகளின் பின்னாலா தமிழர்கள் அணிதிரளவேண்டும்? அப்படி நடந்தால் அதைவிடக் கொடுமை வேறென்ன இருக்க முடியும்? மக்கள் தெளிவாகச் சிந்திக்க வேண்டிய தருணம் இது.




“பள்ளிகள் மீதும் குண்டுகள் பொழியும், படிப்பகம் மீதும் குண்டுகள் பொழியும், காலையில் சென்று கரை வலை இழுத்தோர், மாலையில் பிணமாய் மறுகரை ஒதுங்குவர், பயங்கரவாதிகள் பதுங்கிய இடங்களை, ஆயுதப் படையினர் அழித்தனர் என்று, இராணுவச் செய்தி காரணம் சொல்லும்”

ஹரீஸ்

அன்றைய நாள் போரின் கொடூர நாக்குகள் நாகர்கோவில் மண்ணை ஆக்கிரமித்திருந்தன. அமைதியாக விடிந்த அன்றைய பொழுது அலங்கோலமாக மாறும் என எவரும் கனவில்கூட நினைக்கவில்லை. நாகர்கோவில் மகா வித்தியாலயமும் தனது கல்விக் கடமைகளை வழமைபோல ஆரம்பித்தது. அன்று வெள்ளிக்கிழமை; காலை 8 மணிக்கு ஆரம்பமானது பாடசாலை. வெள்ளிக்கிழமை என்பதால் கூட்டுப் பிரார்த்தனைக்காக மாணவர்கள் பிரார்த்தனை மண்டபங்களை நோக்கி நகரத் தொடங்கினர். அந்தப் பாடசாலையில் அப்போது 880 மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தனர். 38 ஆசிரியர்கள் கற்பித்தல் பணியை மேற்கொண்டிருந்தனர். கல்லூரி அதிபர் மகேந்திரன் தலைமையில் ஆரம்பமான பிரார்த்தனை நிகழ்வில், சிவபுராணம் ஓதுதலுக்குப் பின்னர் உமா என்ற மாணவி சரஸ்வதி பூசை பற்றிய தனது பேச்சை வழங்கினார். இவ்வாறு நிகழ்வுகள் நடந்தேறி முடிந்தன. அந்தக் காலைப் பிரார்த்தனையின் முடிவுக்குப் பின், வகுப்புகள் ஆரம்பமாகின. மாணவர்கள் கல்வியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். புக்காரா விமானங்களின் பேரிரைச்சல் அந்த அமைதியைச் சீர்குலைக்கத் தொடங்கியது. அன்றைய நாளை இவ்வாறு விவரிக்கிறார் கல்லூரியின் அன்றைய அதிபர் மகேந்திரன்.

“அன்று காலை 6 30 மணிக்கு புக்காரா விமானம் மணல்காடு பகுதியில் குண்டு வீசியிருந்தது. இதனால் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இருந்தபோதிலும் பாடசாலையின் செயற்பாடுகள் ஒழுங்காக நடந்துகொண்டு இருந்தன. மு.ப.11 மணிக்கு மாணவர்கள் சாப்பாட்டுக்கு சென்று மீண்டும் வந்திருந்தனர். தொடர்ந்து வகுப்புகள் ஆரம்பமா கின. இந்த நிலையில் புக்காரா வட்டமடிக்கத் தொடங்க, பெற்றோர் தமது பிள்ளைகளைக் கூட்டிப்போக வாசலில் முண்டியடித்தனர். தமது பிள்ளைகளைத் தாங்கள் கூட்டிக்கொண்டு போகவேண்டும் எனக் கேட்டனர். அவர்கள் அப்படிக் கேட்ட போது என்னால் மறுக்க முடியவில்லை. ஆகவே கொஞ்சக் கொஞ்சப் பிள்ளைகளாக விட்டுக்கொண்டிருந்தோம். அப்போது தான் பிள்ளைகள் சென்று கொண்டிருந்த பாடசாலை கேற் பக்கமாக புக்காரா குண்டு போட்டது. முதலாவது சுற்றுப் போட்டுவிட்டு, அது அங்கிருந்து போய்விட்டது .வீசிய ரொக்கட் குண்டுகள் பாடசாலைக்கு அருகில் உள்பக்கமாக விழுந்து வெடித்ததால், மாணவர்கள் சிதறி ஓடத் தொடங்கி விட்டார்கள். சில மாணவர்கள் குண்டு வீச்சால் காயமுற்று படுகாயங்களுடன் துடித்து கொண்டிருந்தார்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பாடசாலையை விட்டு அருகில் உள்ள மரங்களுக்கு கீழ் மாணவர்கள் பாதுகாப்புத் தேடத் தொடங்கினர். மாணவர்களைக் கீழே நிலத்தில் படுக்குமாறு நாங்களும் கத்திக் கொண்டிருந்தோம். மாணவர்களை அந்த நேரத்தில் கட்டுப்படுத்த முடியவில்லை. புக்காரா வட்டமடித்ததால் அருகில் உள்ள காட்டுப்பகுதி நோக்கி நாங்கள் ஓடத்தொடங்கினோம். அப்படி அங்கு போய் நாங்கள் பாதுகாப்புக்காக நிலத்தில் குப்புறப்படுத்திருக்க, அங்கு சில மாணவர்கள் ஓடி வந்து “சேர் தர்சினி, உமா எல்லாரும் குண்டு பட்டுக் கிடக்கினம். குருதி வெள்ளமாய் இருக்கு. கடுமையாய் இருக்கினம் சேர்” என்றனர். உடனே நானும் மாணவர்கள் சிலரும் கேற்பகுதியை நோக்கி ஓடினோம். அப்போது மீண்டும் வட்டமடித்த புக்காரா, அடுத்த சுற்றுக் குண்டையும் பாடசாலையைக் குறிவைத்து வீசியது. அப்போது எனக்குப் பக்கத்தில் நின்ற பழனி என்ற பள்ளிக்கூட சிற்றூழியர் குண்டு பட்டுக் காயமடைந்தார். அவனது தலைப்பகுதியைக் குண்டு துளைத்திருந்தது. அவன் சரிந்து விழுந்தான். நாங்கள் அங்கு தரித்து நில்லாமல் பள்ளிக் கூடக் கேற்றை நோக்கி ஓடி வந்தோம். 65 பிள்ளைகளுக்கு மேல் காயமடைந்து துடித்து கொண்டிருந்தார்கள். என்ன செய்வது என்று தெரியவில்லை. உடனே ஊர்ச்சனமெல்லாம் பாடசாலையை நோக்கி ஓடி வந்தார்கள். சில மாணவர்களின் கைகால்கள் துண்டாடப்பட்டுக் கிடந்தன. அவர்கள் முனகிக் கொண்டும், துடித்துக் கொண்டும் இருந்தார்கள். என்ன செய்வது என்றே தெரியவில்லை. பள்ளிக்கூட கேற்றில் இருந்து நூறு மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பகுதியில்தான் குண்டு வீழ்ந்ததால் அதிகமானவர்கள் குண்டு வீச்சில் சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருந்தது. இதன் பின்னர் அகப்பட்ட வாகனங்களில் காயப்பட்டவர்களையும், மூச்சுப் பேச்சு இல்லாமல் இருந்த அந்த குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு விரைந்தோம். இருந்தபோதிலும் 20 மாணவர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்திருந்தார்கள். இரண்டு பேர் வைத்திய சாலையில் உயிரிழந்திருந்தார்கள். உயிரிழந்த பிள்ளைகளின் சடலங்கள் வைத்தியசாலையின் விறாந்தையில் வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தன. இரண்டாம் வகுப்புத் தொடக்கம் 11 ஆம் வகுப்பு வரை கல்வி கற்று வந்த பிள்ளைகளே உயிரிழந்து இருந்தார்கள். காயப்பட்டவர்கள் வைத்தியசாலையின் விடுதிகளில் சேர்க்கப்பட்டார்கள். காயப்பட்டதில் 48 பிள்ளைகள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். அதில் சிலர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக இடம்மாற்றப்பட்டார்கள்.

இந்தச் சம்பவங்களை நேரில் கண்டதால் நான் மனமுடைந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை அழித்தல் என்ற போர்வையில் பச்சிளம் பிள்ளைகளின் உயிர் பறித்த கொடுமை

போயிருந்தேன். பின்னர் மாலை ஐந்தரைமணிவரை பாடசாலையிலேயே இருந்தேன். பின்னர் மந்திகைக்குப் போயிருந்தேன். அங்கிருந்து இரவு திரும்பவும் பள்ளிக் கூடம் போனேன். அதில் சில உயிரிழந்த பிள்ளைகளின் உடல்களை அன்று இரவே அடக்கம் செய்யவேண்டிய நிலை இருந்தது என்று கண்ணீருடன் அன்றைய கதையைக் கூறி முடித்தார் அன்றைய அதிபர் மகேந்திரன்.

அரச படைகளின் கொடூர புக்கார குண்டு வீச்சில் உயிர் நீத்த 10 வயதுடைய ரவீந்திரன் அமிர்தா என்ற பிஞ்சுச் சிறுமியின் தாய் அந்த நாளை கீழ்க்கண்டவாறு கண்ணீருடன் விவரிக்கிறார்.

"வடமராட்சி கிழக்கு வத்தராயன் எங்களது சொந்த இடம். 1991 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து நாகர்கோவிலில் வசித்து வந்தோம். எனது மூத்த மகள் தான் அமிர்தா. அவரும் அவரது இரண்டு தம்பிமாரும் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் படித்து கொண்டிருந்தவை. அண்டைக்குக் கொஞ்சம் புக்காரா சத்தம் அதிகமாகக் கேட்டது. குண்டு வீச்சுகளும் நடந்தன. பிள்ளைகளைக் கூட்டிவர நானும் எனது கணவரும் பாடசாலையை நோக்கி ஓடினோம். அப்போது பாடசாலையை நோக்கி குண்டுகள் வீசப்பட்டிருந்தன. எமது பிள்ளைகளைத் தேடத்தொடங்கினோம். எனது இரண்டு ஆண்பிள்ளை களையும் ஒருவாறு தேடிக் கண்டு பிடித்தோம். அவர்களிடம் அக்கா எங்கே எனக் கேட்டேன். அக்காவைக் காணவில்லை என்று சொன்ன அவர்களுடன் சேர்ந்து தேடியபோது ஒரு மரத்துக்கு கீழே அமிர்தா காயப்பட்டு வீழ்ந்து கிடந் ததை என்னுடைய கணவர் கண்டார். உடனே ஓடிப்போய் பிள்ளையை தூக்கித் தனது மடியில் கிடத்தினார். பிள்ளையின் வெள்ளைச் சட்டையெல்லாம் குருதியால் நனைந்திருந்தது. ஏனைய பிள்ளைகளின் தசைத் துண்டங்களும் பிள்ளையின் வெள்ளைச்சட்டையில் ஒட்டிக் கொண்டிருந்தன. அதை எல்லாம் தட்டிக் கொண்டிருந்தபோது தலையைத் தடவினம். அப்போது பிள்ளையின் பிடரிப் பக்கத்தில் இருந்து குருதி கசிந்திருந்தது. தலையைத் துளைத்து சென்ற குண்டு சிதறல் உள்ளேயே தங்கியிருந்தது. இதன் பின்னர் பிள்ளையை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றோம். ஆனாலும் எவராலும் எமது பிள்ளையைக் காப்பாற்ற முடியவில்லை எனத் தெரிவித்தார் அந்தத் தாயார்.

**பச்சிளம் பிள்ளைகளை கொத்தாக உயிர் எடுத்த குண்டுவீச்சின் 21 ஆண்டுகள் பூர்த்தி இன்று**



நாகர்கோவில் மகா வித்தியாலய படுகொலை அரங்கேறி இன்றுடன் 21 ஆண்டுகள் கடக்கின்றன. அப்போதைய இரும்புப் பெண்மணியாக வர்ணிக்கப்பட்ட சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் அரங்கேற்றப்பட்ட அதியுச்சப் படுகொலையாகவும், செஞ்சோலை உட்பட பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் ஆரம்பப்புள்ளி யாகவும் நாகர்கோவில் மகாவித்தியாலயப் படுகொலை பார்க்கப்படுகிறது.

"பாடசாலைகள் மீதும் குண்டுகள் பொழியும், படிப்பகம் மீதும் குண்டுகள் பொழியும், காலையில் சென்று கரை வலை இழுத்தோர், மாலையில் பிணமாய் மறுகரை ஒதுங்குவர், பயங்கரவாதிகள் பதுங்கிய இடங்களை, ஆயுதப் படையினர் அழித்தனர் என்று-இராணுவச் செய்தி காரணம் சொல்லும்" என்ற கவிதைக்கு முதல் எடுத்துக்காட்டாக, நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீதான தாக்குதல் பார்க்கப்படுகிறது. அப்பாவிப் பிஞ்சுகள் மீது ஈவிரக்கம் அற்ற தாக்குதலைத் திணித்து அந்த வெள்ளை உடைகளுக்கு வரிப்புலி சாயம் பூசும் அரச பயங்கரவாத கலாசாரத்தின் ஆரம்பப் புள்ளியாக அமைந்தது நாகர்கோவில் குண்டு வீச்சே. பாடசாலை மாணவர்கள் மீது குண்டு வீசிவிட்டு புலிகளின் பயிற்சி மையம் தாக்கப்பட்டது என அன்றைய அரசு அறிக்கையிட்டதில் இருந்து இதனை ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

## மிருக பலியிடல் அநாகரிகமானது

எல்லா உயிர்களிடத்திலும் இறைவனின் அருள், அன்பைப் பெருக்கும். இரக்கமுள்ளவர் இறைவனின் கருணையைப் பெறுபவர். தூய்மையையும், சாந்தியையும் தெய்வங்கள் விரும்புவது வழக்கம். எமது ஆலயங்களில் ஆடு, கோழி முதலிய விலங்குகள் பலியிடப்படுவது பற்றி சர்ச்சைகள் எழுந்துள்ளன. கடவுளின் பெயரால் பலியிடுவது காட்டுமிராண்டித்தனம் என்றும் மன்னிக்க முடியாத குற்றம் என்றும் காந்தி அடிகள் கூறியிருக்கிறார். ஏனைய மதங்களைப் பின்பற்றும் சகோதரர்களுக்கு புலால் உண்பது தடை செய்யப்படவில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் ஆலயங்களில் வைத்து மிருகபலி மேற்கொள்வதில்லை. கோயில் வேறு, கசாப்புக் கடை வேறு என்பதைப் புரிந்து கொள்வது சிறப்பு. மாலையும் கழுத்துமாய் மண மேடைக்கு அழைத்துவரும் மணமக்களைப்போல் சாதுவான மிருகத்தையும் பெருத்த ஆரவாரத்தோடு அழைத்து வருவதோடு காருண்யம் இல்லாது பலிபீடம் ஏற்றி கொலை செய்து பகிர்ந்துண்டு மகிழ்வது அருவருக்கத் தக்க செயல். புலி, சிங்கம் போன்ற கொடூரமனம் படைத்த இவர்கள், புனிதம் நிறைந்த ஆலயத்தின் முன் இறைவனைத் திருப்திப்படுத்துகிறோம் என்கின்ற மூட நம்பிக்கையில் இன்பம் காணும் இவர்கள், பாவத்தின் சின்னங்களே. தூய்மையான சூழலில் இறைவணக்கம் செய்தால் துன்பங்கள் அகன்றுவிடும். அன்பே உருவான ஆண்டவனினது கருணையை நல் அறிவாலும், நற்செய்கையாலுமே அறியமுடியும். சிந்திக்கத் தெரிந்த மனிதன் தனது தவறுளைத் திருத்தி மனிதநேயத்தோடு இறைவனின் படைப்பில் எல்லா உயிர்களும் ஒன்றே என்பதை நினைவில் வைத்து நடப்பது சாலச்சிறந்தது.

இந்து மதத்தவரான எமது மத்தியில் நிலவும் கோயில்களில் ஆண்டவன் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கும் அநாகரிக பழக்கத்தை நாம் இனியாவது கைவிடுவோமா?

செல்வா. சுப்பிரமணியம்
கல்வயல், சாவகச்சேரி.

## தருணம் பார்த்து காய் நகர்த்தும் போக்கு

கிளிநொச்சி சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்த பத்திரமுல்லை சீலானந்ததேரர் அவர்களுக்கு ஏற்பட்ட இழப் புக்கள் குறித்துக் கலந்துரையாடியதுடன் உலர் உணவுப் பொருள்களையும் வழங்கினார் என வெளிவந்த பத்திரிகைச் செய்தியை வாசித்தபோதே எனக்கு வியப்பாக இருந்தது. ஒரு பௌத்த துறவி பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்காக மனம் நொந்து அனுதாபத்தையும் தம்மாலான பொருள் உதவியையும் வழங்க முன்வந்தாரே என்று ஒருபுறம் மன மகிழ்ச்சி ஏற்பட்டாலும், அவரது பின்னணியை நோக்கும்வேளை, அவரது குறித்த செயற்பாடும் அரசியல் நோக்கம் கொண்டதுதானா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இத்தனைக்கும் அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவராகச் செயற்படுகிறார். தான் இனவாதம் பேசவில்லை என்று கூறும் அவர், எமது தமிழ்த் தலைவர்கள் எவரும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது குறித்து அக்கறை காட்டவில்லை என்றும் கண்டிக்க முயல்கிறார். புத்த பகவானது போதனைகளுக்கு அமைய மக்களுக்கு உதவ முன்வந்தால் அதனைப் பாராட்டலாம்; கௌரவிக்கலாம்.

பொ.பராபரன், சுன்னாகம்.

## நிப்போன் கதிரைக்கு 2 வருட உத்தரவாதம் உண்டு

21.09.2016 உதயன் பத்திரிகையில் நிப்போன் கதிரைகளுக்கு எந்த உத்தரவாதமும் (WARRANTY) கிடையாது என்று வாசகர் திருமுகப்பகுதியில் வாசகர் மாவை. நக்கீரன் என்பவரால் எழுதப்பட்டமை தவறு. நிப்போன் கதிரைக்கு பயன்படுத்தும் மூலப்பொருள்கள் முதற்தரமானவை என்பதோடு, உத்தரவாத சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு தரமான இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

10 (பத்து) வருடங்களாக பிளாஸ்ரிக் கதிரை உலகில் இடம்பிடித்துள்ள இந்த நிறுவனத்திற்கு அபாண்டமாக சுமத்தப்பட்ட பழி ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. அத்தோடு எமது கதிரைகளுக்கு இரண்டு வருடம் உத்தரவாதம் (Guarantee) நிபந்தனைகளின் கீழ் வழங்கப்படுகிறது.

எஸ். டினேஷ் குமார், சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர்.
நிப்போன் பிளாஸ்ரிக் இன்டஸ்ரீஸ்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். ... வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் குடியிருப்பில் தீ 4000 பேர் வெளியேற்றம்

லெஸ்பொஸ், செப். 22
கிரீஸ் நாட்டில் லெஸ்பொஸ் தீவில், அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள பெரிய முகாமில் தீவிபத்து ஏற்பட்டதால் தங்கவைக்கப்பட்ட அகதிகள் அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

குறித்த தீ விபத்தால் 160 தற்காலிக வதிவிடங்கள் கருகிச் சாம்பலாகின. தீ விபத்து திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் 9 அகதிகளைக் கைது செய்து விசாரணைகளை நடத்தினர். இதில், அகதிகளாகக் குடியேறிய இரு பிரிவினருக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பே தீ விபத்தைத் தோற்றுவித்ததாகத் தெரிய வந்தது.

குறித்த பகுதியின் ஆளுநர், "5 ஆயிரத்து 450 பேருக்கு மட்டுமே அங்கு இட வசதி உண்டு.

ஆனால் 10 ஆயிரத்து 500 க்கும் அதிகமானவர்கள் அங்கு வசிக்கின்றனர். அளவுக்கு அதிகமான நெருக்கத்தால் பிரச்சினைகள் தோற்றம் பெற்றன" என்றார்.

(ம-ரி4)





## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்

# சிரிய அரசிடம் திட்

# பிரிட்டன் பாதுகா

டமஸ்கஸ், செப். 22
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகவும், ஆயுதக்குழுக்களுக்கு எதிராகவும் சிரிய அரசு சரியான திட்டங்கள் இன்றி நகர்வதாக பிரிட்டன் பாதுகாப்புச் சபை சாடியது.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் அரசுக்கு எதிரான ஆயுதக்குழுக்களும் முகாமிட்டுள்ளன. இதனால் இருமுனைப் போராட்டத்தில் அந்த அரசு சிக்கித் தவிக்கிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் உலக நாடுகள் போர்புரிகின்றன. பிரிட்டனும் தனது பங்குக்கு அவ்வப்போது

பெரும் தாக்குதலை அ
ஆனால் சிரியா, கிளர்ச்சி
ரான போக்கைக் கடைப்
அமைப்புக்கு எதிராக
நடத்துவது குறைவு. இ
பிரிட்டனின் பாதுகாப்புச்
னம் இவ்வாறு குற்றம் சா
சிரிய அரசிடம் எந்தத் தி
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்
வதற்கான பெரும் ஏற்
அங்கில்லை. அந்த அ
உள்நோக்கத்துடனேயே

## பயங்கரமான கோமாளிகள்



வொஷிங்டன், செப். 22
அமெரிக்காவில் அலபமா பகுதியில் சமீப காலங்களாக குளான் எனப்படும் கோமாளிகள் சிறுவர்கள் மட்டில் திகிலை ஏற்படுத்தி வருகின்றனர்.

பயத்தை ஏற்படுத்தும் வகையில் வேடமிட்டுக்கொண்டு சிறுவர்கள் விளையாடும் பகுதிகளுக்குச் சென்று அவர்களிடத்தில் திகிலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் குறித்த நபர்கள் ஈடுபடுவதாக பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இவ்வாறான சம்பவம் நடைபெற்றது.

திகில் படமொன்றை விளம்பரப்படுத்துவதற்காகவே சிலர் அவ்வாறு வேடமிட்டதாக விசாரணையில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரி4)

## இந்தோனேசியாவில் நிலச்சரிவு 19 பேர் சாவு: 30 பேர் காயம்

ஜாவா, செப்.22
இந்தோனேசியாவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்டநிலச்சரிவில் 19 பேர் சாவடைந்தனர். 9 பேரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டதுடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது.

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் தொடர் மழை காரணமாகவே இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கருட் என்ற பகுதியிலேயே குறித்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு காரணமாக ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி தற்காலிக பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

சுமடாங் என்ற இன்னொரு மாவட்டமும் சேதத்துக்கு இலக்கானது. இந்த மாவட்டத்தில் ஒருசில இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் ஒட்டுமொத்தமாக 30 பேர் காயமடைந்தனர். (ம-ரி4)

## கொங்கோ ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்

கின்ஷாசா, செப்.22
கொங்கோ நாட்டில் ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து 44 பேர் கொல்லப்பட்டனர்.

கொங்கோவில் இன்னும் சில வாரங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருந்தது. ஆனால் தற்போதைய ஜனாதிபதியான ஜோசப் கபிலா தேர்தலைப் பிற்போட்டார். இதனையடுத்து அவர் ஆட்சியைத் தக்கவைக்க முயல்கிறார் எனத் தெரிவித்து நாடெங்கிலும் கலவரங்கள் வெடித்தன. கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டம் படிப்படியாக கலவரமாக மாற்றம் பெற்றதையடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் 40 பேர் சாவடைந்தனர். 200 பேர் கைது செய்யப்பட்டனர். எதிர்க்கட்சிகளின் அலுவலகங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

(ரி4)



பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நாய்களுக்கான ஒலிம்பிக் தொடர் அண்மையில் நடைபெற்றது. நீச்சல், ஓட்டம், பாய்ச்சல், குதித்தல் போன்ற போட்டிகள் நடைபெற்றன. பல்வேறுபட்ட நாய்கள் தொடரில் கலந்துகொண்டதுடன் வெற்றிபெற்ற நாய்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன.

(ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணவு வீணாவதைத் தடுக்க பிரிட்டனில் புதுவகைத் திட்டம்

லண்டன், செப்.22
நட்சத்திர அந்தஸ்துப் பெற்ற விடுதிகளில் தயார் செய்யப் பட்டுக் கொட்டப்படும் உணவு களைத் தடுப்பதற்காக பிரிட் டனில் புதிய வகைத் திட்ட மொன்று நடைமுறைப் படுத்தப்பட்டது.
ஆய்வுகளின் அடிப்படை யில் பிரிட்டனில் மாத்திரம் வருடத்திற்கு 230 மில்லியன் பவுண்டுகள் பெறுமதியான உண்ணத்தகுந்த உணவு கள் குப்பையாக வீசப்படுகின் றன. அவற்றைத் தடுக்கவும், தேவைப்படுவோருக்கு உத வவும் நிலையமொன்று அமைக்கப்பட்து. இதன்படி நட்சத்திர அந்தஸ்துப் பெற்ற, பிரபல விடுதிகளில் சமைக் கப்பட்ட உணவுகள் நுகர் வோர் இல்லாத சந்தர்ப் பத்தில் கொட்டுவதற்குத் தீர் மானிக்கப்பட்டால், அவை உண்ணத் தகுந்த விதத்தில் இருந்தால் அவற்றைச் சேமித் துக் குறைந்த விலையில் விற் பனை செய்வதற்காக நிலை யம் ஒன்று திறக்கப்பட்டது. இத்தகைய உணவுகளுக்கு என்று பணத்தொகை நிர்ணயிக்கப்படவில்லை. விரும்பும் தொகையைச் செலுத்தித் தமக்குரிய உண வுகளைப் பெற்றுக் கொள் ளலாம். (ம-ரி4)



ப்புக்கு எதிராக

# திட்டங்கள் இல்லை
# காப்புச் சபை சாடல்

லை அரங்கேற்றுவதுண்டு.
, கிளர்ச்சிக்குழுக்களுக்கு எதி
க் கடைப்பிடிப்பதுடன், ஐ.எஸ்.
திராக பெரும் தாக்குதலை
றவு. இந்த நிலையிலேயே
துகாப்புச் சபை நேற்றுமுன்தி
றறம் சாட்டியது.
ந்தத் திட்டங்களும் இல்லை.
அமைப்பை இல்லாது செய்
ரும் ஏற்பாடுகள் எவையும்
அந்த அரசு நீண்ட காலமாக
டனேயே செயற்பட்டு வருகிறது.

நடப்பு வருடத்தில் இந்த மாதம் வரை ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக சிரிய இராணுவம் போரிட்டது மிகக்குறைவு. சிரியாவில் முகா மிட்டிருக்கும் கூட்டுப்படையின் நடவடிக்கை யாலேயே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு பின் னடைவுகள் வருகின்றதே தவிர சிரிய இராணு வத்தாலல்ல. சிரிய இராணுவம் தமக்கு எதிரான ஆயுதக்குழுவுக்கு எதிராகவே போரிடுகிறது. ஆனால் அந்த ஆயுதக்குழுக்கள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போரிடுகின்றன எனப் பிரிட்டனின் பாதுகாப்புச் சபை சாடியது. (ம-ரி4)

## ஆர்ப்பாட்டத்தில் 44 பேர் சுட்டுக்கொலை

லவராங்
திங்கட்
ர்ப்பாட்
ான மக்
. ஆர்ப்
வரமாக
துப்பாக்
ாள்ளப்
வடைந்
செய்யப்
ன் அலு
க்கப்பட்
(ரி4)





தல்
ரும்
ரி4)

## ஏஞ்சலீனா – பிரட் விவாகரத்து



வொஷிங்டன், செப். 22
ஹொலிவூட் பிரபல தம்பதிகளான ஏஞ்சலீனா ஜோலி, பிராட் பிட் இணை விவாகரத்துக் கோரியிருப்பது ஹொலி வூட் உலகில் பல அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.
2005ஆம் ஆண்டில் இருந்து காத லித்துவந்த இருவரும் 2014 ஆம் ஆண்டு திருமணபந்தத்தில் இணைந்தனர். இடைப்பட்ட காலப்பகுதியில் 6 குழந் தைகளைத் தத்தெடுத்தனர். இரு வருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விவாகரத்து சிறுவர்களின் எதிர் காலத்தைப் பாதிக்கும் என நிபுணர்கள் கவலை தெரிவித்தனர். விவாகரத்துத் தொடர்பாக பிள்ளைகளிடம் கருத்துக் கேட்கவேண்டாம் என பிராட் ஊடகங்களைக் கோரியுள்ளார். குழந்தை களின் நலன்களை எமது பிரிவு பாதிக்காது எனவும், அவர்களின் வாழ்க்கை தொடர்பாக மிகுந்த அக்கறை எமக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)


இந்த வாரம் புதுவிதியில்...




கிளிநொச்சி தீ: சதியா விபத்தா?

திலீபன் :
இன்னும் எரியும் நெருப்பு

உன்னதர்களைச் சுமந்த ஊரெழு

குட்டீஸ்களுக்கு பரிசுப் பொதிகளை வெல்லும் வாய்ப்பு!

விலை - 20/ = மட்டுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உங்களைப் பற்றிச் சொல்லும் உதடு

**மெல்லிய உதடுகள் :**
சிலருக்கு உதடுகள் இருப்பதே தெரியாது. அந்த அளவில் மெல்லிய உதடுகளைக் கொண்டிருப்பார்கள்.
இத்தகையோர் வெளிப்படையாக பேச மாட்டார்கள், தனிமையை விரும்புவார்கள். வாழ்க்கையில் தமது இலக்குகளை அடைவதில் உறுதியாக இருப்பார்கள். மேலும் எதிலும் எப்போதும் உஷாராக இருப்பார்கள். மெல்லிய உதடுகளைக் கொண்ட பெண்கள் எவரையும் சார்ந்து இருக்கமாட்டார்கள்.

**இதய வடிவ உதடுகள் :**
ஒருவருக்கு இதய வடிவ உதடுகள் இருந்தால், அவர்கள் எப்போதும் புதிய ஆக்க பூர்வமான யோசனைகளைச் செயற்படுத்த விரும்புவார்கள். எதையும் மிகவும் வேகமாக யோசித்து செயற்பட்டு அனைவரையும் வசீகரிப்பார்கள். இந்த வகையினர் எதற்கும் அஞ்சாமல் செயற்படுவார்கள். அதுமட்டுமின்றி இவர்கள் மிகவும் கலகலப்பாக இருப்பார்கள்.

**பருத்த உதடுகள் :**
பருத்த உதடுகளைக் கொண்டவர்கள் மிகவும் தைரியமானவர்கள் மற்றும் துணிச்சலானவர்கள். மற்றவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்துக் கவனிப்பார்கள். தாராள மனம் படைத்தவர்கள் மற்றும் எளிதாகப் பல நல்ல நண்பர்களைப் பெறுவார்கள்.

**சமச்சீரான உதடுகள் :**
சமச்சீரான உதடுகள் என்பது உதடுகள் பெரியதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல், சரியான வடிவத்தில் அழகாக இருப்பதைக் குறிக்கும். இந்த மாதிரியான உதடுகளைக் கொண்டவர்களைக் காண்பது அரிது. இவர்கள் மற்றவர்களுடன் அவ்வளவு எளிதில் பழகமாட்டார்கள். இதனால் இவர்களுக்கு நண்பர்கள் கூட்டம் குறைவாகத்தான் இருக்கும்.

**பரந்த உதடுகள் :**
சிலருக்கு வாய் மிகவும் பெரிதாக இருக்கும். இத்தகையவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். எதையும் பரிபூரணமாகச் செய்ய முயல்வார்கள். மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் ஆர்வம் காண்பிப்பார்கள். இந்த வகையினர் வளைந்து கொடுக்கும் தன்மையினர். மற்றும் இவர்களுக்கு மிகப்பெரிய நண்பர் கூட்டம் இருக்கும்.

**வட்டமான உதடுகள் :**
வட்டமான உதடுகளைக் கொண்டவர்கள் மிகவும் அழகான இதயத்தைப் படைத்தவர்கள் மற்றும் துணிச்சலானவர்கள்.
மேலும் இத்தகையவர்கள் மிகவும் தன்னம்பிக்கை கொண்டவர்கள். இவர்கள் தம் வாழ்வில் இடம்பெற்ற கடந்தகால கெட்ட சம்பவங்களை மனதில் நினைத்துக் குழப்பிக் கொண்டு இருக்காமல், வாழ்வில் முன்னேற நினைப்பார்கள். சொல்லப்போனால் இவர்களுக்கு நேர்மறை எண்ணங்கள் அதிகம்.

**கீழ் உதடு பருத்து இருப்பது :**
இந்த வகையினர் சிறந்த செயற்திறனாளர் மற்றும் இவர்களது திறமையால் மிகவும் பிரபலமாகவும் இருப்பார்கள்.
மேலும் இவர்கள் எந்த ஒரு இடத்திலும் அனைவரையும் கவரும் வண்ணம் இருக்க விரும்புவார்கள். இந்த வகையினர் நல்ல நகைச்சுவைக் குணம் படைத்தவர்கள் மற்றும் இனிமையானவர்களாகவும் இருப்பார்கள்.

# அனுபவங்களே வாழ்க்கையின் கதவுகள்

பா.பாலாஜினி

பரந்த இந்த உலகம் நிறைந்த மக்களைக் கொண்டு அனுதினமும் சுழல்கிறது. உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதர்களும் ஏதோ ஒரு வகையில் ஒருவருடன் ஒருவர் மர்மப் பிணைப்புக்களால் பிணைக்கப்பட்டுள்ளார்கள். சதா நேரமும் ஒவ்வொரு கனவுடன் அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் ஏதோ ஒரு பிரச்சினை அலைமோதிக்கொண்டு தான் இருக்கின்றது. ஆனால், அவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயங்குகின்றார்கள். தூர ஓடிவிட நினைக்கிறார்கள். கனவுகளையும், ஆசையையும் மனதிலே சுமந்து கொண்டு இருந்தால் பிரச்சினைகளும், இடர்களும் வருவது இயல்பு தானே. அதற்காக அந்த ஆசைகளையும், கனவுகளையும் நிறைவேற்ற முடியவில்லை என அவற்றை அழித்து விடுகிறார்கள். அல்லது தாமே அழிந்து விடுகிறார்கள். எடுத்துக் கொண்ட இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு முதலில் மனத்துணிவு தான் அவசியம். மனத்துணிவு இல்லாதவர்கள் கனவுகளை உருவாக்கக்கூடாது.

ஆனால் கனவுகள் இல்லாவிடில் வாழ்க்கை எங்கே? கனவுகள் இல்லாத வாழ்க்கை வெறும் நிழல்தான். எனவே கனவு காணுங்கள். ஆனால் அதை நிறைவேற்றும்போது வருகின்ற இடர்களையும், கஷ்டங்களையும் கண்டு அஞ்சாதீர்கள். அவற்றை எதிர்த்துத் துணிவாக நில்லுங்கள். அந்த இடர்கள்தான் உங்களுக்குச் சிறந்த அனுபவத்தை பெற்றுத் தரக்கூடியன. 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது போல வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது; வாழ்வில் வெற்றி பெறுவதற்கு. அனுபவச் சாதனையில் சிறிது பட்டை தீட்டப்படுதலும் வெற்றிக்கு மிகவும் அவசியமாகும். அனுபவமில்லாத மனித வாழ்க்கை வேரற்ற மரம் போன்றதாகும். வாழ்க்கையில் சிறப்புப் பெற்று உயர்ந்து உலக மக்கள் எவராலும் போற்றப்படுகின்ற பெரியார்களான அன்னைதிரேசா, அப்துல்கலாம், ஆப்ரஹாம் லிங்கன் போன்றோர் வாழ்க்கையில் ஏராளமான இடர்களுக்கு முகம் கொடுத்தவர்கள் தான். உதாரணமாக எடுத்துக் கொண்டால் படிப்பதற்குப் பணம் இல்லையே, நல்ல



ஆடை இல்லையே என்று ஆப்ரஹாம்லிங்கன், அப்துல் கலாம் போன்றோர் தங்களுடைய கல்வி கற்கும் ஆசையைக் கைவிட்டு இருந்தார்கள் என்றால் இன்று இவ்வளவு பெரியவர்களாக அவர்களால் உருவாகி இருக்கமுடியுமா? இல்லையே.

வாழ்க்கையில் நாம் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு பிரச்சினைகளும், சவால்களும் எங்களைப் புடம் போட்டு புனிதரராக மாற்றுகின்றன. பிற்கால வாழ்க்கையில் வாழ்வதற்கான தன்னம்பிக்கையும், துணிவையும் ஏற்படுத்தித் தருகின்றன. ஐயோ, என்னால் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியவில்லை. இனிமேல் எதுவும் செய்யமுடியாது என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். அவ்வாறு நினைத்து அந்த முயற்சியில் இருந்து நீங்கள் தந்திரமாக தப்பிவிட்டேன் என்று நினைப்பீர்கள். ஆனால் உண்மையில் நீங்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் வாழ்க்கையில் ஒருபடி கீழே இறங்கி விட்டீர்கள் என்பது தான் உண்மை. பிரச்சினைகள் உங்களைத் துரத்திக் கொண்டிருக்கின்றன என்றால். நீங்கள் எதையோ சாதிக்கப்போகின்றீர்கள், உங்கள் வாழ்வில் ஒருபடி மேலே முன்னேறப் போகின்றீர்கள் என்று எண்ணி மகிழ்ச்சியடையுங்கள். இதனால் தானோ என்னவோ துன்பத்திலும் சிரிக்க வேண்டும் என்ற ஒரு வார்த்தை உள்ளது. நாம் வாழ்வில் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு பிரச்சினையும் ஒவ்வொரு அனுபவங்களைத் தருகின்றன. அந்த அனுபவங்களும் வாழ்வின் ஒவ்வொரு நிலைக்குமான கதவுகளைத் திறந்து விடுகின்றன.

மனித மனமானது ஒரு நிலையில் நிற்கமுடியாதது. எப்போதும் எங்கேயாவது அலைந்து கொண்டே இருக்கும். ஆனாலும் துறவிகள், ஞானிகள் போன்றோர் தம் மனதை அடக்கி நீண்ட காலமாகத் தவம் செய்கின்றார்கள். ஞான நிலையை அடைகின்றார்கள். சாதாரண மனிதர்களாகிய எம்மால் அவ்வாறு மனதை நீண்ட நேரம் அடக்கித் தவம் செய்ய முடியாதுதான். ஆனாலும் யோகாப் பயிற்சியை மேற்கொள்ளல் மற்றும் மனதுக்கு இதமான மெல்லிசைப் பாடல்களைக் கேட்டல் முதலியவற்றால் எம் மனதையும் இலகுவாக ஒரு நிலைப்படுத்தி விட முடியும்.

அடுத்ததாக இந்த அனுபவங்களை நாம் சரியான முறையில் சரியான வகையில் பிரயோகிக்க வேண்டும். அவற்றைக் கற்றுக் கொள்வதற்கு நிறைய நல்ல நல்ல புத்தகங்களைத் தேடிப் படித்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் சுருக்கமாக: சாரி



> பணக்காரர்கள்தான் மேலும் பணக்காரர்களாகி வருகின்றனர், ஏழைகள் மேலும் ஏழைகளாகத் தான் வாடுகின்றனர் என்று நீங்கள் கருதலாம். ஓரளவுக்கு வளமான வாழ்க்கைக்கு அவசியப்படும் சௌகரியங்களை அளவுகோலாகக் கொண்டு பார்த்தால், பரம ஏழைகளாக இருந்தவர்கள்கூட இன்றைக்கு வசதிகளுடன் வாழ் கின்றனர்.

# பொருளாதார உதவிகள் தேவைப்படும் உலகின் 100 கோடி மக்கள்



உலகம் செல்வம் மிக்கதாக இருக்கிறது. இனிமேலும் செல்வந்த உலகமாகும். கவலையை விடுங்கள். நாம் எல்லோருமே பணக்காரர்கள் அல்லர்தான்; 100 கோடிப் பேர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் ஒரு நாளைக்கு 3 டொலர்கள் அல்லது அதற்கும் குறைவான ஊதியத்துடன்தான் நாளை ஓட்டுகின்றனர். 1800ஆவது ஆண்டு வரையில் எல்லோருமே இந்த 3 டொலர்களுக்கும் குறைவான ஊதியத்தைத்தான் பெற்று வந்தனர். செல்வம் சேருவது 17ஆம் நூற்றாண்டில், ஹாலந்தில்தான் முதலில் தொடங்கியது. 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அமெரிக்கக் காலனிகளுக்குப் பரவியது. இப்போது உலகின் பிறபகுதிகளுக்கும் பரவியிருக்கிறது.

செல்வம் குவியும் வேகம் திடுக்கிட வைப்பதாக இருக்கிறது என்பதில் பொருளாதார நிபுணர்களும் வரலாற்று அறிஞர்களும் கருத்தொற்றுமையுடன் இருக்கிறார்கள். 2010ஆம் ஆண்டளவில் உலகின் பல நாடுகளில் சராசரி தினசரி ஊதியம் - ஜப்பான், அமெரிக்கா, போட்ஸ்வானா, பிரேசில் உட்பட - 1800இல் இருந்ததுடன் ஒப்பிடுகையில், 1,000 முதல் 3,000 மடங்கு வரை உயர்ந்திருக்கிறது. கூடாரங்களிலும் மண் சுவர் வீடு களிலும் வசித்த மக்கள் இப்போது நகரங்களில் பல மாடி அடுக்ககங்களில் வசிக்கின்றனர். தண்ணீரால் பரவும் நோய்களால் இளவயதிலேயே சாவைச் சந்தித்த இனம், இப்போது சராசரியாக 80 வயதைத் தாண்டியும் வாழமுடிகிறது. ஏதுமே அறியாமல் அறியாமையில் மூழ்கிக் கிடந்தவர்கள் எழுத்தறிவு மிக்கவர்களாக முடிந்திருக்கிறது.

### ஏற்றத்தாழ்வு குறைந்திருக்கிறது

பணக்காரர்கள்தான், மேலும் பணக்காரர்களாகி வருகின்றனர், ஏழைகள் மேலும் ஏழைகளாகத் தான் வாடுகின்றனர் என்று நீங்கள் கருதலாம். ஓரளவுக்கு வளமான வாழ்க்கைக்கு அவசியப்படும் சௌகரியங்களை அளவுகோலாகக் கொண்டு பார்த்தால், பரம ஏழைகளாக இருந்தவர்கள்கூட இன்றைக்கு வசதிகளுடன் வாழ்கின்றனர். அயர்லாந்து, சிங்கப்பூர், பின்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் மிகவும் வறியவர்கள் என்று அடையாளம் காணப்படும் மக்கள்கூட போதிய உணவு, அடிப்படைக் கல்வி, தங்குமிடம், மருத்துவக் கவனிப்பு போன்றவற்றைப் பெற்றுள்ளனர். சில தலைமுறைகளுக்கு முன்னால் அவர்களுடைய மூதாதையர்கள் இவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டார்கள்.

செல்வ வளத்தில் ஏற்றத்தாழ்வு என்பது மாறிக் கொண்டேயிருக்கும். நீண்ட கால அடிப்படையில் பார்க்கும்போது அது குறைந்திருப்பது தெரிய வரும். 1800, 1900 காலங்களில் செல்வ வள ஏற்றத் தாழ்வு மிக மிக அதிகமாக இருந்தது. இதை பிரெஞ்சுப் பொருளாதார அறிஞர் தாமஸ் பிக்கெட்டியும் ஒப்புக்கொள்கிறார். உணவு, உடை, இதர நுகர்வுகளின் அடிப்படையில் பார்த்தாலும் ஒரே நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையிலும், வெவ்வேறு நாடுகளுக்கு இடையிலும் ஏற்றத்தாழ்வு வெகுவாகக் குறைந்திருக்கிறது.

### பால் காலிரின் வேண்டுகோள்

எந்தக் காலமாக இருந்தாலும் பிரச்சினை என்பது வறுமையைச் சுற்றித்தான் இருக்கிறதே தவிர, ஏற்றத்தாழ்வுகளைப் பற்றியல்ல. கடந்த 40 ஆண்டுகளில் அன்றாட சராசரி ஊதியம் ஒரு டொலர் அல்லது 2 டொலர் மட்டுமே பெற்றவர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துவிட்டது என்று உலக வங்கியின் மதிப்பீடு கூறுகிறது. அதாவது, குறைந்தபட்ச ஊதியம் அதிகமாகிவிட்டது என் கிறது.

உலகில் இப்போது வாழும் 700 கோடி மக்களில் கடைசிப் படிநிலையில் வாடும் 100 கோடி மக்களுக்கு உதவ வேண்டும் என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பொருளாதார அறிஞர் பால் காலிர் எமக்கு வேண்டுகோள் விடுக்கிறார். அப்படி உதவ வேண்டியது எம்முடைய கடமைதான். 50 ஆண்டுகளுக்கு முன்னால் 500 கோடி மக்களில் கிட்டத்தட்ட 400 கோடிப் பேர் மிகவும் மோசமான நிலையில் பரம ஏழைகளாகத்தான் வாழ்ந்தார்கள் என்பதை அவர் நினைவுபடுத்துகிறார். 1800இல் வாழ்ந்த 100 கோடிப் பேரில் 95 வீதமானவர்கள் வறுமையில்தான் வாடினர்.

உழைக்கும் வர்க்கத்தாரின் வாழ்க்கைத் தரத்தை நம்மால் உயர்த்த முடியும். மிகவும் குறைவாகவுள்ள உற்பத்தித் திறனை, மனித இனத்துக்கே உரித்தான படைப்புத்திறனைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் உயர்த்த முடியும். பணக்காரர்களிடமிருந்து பறித்து ஏழைகளுக்குக் கொடுப்பதன் மூலம் ஓரளவுக்குத்தான் ஏற்றத்தாழ்வைக் குறைக்க முடியும். அதுவும் எப்போதோ ஒரு முறைதான் அது சாத்தியம். சந்தையில் பலமுறை சோதிக்கப்பட்ட வழி முறைகள் மூலம் வருவாயைப் பெருக்கி, அதை எல்லோரும் அடையும் வகையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டால் அடுத்த நூறாண்டுகளில் அனைவருமே அதிலும் குறிப்பாக, மத்திய தர வர்க்கம் வசதியாக வாழும் நிலையை ஏற்படுத்தி விடலாம்.

1978 முதல் சீனத்திலும் 1991 முதல் இந்தியாவிலும் ஏற்பட்டுவரும் வியத்தகு மாற்றங்களைப் பாருங்கள். உலக மக்கள் தொகையில் 40 வீதமானவர்கள் இவ்விரு நாடுகளிலும் வாழ்கின்றனர். அமெரிக்காவில் கூட உண்மையான வருவாய் மதிப்பு மெதுவாக உயர்ந்து கொண்டே வருகிறது. ஆனால், மற்றவர்கள் சொல்வதென்னவோ வருவாயின் உண்மை மதிப்பும் குறைந்து கொண்டே வருகிறது என்று. பொருள்கள் மற்றும் சேவை களின் தரம் உயர்ந்துகொண்டே வருவதாலும் ஊதியமற்ற இதரப் பணப் பயன்களாலும் உண்மையான ஊதிய மதிப்பும் உயர்ந்துகொண்டு வருகிறது என்று ஜார்ஜ் மேசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் டோனல்ட் தெரிவிக்கிறார். 1950-களில் இருந்ததைப் போல இரு மடங்குக்கு மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்திருக்கிறது. 1950 களில்தான் அமெரிக்காவின் பெரும்பாலான குழந்தைகள் இரவுச் சாப்பாடு இல்லாமல் பசியோடு படுத்துறங்கினர்.

ஏழைகளைச் சுரண்டி அல்ல, முதலீடுகள் மட்டும் காரணம் அல்ல, இப்போதுள்ள அமைப்புகள் மூலமும் அல்ல, வெறும் கருத்துகளாலும் அல்ல; தத்துவ அறிஞரும் பொருளாதார நிபுணருமான ஆடம் ஸ்மித் கூறிய படி - சமத்துவம், விடுதலை, நீதி ஆகிய லட்சியங்களைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்ததன் மூலமே இது சாத்தியமானது. ஐரோப்பியர்கள் கூறும் சுதந்திரச் சந்தையை ஏற்படுத்தத் தாராளமயம் உதவியது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கை சாமானியர்களையும் சமூகக் கண்ணியத்தோடு விரும்பிய உற்பத்தியை மேற்கொள்ள அனுமதித்தது. இதன் விளைவாக அவர்கள் அசாதாரணமான முறையில் ஆக்கபூர்வமாகவும் ஆற்றலுடனும் செயற்பட்டுச் சாதித்துள்ளனர்.

### மகிழ்ச்சிகரமான விபத்துக்கள்

வட மேற்கு ஐரோப்பாவில் 1517 முதல் 1789 வரையில் நிகழ்ந்த சில மகிழ்ச்சிகரமான விபத்துக்கள் (சம்பவங்கள்) காரணமாகத்தான் விடுதலைச் சிந்தனை பரவியது. சீர்திருத்தங்கள், டச்சு (ஹாலந்து) நாட்டில் அரசுக்கு எதிராக மூண்ட கலகம், இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் ஏற்பட்ட புரட்சிகள்தான் அத்தகைய மகிழ்ச்சிகரமான சம்பவங்கள். இவை மக்களை அவர்களுடைய அடிமைத் தளைகளிலிருந்து விடுவித்தன. எதையும் முயன்று பார்த்துவிடுவது என்ற சிந்தனைப் போக்குள்ள முதலாளித்துவ எண்ணம் கொண்டோர் வாழ்க்கைத் தரம் உயரக் காரணமாக இருந்தனர். முதலில் நான் இந்த உற்பத்தி முறையை முயன்று பார்க்கிறேன்; இதில் கிடைக்கும் லாபம் எனக்கு, வேலை உனக்கு, உற்பத்தி நாட்டுக்கு என்பது முதல்கட்டம். அடுத்த கட்டத்தில் மேலும் சிலர் போட்டிக்கு வந்து, முதல் முதலாளிக்குப் போட்டியை அளித்து லாபத்தைக் குறைக்கப் பார்ப்பார்கள். இதன் விளைவு, பொருளின் விலையும் சரியும், கொள்ளை லாபம் என்பதும் குறையும். மூன்றாவதாக, புதிய உற்பத்தியால் அனைவரின் வாழ்க்கைத் தரமும் கூடும். முதலீடு செய்தவரும் பணக்காரர் ஆவார். அது அப்படித்தான் நடந்தது.

பொருள் உற்பத்தி தொடர்பாக ஆயிரம் எண்ணங்கள் இருக்கலாம்; அவை வெற்றிகரமாகக் கைகூட மனித வளமும், மூலதனமும், நல்ல நிறுவனங்களும் தேவையாயிற்றே என்று நீங்கள் கூறலாம். உலக வங்கியில் இருப்பவர்கள் அப்படித்தான் தவறாக நினைக்கிறார்கள். நல்ல கருத்துக்களைச் செயற்படுத்த மூலதனமும் நிறுவனங்களும் அவசியம் என்பது உண்மைதான். உச்ச நீதிமன்றம் சிறப்பாகச் செயற்பட பளிங்குக் கல் பதிக்கப்பட்ட தரையும், மையப்படுத்தப்பட்ட வெப்ப மூட்டி அறை அமைப்பும் அவசியம் என்று கருதலாம். அதைப் போல மூலதனமும் நிறுவனங்களும் மட்டும் போதுமான அடிப்படைகள் அல்ல.

*(நன்றி - த நியூ யோர்க் ரைம்ஸ்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1776 - அமெரிக்கப் புரட்சியின்போது உளவு பார்த்ததாக அமெரிக்கப் படை வீரர் நதான் கேல் தூக்கிலிடப்பட்டார்.

1857 - ரஷ்யப் போர்க் கப்பல் லெபோர்ட் புயலில் சிக்கிக் கவிழ்ந்ததில் பின்லாந்து குடாவில் கப்பலிலி ருந்த 826 பேரும் உயிரிழந்தனர்.

1888 - நஷனல் யோக்கிறபி சஞ்சிகை முதன் முதலாக வெளியிடப்பட்டது.

1908 - பல்கேரிய சுதந்திரப் பிரகடனம் அறிவிக்கப்பட்டது.

1914 - டச்சுக் கடலுக்கு அப்பால் ஜேர்மனியரின் நீர் மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்ட பிரித்தானியக் கப்பல்களான HMS அபோகிர், ஹோக் மற்றும் கிரைசி ஆகியன மூழ்கடிக்கப்பட்டதில் 1400 பேர் உயிரிழந்தனர்.

1934 - வேல்ஸ் கிறஸ்போட் கொலரியில் இடம் பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 266 சுரங்கத் தொழிலாளர்களும், மீட்பு அணியினரும் உயிரிழந்தனர்.

1941 - இரண்டாம் உலகப் போர், யூதர்களின் புது வருட தினத்தன்று, ஜேர்மன் SS படையினரால், உக்ரைன் வின்னிற்சியாவில் 6000 யூதர்கள் கொல்லப்பட்டனர். 24000 யூதர்கள் வரை சில நாள்களுக்கு முன்பு கொல்லப்பட்ட சம்பவத்தில், தப்பிப் பிழைத்த யூதர்களே இந்த 6000 பேராவர்.

1965 - இந்தியா பாகிஸ்தானிடையேயான இரண்டாவது காஷ்மீர் போர் ஐ.நாவின் போர் அழைப்பையடுத்து, முடிவுக்கு வந்தது.

1975 - அமெரிக்க ஜனாதிபதி ஜெரால்ட் போட் மீதான கொலை முயற்சி முறியடிக்கப்பட்டது.


1980 - ஈராக், ஈரானை ஆக்கிரமித்தது.

2002 - புத்தளம்-வன்னி வீதியைத் திறப்பது பற்றி யோசனை. யாழ்-கண்டி வீதியும் 24 மணி நேரமும் திறந்திருக்குமென பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு.

- ஹாட்லிக் கல்லூரி அதிபர் கடத்தப்பட்டு 15 பேர் கொண்ட குழுவால் தாக்கப்பட்டார். அவரது வீட்டில் அட்டகாசம்.

- சிங்களவர் நலனுக்காக உருவாக்கிய கல்விக் கொள்கை தமிழர் மீது திணிப்பு எனக் கல்விப் பேரவை மாநாட்டில் இளங்குமரன் தெரிவிப்பு.

2013 - பாகிஸ்தான் தேவாலயம் ஒன்றின் மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், 75 பேர் வரை கொல்லப்பட்டனர்.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

# யாருக்குச் சொந்தம்...?

வீட்டுத் தோட்டத்தில் நட்டுவைத்த தென்னம்பிள்ளை ஒரு சில ஆண்டுகளுக்குப்பின் நன்றாக வளர்ந்து காணப்பட்டது. முத்து தென்னம்பிள்ளையை நடும்போது அவன் வீட்டின் அருகில் வீடு எதுவும் இல்லை. ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் வீராசாமி என்பவன் அங்கு ஒரு வீடு கட்டிக் கொண்டு வசிக்கலானான். முதது நட்டுவைத்த தென்னம்பிள்ளை வீராசாமியின் தோட்டப்பக்கம் சாய்ந்து வளர்ந்தது. இளநீர்க்குலைகள், செழிப்பாகக் காய்த்துக் குலுங்கின.

முத்து குலைகளைப் பறிக்க முயன்றபோது, வீராசாமி அவனைத்தடுத்து விட்டான். தென்னை மரம் அவன் வீட்டுத் தோட்டத்துக்குள் சாய்ந்து வளர்ந்து இருப்பதால், காய்கள் தனக்குத்தான் சொந்தம் என்று வாதாடினான். இது என்ன அநியாயமாக இருக்கிறதே என்று கோபமடைந்த முத்து, நேராக கிராமத்துத் தலைவரைத் தேடிச் சென்றான். நடந்ததைக் கூறி நியாயம் கேட்டான். உடனே, கிராமத் தலைவர் வீராசாமியைக் கூப்பிட்டு அனுப்பி பஞ்சாயத்தைக் கூட்டினார்.



வீராசாமியோ எவருக்கும் பயப்படாமல் தன் மீசையை முறுக்கி விட்டவாறு ''நான் வேண்டுமென்றே தென்னை மரத்தை என் வீட்டுப்பக்கம் வளைக்கவில்லை, அது தானாகவே வளைந்து என் வீட்டுப்பக்கம் வந்து விட்டது. அதனால் அதன் காய்கள் எனக்குத் தான் சொந்தம்" என்று அடித்துப்பேசினான். தலைவரால் வீராசாமியை எதிர்த்துப் பேச முடியவில்லை.

ஒருவருடம் கடந்தது. தென்னை மரத்தைச் சுற்றி ஒரு கொடி படர்ந்தது. அதில் ஏராளமாக பூக்கள் பூத்து, காயாகக் கனிந்தன. அந்தப் பழங்களின் வெளியில் படர்ந்திருந்த நார் உதிர, உதிர காற்றில் பறந்து வீராசாமியின் வீட்டில் உள்ளவர்கள் மேல்பட்டு, தோலில் நமச்சலை ஏற்படுத்தியது.

உடனே வீராசாமி தன் மீசையை முறுக்கியபடி, முத்துவை அதிகாரமாக அழைத்தான். "முத்து தென்னை மரத்தில் படர்ந்து வளர்ந்துள்ள கொடியைப் பார்த்தாயா? அதில் கனியும் பழங்களின் நார் உதிர்ந்து, எங்கள் தோலில் நமச்சல் உண்டாக்குகிறது. முதற்காரியமாக அந்தக் கொடியை வேருடன் பிடுங்கி எறி!" என்று கட்டளையிட்டான். உடனே முத்து "சரிதான், போடா! நானா கொடியைத் தென்னை மரத்தின் மீது படரச் சொன்னேன்? அது தானாகவே படர்ந்து உன் வீட்டுப்பக்கம் வந்து விட்டது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று அலட்சியமாகப் பதில் சொல்லி விட்டுப் போய் விட்டான். உடனே, வீராசாமி தானே பழங் களைப் பறிக்க முயன்றான். அதனால் அதிக அளவில் நார் உதிர்ந்து எல்லோருக்கும் அரிப்பு அதிகமாகியது. உடனே, வீராசாமி கிராமத் தலைவரிடம் புகார் கொடுக்க, மீண்டும் பஞ்சாயம் கூடியது.

வீராசாமி தன் பக்கத்து நியாயத்தை எடுத்துக் கூறினான்.

"என்னப்பா வீராசாமி போன தடவை நீ என்ன சொன்னாய்? உன் வீட்டுப் பக்கம் தென்னை மரம் வளைந்திருப்பதால் காய்கள் உனக்குத் தான் சொந்தம் என்று அடித்துப் பேசினாயே! அப்படிப் பார்த்தால் இந்த நமச் சலை உண்டாக்கும் பழங்களும் உனக் குத் தான் சொந்தம் தாராளமாக நீ எடுத்துக்கொள், அனுபவிராஜா அனுபவி" என்றார் கிராமத்துத் தலைவர். 'தன் வாயினால் தானே கெட்டான்' என்று வீரா சாமி அவமானத்தோடு திரும்பினான். கிராமத் தலைவரின் யோசனைப்படி அந்தக் கொடியை வேண்டுமென்று நட்டதே முத்துத்தான் என்று அவனுக்குத் தெரியாது.

நா.ஸ்ரீகிருஷ்ணன்

# விரல்கள்



ஒற்றைக் கையில் ஐந்து விரல்
மற்றக் கையில் ஐந்து விரல்
இரண்டு கையில் பத்து விரல்
இரண்டு காலில் பத்து விரல்



பத்தும் பத்தும் இருபது
ஐந்து நான்கு இருபது
கையில் பத்து காலில் பத்து
எல்லாம் விரல்கள் இருபது

எந்தப் பக்கம் கூட்டினாலும்
இருக்கும் விரல்கள் இருபது
இதனை எண்ணிப் பழகிவிட்டால்
என்றும் வரா பிழைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழத்தின்



# உடல்நலப் பயன்கள்

■ அ.அஜித் சஞ்ஜீவ்

வாழைப்பழம் உடலில் நீர்ச்சத்தை அதிகரிக்கச் செய்யும் மிக ஆரோக்கியமான ஒரு கெடுதலும் தராத பழவகையாகும்! இதில் அதிகமான பொட்டாசியம் இருப்பதால் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உகந்ததாகும். சோடியம் உப்புக் குறைவாக இருப்பதால் குருதி அழுத்தநோய் உள்ளவர்களும் சாப்பிடலாம். குழந்தைகளின் ஊட்டச்சத்துக்கும் உகந்ததாகும்.

தொடர்ச்சியாக இருமல் இருந்து வந்தால் கரு மிளகு கால் தேக்கரண்டி எடுத்துப் பொடி செய்து அதில் பழுத்த வாழைப்பழத்தைக் கலந்து இரண்டு, மூன்று வேளை சாப்பிட்டு வர இருமல் சரியாகும். காசநோய் உள்ளவர்கள் அரைக் கப் தயிரில் வாழைப்பழத்தைப் பிழிந்து, ஒரு தேக்கரண்டி தேன், ஒரு கப் இளநீர் ஆகியவை சேர்த்து நாள்தோறும் இரண்டுவேளை வீதம் சாப்பிட்டு வர அந்தப் பாதிப்பில் இருந்து படிப்படியாக விடுபடலாம்.

சின்னம்மை, மஞ்சள் காமாலை ஆகியவற்றுக்குத் தேனில் வாழைப்பழத்தைப் பிசைந்து நாள்தோறும் இருவேளை சாப்பிடவேண்டும். பசும்பாலுடன் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வர அஜீரணம் சரியாகும். தொடர்ந்து நாள்தோறும் இரண்டு தொடக்கம் மூன்று வேளை இவ்வாறு சாப்பிட்டு வந்தால் மூலநோய் குணமாகும்.

பச்சை வாழைப்பழங்கள் வயிற்றுப் பாதையில் குடல் புண்களை ஆற்றும் தன்மையுடையன. வயிற்றில் உள்ள குடல்களில் சுரக்கும் அமிலங்களும் நச்சுப் பொருள்களும் அரிப்பதன் காரணமாக குடல் புண் எனப்படும் அல்சர் ஏற்படுகிறது. வாழைப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இதிலிருந்து விடுபடலாம். குடல்களில் பழுதுபட்டமெல்லிய சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றிவிடும் சக்தி வாழைப்பழத்துக்கு உள்ளது.

மலச்சிக்கல் உள்ளவர்கள் மற்றும் மூலநோய் குறைபாடு இருப்பவர்கள் தினமும் வாழைப்பழம் ஒன்றைச் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல், மூலநோய் ஆகியவற்றின் குறைபாட்டிலிருந்து விடுபடலாம். மேலும் தினமும் இரவு உணவுக்குப் பின்பு ஒரு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால், நல்ல ஜீரண சக்தி உண்டாகும். எந்த வயதினராக இருந்தாலும், கண்பார்வை குறைய ஆரம்பித்தவுடன் அவர்களுக்குத் தினசரி உணவில் செவ்வாழைப்பழம் வேளைக்கு ஒன்று வீதம் 21 நாள்களுக்குக் கொடுத்து வந்தால் கண்பார்வை தெளிவடைய ஆரம்பிக்கும்.

திருமணமாகிப் பல ஆண்டுகளாகியும் கர்ப்பமே தரிக்கவில்லை என்று மனம் வருந்திக் கொண்டு இருக்கும் தம்பதியர்கள் செவ்வாழைப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் உயிர்சக்தி அணுக்கள் போதுமான அளவில் பெருகி கருத்தரிக்க வாய்ப்பாகும். வாழைப்பழத்தைத் தண்ணீர் விட்டுக் கரைத்து மூன்றுவேளை சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நின்று விடும்.

*கட்டுரையாளர்: அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்.*



# மூன்றாம் கட்டத்தில் ஏமாற்றமே எஞ்சியது

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மூன்றாம் கட்டப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை நிறைவுக்கு வந்தன. முதலாம், இரண்டாம் கட்டங்களைப் போலல்லாமல் மூன்றாம் கட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஏமாற்றமே எஞ்சியது.

மூன்றாம் கட்டத்தில் எறிபந்தாட்டம், கரம், கரப்பந்தாட்டம், சதுரங்கம், உடற்பயிற்சி ஆகிய போட்டிகளில் வடக்கு மாகாணம் களமிறங்கியது. போதியளவு பதக்கங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மூன்று பதக்கங்களே வடக்குக்கு கிடைத்தன. அவற்றில் தங்கப்பதக்கம் எதுவும் கிடைக்கவில்லை.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட எறிபந்தாட்ட அணி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றியது. தங்கம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது குறித்த அணியிடம் இருந்து தவறிச் சென்றது. அதிலும் இறுதியாட்டத்தில் முதல் செற்றைக் கைப்பற்றிய பின்னர் அடுத்த இரு செற்களையும் தொடர்ச்சியாக இழந்து தங்கத்தைத் தவறவிடுவதென்பது துரதிஷ்டவசமானது. கடந்த வருட தேசிய மட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியிருந்தது. இதனால் இந்த வருடம் அந்த அணியின் மீது நம்பிக்கை அதிகமாகவே இருந்தது. ஆனால் பதக்கங்கள் கிடைக்காதமை ஏமாற்றமே.

உடற்பயிற்சியில் இரு பதக்கங்கள் கிடைத்தன. பெண்கள் பிரிவில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய தீவகத்தைச் சேர்ந்த கரம்பன் சிறியபுஸ்பம் மத்திய மகா வித்தியாலயம் வெள்ளிப் பதக்கத்தையும், ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. கடந்த வருடம் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. இம்முறை வெண்கலமே கிடைத்தது. தவிர கடந்த வருடம் வெள்ளிப் பதக்கம் வென்ற இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியால் பதக்கமெதனையும் கைப்பற்ற முடியவில்லை. இவை பின்னடைவே. கடந்தவருடம் தேசியமட்ட கரம் தொடரில் கொக்கு வில் இந்துக்கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. இம்முறை அந்த அணியால் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள இயலவில்லை.




கடந்த வருட மாகாணமட்டப் போட்டிகளில் ஒட்டு மொத்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் 6 ஆம் இடத்தைப் பிடித்தது. நடப்பு வருடத்தின் முதலிரு கட்டங்களின் முடிவில் வடக்குக்கு ஏராளமான பதக்கங்கள் கிடைத்தன. குறிப்பாக பளுதூக்கல், கபடி, கால்பந்தாட்டம் ஆகியவற்றில் வடக்கு பதக்கங்களை அள்ளியது. இதனால் இம்முறை 6 ஆம் இடத்தைவிட்டு முன்னேறக்கூடிய வர்ய்ப்பு வடக்கு மாகாணத்துக்கு மிக அதிகமாக இருந்தது. இந்தக் கணிப்பை கடந்த திங்கட்கிழமை நடைபெற்று முடிந்த மூன்றாம் கட்டம் புரட்டிப் போட்டுள்ளது.

அடுத்ததாக ஒக்ரோபர் மாதம் மத்திய பகுதியில் தடகளத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. அஞ்சல் ஓட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியின் அணிக்கும், கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரியின் நெப்தலி ஜொய்சன், மகாஜனக் கல்லூரியின் அனித்தா ஆகியோரும் பதக்கத்தைக் கைப்பற்றுவது கிட்டத்தட்ட உறுதியாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த மூன்று பதக்கங்களை வைத்து வடக்கு 6 ஆம் இடத்தைவிட்டு முன்னேற முடியும் என்று ஒருபோதும் சொல்லிவிட முடியாது. எனவே தரப்படுத்தலில் வடக்கின் எழுச்சிக்கு, அடுத்த மாதம் மத்திய பகுதியில் நடைபெறவுள்ள தடகளத் தொடரில் ஏனைய மாணவர்களும் தமது பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | |
| 5 | 3 | | | 2 | | | 8 | |
| | | | | | 1 | | 9 | |
| 3 | 8 | | | | | | 6 | 9 |
| 4 | | 6 | | | 5 | | | |
| | 2 | 7 | | | 3 | | | 4 |
| | | | 6 | | | 3 | | |
| 7 | | 9 | | | | | | 6 |
| | | 3 | | 4 | 7 | | 2 | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 5 | 7 | 2 | 9 | 6 | 8 | 1 |
| 8 | 9 | 6 | 1 | 4 | 5 | 3 | 7 | 2 |
| 2 | 7 | 1 | 6 | 8 | 3 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 9 | 5 | 6 | 2 | 7 | 1 | 8 |
| 5 | 8 | 7 | 9 | 3 | 1 | 4 | 2 | 6 |
| 1 | 6 | 2 | 4 | 7 | 8 | 5 | 9 | 3 |
| 7 | 1 | 3 | 8 | 5 | 4 | 2 | 6 | 9 |
| 9 | 5 | 4 | 2 | 1 | 6 | 8 | 3 | 7 |
| 6 | 2 | 8 | 3 | 9 | 7 | 1 | 5 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



உங்க பற்பசையில உப்பிருக்கா...?

பாத்ரூம்குள்ள கமராவோட படார் எண்டு கதவை திறந்துட்டு வாறீங்களே உங்களுக்கு துப்பிருக்கா

நல்லவேளை துண்டு கட்டி இருந்தேன்.




தாலிகட்ட வந்தன் பாரு... முதல்ல உங்க வாயை கட்டி வைக்கனும்.



# சூர்யாவின் 'எஸ்3' டிசெம்பரில் வெளியீடு

ஹரி இயக்கத்தில், சிங்கம், 'சிங்கம் - 2' படங்களைத் தொடர்ந்து 'சிங்கம்' - 3 ஆம் பாகமான 'எஸ்3' படத்தில் சூர்யா நடித்து வருகிறார். ஸ்ருடியோ கிறீன் தயாரிப்பில் உருவாகி வரும் இந்தப் படம், டிசெம்பர் 16ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதில் சூர்யாவுக்கு ஜோடியாக அனுஷ்காவும், பத்திரிகையாளர் வேடத்தில் ஸ்ருதி ஹாசனும் நடித்து வருகிறார்கள். மேலும், இந்தப் படத்துக்கு ஹரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். இந்தப் படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்புகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களின் பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில், லாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள், செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். விஷஜந்துக்களிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**இடபம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். சுப நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை, சரி செய்ய முயல்வீர்கள். லாபம் சுமார். மற்றவர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**கடகம்:** புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். குடும்ப விவகாரத்தில், சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**சிங்கம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கன்னி:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்யலாம். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், லாபம் சீராக இருக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**துலாம்:** குடும்ப விடயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள், நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பூர்வீக சொத்தின் மூலம், திடீர் லாபம் வரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** கருத்து வேறுபாடு உள்ளவரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** நண்பர்களால் பிரச்சினைக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பணியாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

Rithika Selvakumar Retweeted
டாலி @celindolly
நெருக்கமானவர்கள் தானே என்று மனசில தோன்றுகின்ற எல்லாம் பேசக் கூடாது. அப்புறம் நெருங்கினவர்கள் தூரமாகிவிடுவாங்க....
37 18



நாம குறைக்க வேண்டிய உப்புக்கள்

| | |
|---|---|
| மாமியார் | - சிடுசிடுப்பு |
| மருமகள் | - கடுகடுப்பு |
| கணவன் | - படபடப்பு |
| மனைவி | - நச்சரிப்பு |
| டீன்ஏஜ் | - பரபரப்பு |
| அரசியல்வாதிகள் | - ஆர்ப்பரிப்பு |
| ஆசிரியர்கள் | - கண்டிப்பு |
| நீதிபதி | - ஒத்திவைப்பு |



வள்ளுவர் 'வாசுகி' என்று கூப்பிட்டவுடனே கிணற்று வாளியை அப்படியே விட்டுட்டு பறந்து வந்தாங்களாம்....

இப்போவெல்லாம் நாம கூப்பிட்டா அவங்க அங்கேயே நிப்பாங்க வாளி பறந்து வரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு

## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | – | 700 | 800 | 800 | 600 |
| நண்டு | 250 | 400 | – | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | – | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | – | 800 | 600 | 600 | 500 |
| சுறா | 500 | 700 | – | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 400 | – | 600 | 450 | 500 | 400 |
| விளை | 650 | 500 | – | 600 | 450 | 600 | 500 |
| முரல் | 300 | 400 | – | 500 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | – | 400 | 400 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 200 | – |
| திரளி | 300 | 300 | – | 150 | 300 | – | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 250 | 350 |
| சூடை | 150 | 200 | – | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | – | – | 100 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | – | 400 | 400 | 300 | 270 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 150 | – | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | – | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 300 | – |

# வேப்பம்பூ சம்பல்



**தேவையான பொருள்கள் :-**

வேப்பம்பூ – 2 தேக்கரண்டி
புளி – சிறு எலுமிச்சங்காய் அளவு
உப்பு – 1 ½ தேக்கரண்டி
மிளகாய் வற்றல் – 6
கடுகு – 1 தேக்கரண்டி
பெருங்காயம் – தேவையான அளவு
கறிவேப்பிலை – தேவையான அளவு
சீனி – சிறு எலுமிச்சங்காய் அளவு
எண்ணெய் – 6 தேக்கரண்டி
அரிசி மா – 2 தேக்கரண்டி

**செய்முறை :**

வேப்பம்பூவை இரண்டு தேக்கரண்டி அளவு எண்ணெய் விட்டு, கருகாமல் நல்ல கரும் சிவப்பாக வறுத்துத் தூளாக்கிக் கொள்ளவும். சட்டியில் 4 தேக்கரண்டி அளவு எண்ணெய் விட்டு, கடுகு, கிள்ளிய மிளகாய் வற்றல், பெருங்காயம், கறிவேப்பிலை, இவற்றைத் தாளிக்கவும்.

புளியைக் கரைத்து, ஒரு டம்ளருக்கு கூடுதலாக விட்டு, உப்பு போட்டு, நன்றாகக் கொதிக்கும்போது சீனியைப் போடவும். சீனி கரைந்தவுடன் அரிசி மாவைக் கரைத்து விட்டு, சேர்ந்து கொதித்தபின் இறக்கவும். தூளாக்கிய வேப்பம்பூவைப் போட்டு கலந்து பரிமாறவும். இந்தச் சம்பலானது உடலுக்கு மிகவும் நல்லது.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 50 | 50 | 70 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 120 | 100 | 100 | 40 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 80 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 50 | 40 | 60 | 30 | 40 | 60 | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 100 | 100 | 100 | 100 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 140 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 120 | 80 | 100 | 90 | 70 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 30 | 40 | 70 | 30 |
| தக்காளி | 50 | 50 | 50 | 50 | 60 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 60 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 15 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 60 | 80 | 70 | 80 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 30 | 60 | 40 | 60 | 70 | 50 |
| கோவா | 80 | 90 | 70 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 160 | 150 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 100 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 40 | 30 | 30 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 300 | 300 | 240 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 90 | 100 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 120 | 110 | 80 | 140 | 200 | 80 | 100 |

# மளிகை பொருள்கள் தீர்ந்து விட்டால்....

- அடுப்பங்கரை அலுமாரியில் ஒரு பேப்பர் போடும் பேனா ஒன்றும் வைத்துக் கொள்ளுங்கள். அதில் தினமும் தீர்ந்து விட்ட சாமான் களைக்குறித்துவையுங்கள். கடைக் குச் செல்லும்போது இந்தச் சீட்டை எடுத்துச் சென்று வேண்டிய சாமான் களை மறந்து விடாமல் வாங்கி வரலாம். இதனால், கடைகளுக்கு அடிக் கடி ஓடும் விதத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்தலாம்.
- காய்கள், பழங்கள் வாங்கும்போது நல்ல சிவப்பு நிறமாக இருப்பதையே வாங்க வேண்டும். அவற்றில்தான் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது.
- ரசம் தயாரிக்கும்போது சிறிது முருங்கை இலை சேர்த்துக் கொதிக்க வைத்தால் ரசம் மணமாக இருக்கும். முருங்கைக் கீரை சேர்ப்பதால் நல்ல சத்தாகவும் இருக்கும்.
- முட்டைக் கோஸ் சமையல் செய்யும் போது, அதில் சிறிதளவு பால் ஊற் றுங்கள். அதிக சுவையாக இருக்கும். சத்தும் கூடும்.
- பிரியாணி தயார் செய்யும்போது நல்ல நிறமும் உதிரி, உதிரியாக இருக்கவும் வேண்டுமானால் அதில் சிறிதளவு எலுமிச்சைபழச்சாறுசேர்க்கவேண்டும்.

## நாளை

**புரட்டாதி-07**
வெள்ளிக்கிழமை
23.09.2016
திதி: ஸப்தமி மு.ப.09.36
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.08.56
ராகுகாலம்: 10.32-12.02 வரை
சுபநேரம்: 06.02-07.32 வரை

## இது புதுசு








சிறுவர்களுக்கான பொருத்தும் பென்சில் பெட்டிகள் அறிமுகமாகியுள்ளன. பிளாஸ்ரிக்கில் வடிவமைக்கப்பட்டு, தகடு தகடுகளாகப் பொருத்தி பென்சில் பெட்டியை உருவாக்க முடியும். 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்




## ருவீற் விதியில் மாற்றம்

ஒரு ருவீற்றில் அதிகபட்சம் வார்த்தை இடைவெளி உட்பட 140 எழுத்துக்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்பது பிரபல சமூக வலைத்தளமான ருவிற்றரின் விதியாகும்.

குறித்த விதியிலிருந்து டுவீட்டுகளில் இணைக்கும் படங்கள், வீடியோக்கள் போன்றவை தற்போது விலக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருவீற்றில் வீடியோ, புகைப்படங்கள் போன்றவை இணைக்கப்பட்டிருந்தால் அவையும் 140 எழுத்துக்களில் கணக்கெடுக்கப்பட்டு வார்த்தைகள் எண்ணிக்கை குறையும். இதனால் ஒரு ருவீற்றில் முடிய வேண்டிய தகவல் 2, 3 என நீளும்.

இணைப்புகள் (லிங்க்), படங்கள், வீடியோக்கள், கருத்துக்கணிப்பு போன்றவற்றை 140 விதியிலிருந்து விலக்க கடந்த சில மாதங்களாகவே ருவிற்றர் பரிசீலித்து வந்த நிலையிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இனி, ஒரு ருவீற்றருக்கான பதிலில் (ரிப்ளையில்) என சம்பந்தப்பட்டவரின் பெயரைக் குறிப்பிடும்போது, அது 140 கேரக்டரில் கணக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது. புகைப்படங்கள், ஜிஃப், வீடியோக்கள், கருத்துக் கணிப்பு போன்றவை 140க்குள் வராது எனத் தெரிவிக்கப்பட்டது.

## வாட்ஸ் அப்பின் புதிய வசதி

புதிய பல வசதிகளை நாள்தோறும் அறிமுகப் படுத்திவரும் குறுஞ்செய்திகளை அனுப்பும் சேவையில் முன்னிலை வகித்துவரும் வாட்ஸ் அப் சேவையானது தற்போது மற்றுமொரு புதிய சேவையை பயனர்களுக்காக அறிமுகப் படுத்தியுள்ளது.

வாட்ஸ் அப் மூலம் பெறப்பட்ட ஒரு தகவலை பலருக்கு அனுப்ப வேண்டுமாயின், இவ்வளவு காலமும் அதனைத் தனித்தனியாகவே அனுப்ப முடியும். ஆனால், ஒரே செய்தியை பலருக்கும் அனுப்ப வேண்டுமாயின் அதனை, ஒரே முறையில் அனுப்புவதற்கான நடைமுறையொன்றை வாட்ஸ்அப் அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை வாட்ஸ்அப் செயலியின் 2.16.230 எனும் பதிப்பினூடாக பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பதிப்பு இதுவரை கூகுள்பிளேஸ்டோரில் அறிமுகப்படுத்தப்படவில்லை.




# BCAS கம்பஸுக்கு சிறப்பு விருது



இலங்கையின் முன்னணி தனியார் கல்வியின் உயர் கல்வி நிறுவனமான BCAS கம்பஸுக்கு சர்வதேச QSi நிறுவனத்தனால் சிறப்பு விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி அன்று கட்டாரில் நடைபெற்ற QSi மாநாட்டின் போதே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது .

கணிம அளவீட்டுத் துறையில் புதிய கற்றல் வாய்ப்புக்களையும் அதே போன்று அத்துறையில் தொழில் விருத்திக்கான தொடர்ச்சியான கற்றல் வாய்ப்புக்களையும் வழங்குவதில் BCAS ஆற்றிவரும் பங்களிப்புக்காகவே 'Aacademic Impact Winner 2016' எனப்படும் இந்த விடே விருது QSi நிறுவனத்தினால் BCAS நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கணிம அளவீட்டுத் துறையில் தொழில் புரிபவர்களுகாக 2004 ஆம் ஆண்டு உருவக்கப்பட்ட QSi நிறுவனமானது உலகளாவிய வலையமைப்பைக் கொண்டு, கணிம அளவீட்டு துறையை மேம்படுத்துவதற்கானபல்வேறுவேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. வருடாவருடம்நடத்தப்படும் QSi மாநாடு இதில் முக்கிய ஒன்றாகும். பொதுவாக பிரித்தானியாவில் நடத்தப்படுகின்ற இந்த QSi மாநாடு இந்த வருடம் கட்டார் நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கட்டாரில் மிக வேகமாக வளர்ந்து வரும் கட்டட நிர்மாணத்துறையில்கணிமஅளவீட்டுத் துறை நிபுணர்கள் ஆற்றிவரும் பெரும் பங்களிப்பைக் கருத்தில் கொண்டே தமது வருடாந்த மாநாட்டை QSi நிறுவனம் இந்த முறை கட்டாரில் நடத்தியது.

தனியார் உயர் கல்வித்துறையில் 18வருட நம்பகத்தன்மையையும் சிறப்பையும் கொண்டுள்ள BCAS கம்பஸ் பல்வேறு துறைகளிலும், சர்வதேச தகைமைகளுக்கான உயர் கல்வி வாய்ப்புக்களை இலங்கையில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் வழங்கி வருகின்றது. குறிப்பாக, இலங்கையிலும் கட்டார் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் தொழில் புரிபவர்களும் கற்கக்கூடிய வசதியான ஏற்படுகளோடு உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது .

BCAS வழங்கும் தொழில் உத்தரவாதம் கொண்ட கற்கை நெறிகளில் கணிம அளவீட்டுத் துறை கற்கை நெறி முதன்மையானதாகும். இலங்கையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் மாத்திரமே கணிம அளவீட்டுத் துறை பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வந்த நிலையில், அதனை தனியார் துறையில் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை BCAS கம்பஸ் நிறுவனமே முதன்முறையாக ஆரம்பித்து வைத்தது. அன்று முதல் இன்று வரை கணிம அளவீட்டுத்துறை இள மாணிப் பட்டங்களையும் முதுமாணிப்பட்டங்களையும் வழங்கு வதில் BCAS கம்பஸ் நிறுவனம் தனிச்சிறப்பு மிக்க முதன்மைக் கல்வி நிறுவனமாகத் திகழ்கின்றது.

தற்போது QSI நிறுவனத்தின் மற்றும்மொரு சிறப்பு விருதைப் பெற்றிருக்கும் BCAS கம்பஸ் நிறுவனம் கடந்த காலங்களிலும் பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்றிருக்கின்றது.

அந்த வகையில் எடெக்செல் யு.கே நிறுவனம், வழங்கிய சிறப்பு விருதுகள் மற்றும் 2014 ஆம் ஆண்டு எல்.எம்.டி சஞ்சிகையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கையின் முதல்தர கல்வி நிறுவனமாக BCAS கம்பஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட விடயம் என்பன குறிப்பிடப்பட்டவையாகும். (கு)

# யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் பிரிட்டிஷ் கவுன்சிலின் நிகழ்வு

பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ்ப்பாணக் கிளை மாலை மகிழ்ச்சி நிகழ்வு ஒன்றை யாழ்ப்பாண பழைய பூங்காவில் கடந்த 11ஆம் திகதி ஞாயிறன்று நடத்தியது.

இந்த நிகழ்வில் 700 க்கும் மேற்பட்ட சிறுவர்களும் வயது வந்தவர்களும் பங்குபற்றினார்கள்.

இந்த நிகழ்வானது பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ்ப்பாணத் துக்கான புதிய தவணைக்குரிய பொது ஆங்கிலம், ஐ.ஈ.எல்.ரி.எஸ் தயார்ப்படுத்தல் நெறி, பேச்சு ஆங்கிலம், வர்த்தக தொடர்பாடலுக்குரிய ஆங்கிலம் மற்றும் இளம் சிறுவர்களுக்கான ஆங்கில நெறிகளின் பதிவுகளை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்டதாகும்.

இந்த நிகழ்வில் பங்குபற்றிய விருந்தினர்கள் மகிழ்வுற்ற சில நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

வகுப்பறைகளில் தொடர்பாடல் முறையில்ஆங்கிலம்கற்பித்தலை நேரடியாக அறிந்துகொள்ளல், பாரம்பரிய விளையாட் டுக்களை விளையாடுதல், நூல கத்தில் சுவாரஸ்யமான புத்தகங் களைத் தேர்ந்தெடுத்தல், நூலக வினா விடைப் போட்டியில் பங்கு பற்றுதல், ஆசிரியர் சிறு குழந்தைகளின் கதை கூறுவதைச் செவிமடுத்தல், ஐ.ஈ.எல்.ரி.எஸ். தகவல் நிகழ்வில் வினாக்களை கேட்டல் ஆகியன உட்பட பல நிகழ்வுகள் நடைபெற்றன.

## வணிகம்

நடைபெற்ற நிகழ்வுகள் மகிழ்ச்சிகரமானதாகவும் பயனுள்ளதாகவும் இருந்ததென விருந்தினர்கள் பாராட்டினார்கள். பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ்ப்பாணக் கிளை இந்த நிகழ்வை வருகின்ற புது வரு டத்திலும் நடத்த எண்ணியுள்ளது.

பழைய பூங்கா, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அழகிய ஒரு இடமாகும். இங்கு பிள்ளைகள் ஏறும் உபகரணங்கள் உட்பட குடும்பங்களுக்கான வசதி களும் செய்யப்பட்டுள்ளன.


பிரிட்டிஷ் கவுன்சிலின் சர்வதேசத்துக்குரிய சந்தர்ப்பங்களை ஐக்கிய இராச்சியம் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள மக்களுக்கு வழங்குகின்றது. மற்றும் உலகளாவிய ரீதியில் நாடுகளுக்கிடையிலான நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்துக்குரிய புதிய கிளை ஏப்ரல் மாதம் 2014 ஆம் ஆண்டு, எமது பல தரப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கிளையில் நவீனமயமாக்கப்பட்ட 5 வகுப்பறைகளும், 4000 க்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கொண்ட நூலகமும் இருக்கின்றன. அத்துடன் கிளை வாடிக்கையாளர்களுக்கு சர்வதேச பரீட்சைகளையும் வழங்குகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (கு)

## பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE
21/9/2016
www.cse.lk

| [illegible] | | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| ASPI | ↑ 21.67 | 6,451.61 | 6,429.94 |
| S&P SL20 | ↑ 13.85 | 3,565.88 | 3,552.03 |
| வியாபாரப்புரள்வு | | 1,432,937,216.00 | 458,619,392 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 765,278,144.00 | 217,986,544 |
| விற்பனை | | 794,171,840.00 | 363,343,552 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 667,659,072.00 | 240,632,832 |
| விற்பனை | | 638,765,376.00 | 95,275,832 |



| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N0000 | 163.5 | 2,926,078 | 502,750,704 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N0000 | 152 | 2,514,926 | 376,469,336 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N0000 | 226.00 | 346,694 | 78,697,804 |
| கொமர்சியல் வங்கி | COMB.N0000 | 141 | 559,099 | 78,214,545 |
| சம்பத் வங்கி | SAMP.N0000 | 256 | 157,325 | 40,250,309 |
| [illegible] | TJL.N0000 | 43.7 | 883,685 | 38,288,202 |
| ஏசில் கேபிள் | ACL.N0000 | 64 | 591,433 | 37,239,090 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X0000 | 190.0 | 195,819 | 37,205,404 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N0000 | 850 | 26,688 | 22,685,908 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.W0023 | 2.4 | 9,889,086 | 22,646,468 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்

பீப்பிள் இன்சூரன்ஸ் (PINS) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.75

ப்ராவுன்ஸ் கேபிடல் (FLCH) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.05

ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் (AAIC) பங்கு ஒன்றிற்கு Rs. 0.53

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 210 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப [illegible] | 3.1 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓ.ஐ.சி...

குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லாதவாறு உரிய பிரிவினருக்கு அறிவிக்குமாறும் மன்று அறிவுறுத்தல் வழங்கியது.
இரணைமடுக் குளத்திலிருந்து சடலம் மீட்ட வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் 2011ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த நிலையில் 5 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று நகர்தல் பத்திரம் தாக்கல் செய்து வழக்கு நேற்று எடுக்கப்பட்டது. அதன்போதே சுருக்க முறையற்ற விசாரணைக்கோவை தாக்கல் செய்யப்பட்டது. கைது உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.
2011ஆம் ஆண்டு நடந்த சுமன் கொலைக் குற்றச்சாட்டு வழக்கில், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அப்போது பொறுப்பதிகாரியாக இருந்து (இறுதியாக கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்து தற்போது இடமாற்றம் செய்யப்பட்ட) சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் கொலை வழக்கும், குறித்த 5 பேர் உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிராகச் சித்திரவதை புரிந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றிலும் தாக்கல் செய்யப்படவுள்ளதாக கூட்டுக் கொள்ளை விசாரணைப் பிரிவினர் கடந்த 26ஆம் திகதி வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பிரதிநிதி மூலமாக மல்லாகம் நீதிவான் மன்றுக்கு அறிவித்தனர்.
இது பற்றிய சித்திரவதை வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்து இன்று வியாழக்கிழமையும் விசாரணைக்கு வரவுள்ளது. கிளிநொச்சி மன்றின் இந்த வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

*பின்னணி*

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதியை அண்மித்து 5 பேர் கைது செய்யப்பட்டனர். மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது, மாவீரர் தினம் கொண்டாடுவதாகக்கூறி 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் திருட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டது.
அவர்களில் 4 பேர் மீது திருட்டு வழக்கு பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் மன்றில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்கள் அன்றைய தினம் நீதிவான் முன்னிலையில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.
தாம் கைதுசெய்யப்பட்டு சிந்திக்க பண்டார உள்ளிட்ட பொலிஸ் குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டதாகக் குற்றஞ் சாட்டினர். அவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டவர்களில் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா சுமணன் என்பவர் பொலிஸ் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்ட நிலையிலேயே இரணைமடுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அதனால் இளைஞனின் சாவுக்குச் சிந்திக்க பண்டார உள்ளிட்ட பொலிஸ் குழுவே காரணம் என்றும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.
'கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இளைஞனை, எங்களுக்கு முன்பாக வைத்து மின்சாரத்தினால் தாக்கியும், வேறு பல வகைகளிலும் சிந்திக்க பண்டார உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மிகமோசமாகச் சித்திரவதை செய்தனர். பின்னர் ஜீப்பில் ஏற்றிச் சென்றனர். அதன்பின்னர் இரணைமடுக் குளத்திலிருந்து இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார். பயம் காரணமாக இதுவரை அதனைக் கூறவில்லை.' என்று கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞனுடன் கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிவான் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். (வ-4,10)

## 96 அரசியல்

நாதன், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் கடந்த மாத இறுதியில் நடைபெற்றது. இதன் போதுதமிழ் அரசியல் கைதிகளின் முழுமையான விடுதலைக்கு கூட்டமைப்பு வலியுறுத்தியது.
முதல் கட்டமாக சிறு குற்றங்கள் சுமத்தப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. அதற்கு அமைவாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால், நீதி அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.
அந்தக் கடிதத்தில், சிறிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட (வெடிபொருள் கடத்தியமை, முக்கிய பிரமுக்களின் நடமாட்டத்தை கண்காணித்தமை, வெடிபொருள் வைத்திருந்தமை) 23 பேரை, அவர்கள் தடுப்பில் இருந்த காலத்தை தண்டனைக் காலமாகக் கருத்திற்கொண்டு, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் குறைத்து, புனர்வாழ்வு வழங்கி சமூகமயமாக்க யோசனை முன்வைப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதற்கு, மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், நீதி அமைச்சர் விஜயதாச, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ஆகியோரின் ஆலோசனைகளைக் கோரியுள்ளது.
சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளை அமைச்சர் கொழும்பில் நேற்றுச் சந்தித்துப் பேசினார். இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்ததாவது:
"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களையும் விடுதலை செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் பேசினேன். சந்தேக நபர்கள் 96 பேரின் வழக்குகள் உள்ளன. அவற்றில் 23 பேரின் வழக்குகளை உடனடியாக மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தி அதற்கூடாக மறுவாழ்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டது.
6 மாத கால மறுவாழ்வு வழங்கி அவர்களை விடுவிப்பது குறித்தும் மறுவாழ்வுத் திணைக்கள ஆணையாளருடன் கலந்துரையாடினேன். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவருக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்"- என்றார்.
இதேவேளை, அரசியல் கைதிகளில் சிலர் மறுவாழ்வுக்கு அனுப்பப்பட்டு விடுவிக்கப்படுவர் என்று ஏற்கனவே இரு தடவைகள் பட்டியல்கள் அறிவிக்கப்பட்டபோதும் அவர்கள் எவரும் இதுவரையில் மறுவாழ்வுக்கு விடுவிக்கப்படவில்லை என்று கைதிகளின் உறவினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தற்போது கூறப்படும் பட்டியல் குறித்தும் அவர்கள் சந்தேகம் தெரிவித்தனர். (வ-5)

## தியாகி...

ஆரம்பமான உணவு ஒறுப்புப் போராட்டம், செப்ரெம்பர் 26 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.
திலீபனின் 29ஆவது ஆண்டு நினைவுநாள் தமிழர் தேசம் எங்கும் நினைவுகூரப்பட்டு வருகின்றது. தமிழர் தாயகத்தில், திலீபன் உணவு ஒறுப்பு போராட்டம் நடத்திய இடத்தில் கடந்த 15ஆம் திகதி நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.
இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம், நல்லூர்பின் வீதியில் உள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி, ஈகச்சுடரேற்றி அஞ்சலித்தினர்.
பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி சில மணி நேரத்தின் பின்னர், தமிழகத்திலிருந்து வந்திருந்த சிலரும் திலீபனின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினர். (வ-5)

## மரண அறிவித்தல்

திருமதி **உருக்குமணி தர்மராஜா**



மண்ணில் 08 . 07 . 1948

விண்ணில் 20 . 09 . 2016

யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உருக்குமணி தர்மராஜா 20.09.2016 செவ்வாய்க்கிழமை தெகிவளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாபிள்ளை தர்மராஜா (முன்னாள் பரந்தன் தர்மராஜா ஒகனைசேஷன் உரிமையாளர்) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், முத்தையாபிள்ளை - கனகம்மா தம்பதியரின் மருமகளும், கனகா, கனகேஸ்வரி, சிறீஸ்கந்தராஜா, தனுஷா, ஜெயரூபன், இளங்கோ, கோணேஸ்வரி, தயாழினி ஆகியோரின் பாசமிகு தாயும், சரஸ்வதி, அன்னமுத்து, பரஞ்சோதி, வரதராஜா, வரதலிங்கம், சிறீபரந்தாமன், கங்காசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலா கனகலிங்கம், காலஞ்சென்ற பாலச்சந்திரன், இராஜேஸ்வரி, தம்பிராஜா, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், உதயகுமார், அருள்ராஜ், பிரசன்னா ஆகியோரின் மாமியும், துளசிகா, பிரவீன், தர்விந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நேற்று முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (23.09.2016) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

**077 848 5728** (வ.26353) (13.18)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் **ஏரம்பு தேவகுமார்** அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி யோகம்மா ஏரம்பு**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிகூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



*தர்மலிங்கம் தர்மராஜா*
(உரிமையாளர் சரண்யா மோட்டோஸ் யாழ்ப்பாணம்)

அன்னாரின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செல்வா மோட்டோஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**
**217, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தப்பிள்ளை
**இராசரத்தினம்**

மலர்வு
**30.11.1954**

உதிர்வு
**03.10.2007**

திதி: 22.09.2016

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனதுவே
கடமைகள் முடிந்த தென காலனவன் அழைத்தானோ!
மண்ணை விட்டு விண் சென்று ஆண்டுகள் ஒன்பது ஆனதுவே!
மண்ணில் ஈரம் உள்ளவரை மறப்போமா உங்கள் நினைவுகளை....

**தாவளை - இயற்றாலை, கொடிகாமம்.**

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

(c.122) (13.18)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

செல்வி
**செல்வரத்தினம் புனிதா**

மலர்வு
**25.09.1995**

உதிர்வு
**23.06.2016**



கடந்த 23.06.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த செல்வி செல்வரத்தினம் புனிதாஅவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (23.09.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தோர். இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர். தொலைபேசி ஊடாக துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கச்சாயி வீதி, கொடிகாமம். **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை....

ஒரே மாகாணம் எமது வடமாகாணமே என்ற கருத்தை வலியுறுத்தி எமது தனித்துவத்தைப் பேணி, அதே நேரம் அது பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வந்துள்ளோம். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சகோதரர்களே என்ற கருத்தை வலியுறுத்தி வந்துள்ளோம். அதேநேரம் எமது இனப்பரம்பலை இல்லாதொழிக்க எடுக்கப்பட்டு வரும் ஈன நடவடிக்கைகளை உலகறியச் செய்தும் வந்துள்ளோம்.

இரண்டாவதாக ஏறத்தாழ 35000 அலுவலர்களைக் கொண்ட வடமாகாணசபையின் மனித வலுவுக்கான தலைமையைக் கொடுத்து, தகுந்த வழிகாட்டல் வழங்கி வந்துள்ளோம். இவை முன்பிருந்த சூழலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தான் புரியும். எமது அலுவலர்கள் ஆளுநரின் கட்டளை வரும், அமைச்சர்களின் கட்டளைகள் வரும் என்ற பயமின்றி சட்டப்படி பக்கச்சார்பின்றித் தமது கடமைகளை ஆற்றக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள் ளோம். முன்னர் மேலிருந்து கீழ் நோக்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இப்பொழுது அடிமட்டத்துடன் கலந்துரையாடி மேல் நோக்கிச் செல்கின்றோம். அண்மைக்காலங்களில் அவ்வாறான எமது செயல்களை அசைக்க சிலர் நடவடிக்கைகள் எடுத்தாலும், அவற்றைத் தடுத்து முன்னேறி வருகின்றோம்.

மூன்றாவது மாகாணத்தின் முன்னுரிமைப்படுத் தப்பட்ட தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன. தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடாது, தேவைக்கேற்றவாறு முன்னுரிமைப் படுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுத்துச் செல்லப்படுகின் றன. எனினும் போருக்குப் பின்னரான எமது மாகாணத்தின் தேவைகள் தொடர்பான ஆய்வுகளோ, தேவைகள் பற்றிய கள நிலைமை பற்றிய ஆய்வுகளோ மேற்கொள்ளப்படாமல் எமது மாகாணத்துக்கு பொருத்தமான நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் பின்னடைவு எதிர்நோக்கப்பட்டுள்ளது.

தற்போது பிரதமருடன் சேர்ந்து தேவைகள் சம்பந்தமான கணிப்பீடு தயார் செய்யப்படுகின்றது. முன்னர் நாம் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதனை எடுத்த போது, முன்னைய அரசு அதை நடத்த விடவில்லை. இப்பொழுது நடைபெறுகின் றது. அதற்கு எமது பிரதமருக்கு எமது நன்றிக ளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2802 திகதி 21.09.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 23 41 48 60 L
போனஸ் இல.: 13
சனிக்கிழமை ஜக்பொட்: ரூ. 39, 128, 325/=

விசேட வெற்றி இலக்கத்தினைக் கொண்ட 07 இலக்கங்கள் பொருந்துவதன் மூலம்

| | | விசேட வெற்றி இலக்கம் | விற்பனை முகவர் |
| --- | --- | --- | --- |
| 1 ஆம் பரிசு | மோட்டார் வாகனம் | 9466889 | G.N [illegible] - பம்பலப்பிட்டிய |
| 2 ஆம் பரிசு | iPhone 5 | 4514957 | [illegible] - பொறளை |
| | | 8836850 | G.G [illegible] - நக்காவல |
| | | 0502536 | L.M.G.A [illegible] |
| | | 0112112 | W.H.G [illegible] - கண்டி |
| | | 8436821 | H.W [illegible] - ஹொரணை |
| 3 ஆம் பரிசு | தங்க நாணயங்கள் 10 | 8624226 | A.D. [illegible] - இரத்தினபுரி |
| | | 3081747 | W.A [illegible] |
| | | 7852089 | [illegible] |
| | | 2317846 | R.M.S [illegible] - பண்டாரவெல |
| | | 0744814 | K.W.G [illegible] |
| | | 9047012 | M.K. [illegible] |
| | | 5149764 | P.A.D.S [illegible] |
| | | 0132782 | M.M.C [illegible] - சேருநுவர |
| | | 4245350 | D.L.B.E [illegible] - அம்பாறை |
| | | 0058512 | K.G [illegible] - அனுராதபுர |

தொ.பே : 011 4824824



விழிகளில் நீர் பனிந்த
10 ஆம் ஆண்டு நினைவலைகள்
அமரர்
பேரம்பலம்
லவகுமார் (லவன்)
தாயின் மடியில்
தோற்றம்
1979.06.21
திதி: சதுர்த்தசி
(29.09.2016)
அநியாய அழிப்பில்
மறைவு
2006.09.21
எங்கள் குடும்ப விருட்சத்தின் விழுதாகி நின்றவனே - எமை
ஏங்கித் தவிக்க விட்டு எங்கு சென்றாயோ??
பூத்திருந்த உன் நினைவு நிழலாய் தொடருதையா - நாம்
காத்திருக்கின்றோம் உன்னை மீண்டும் காண
உழைப்பால் உயர்ந்து எமை வாழவைத்து - கொடியவரின்
ஊழிக்கூத்தால் உயிர் துறந்து பறந்தாயோ??
பல பத்தாண்டு ஓடி மறைந்தாலும் - உன் நினைவலைகள் அழியாதடா - நீன்
பிறப்பிறாய் விழி திறந்து காத்திருக்கின்றோம் ஓடி வாராய் எம் அருகில் - நினது
ஆன்மா சாந்தி பெற இறைபதம் - பணிகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
என்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

### ஆரோக்கியமான நடவடிக்கைகள்

அவ்வாறு எம்மால் முன்னேற்றகரமானதும், ஆரோக்கிய மானதுமான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை -

- எமது திணைக்களங்கள் ஊடாக 24 வெளிநாட்டு நன்கொடைத் திட்டங்களை வழிப்படுத்தி வருகின்றோம். தற்போதைய எமது நல்லாட்சியின் நிமித்தமும் வெளிப்படைத்தன்மையின் நிமித்தமும் கூடிய வெளிநாட்டு நன்கொடைத் திட்டங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஊழலற்ற நிர்வாகம் ஒன்றை இயற்ற நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.
- மக்களின் தேவைகளை வலியுறுத்தியதன் மூலம் 2016ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையின் ஒதுக்கீட்டை இரட்டிப்பாக்க முடிந்துள்ளது. அவை மக்களைச் சென்றடைய முழுப்பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளோம்.
- பாரபட்சமின்றி முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் சமமான முறையில் வருடாந்த பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு, அதன் அடிப் படையிலான அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய விதத்திலான முழுமையான ஒதுக்கீடு இல்லாதிருப்பினும் மக்களின் மன நிறைவே எமது குறிக்கோளாக இருக்கின்றது.
- மாகாண அரச திணைக்களங்கள் மற்றும் கல்வித் துறையில் காணப்பட்ட வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் நியமனங்கள் வழங்கு வதற்குத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளோம். நியமனங்களில் வெளிப்படைத்தன்மையை நாம் வெளிக்காட்டி வந்துள்ளோம்.
- உதவிப்பாலம் அமைப்பின் மூலம் பொதுமக்கள் கொடைகளை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாவித்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வருகின்றோம். பல வறியவர்கள் இதனால் நன்மை பெற்று வருகின்றார்கள். ஆரவாரமின்றி ஆறுதல் தரும் ஆக்க பூர்வ நடவடிக்கைகள் ஆற்றுப்படுத்தப்பட்டு வருகின்றன. வீடுகள், மலசலகூடங்கள், வாழ்வாதார வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.
- மக்கள் குறைநிவர்த்தி நடமாடும் சேவைகளை இயற்றி, இதுவரை காலமும் கவனியாது இருந்த மக்களின் குறைகளைத் தீர்த்து வருகின்றோம். இதுவரையில் எமது மாகாணத்தில் இவ்வாறான ஏழு குறைநிவர்த்தி நடமாடும் சேவைகளை நடத்தி முடித்துள்ளோம்.
- இடைத்தரகர்களை நம்பாமல் மக்களோடு நேரடித் தொடர்புகள் வைத்து, அவர்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.
- முதலமைச்சர் நிதியம் இதுவரை காலமும் எமக்கு வழங்கப்படாமல் இருந்தது. இனிவருங் காலத்தில் அதனை மக்கள் நலனுக்காகப் பாவிக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்காக எமது ஜனாதிபதியின் தலைமையிலான புதிய அரசுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முதலமைச்சர் நிதியம் பற்றி முயன்று நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தற்போது அது பற்றிய புதிய நியதிச்சட்ட வரைவு ஆளுநரின் பரிசீலிப்பில் இருக்கின்றது. அவரின் அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

### துறை ரீதியான அபிவிருத்திப் பணிகள்

- வீதிகள் பலவற்றைச் சீர்செய்து வரும் அதே நேரத்தில், மக்களின் வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்தவும் மேம் படுத்தவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.
- சிறிய நடுத்தர தொழில்கள் மேம்பாட்டில் ஈடுபட்டு வருகின்றோம். மாவட்ட ரீதியாக மக்கள் மேம்பாட்டு சிறு தொழில் செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. எமது ஸ்திரமான ஆளுகையின் கீழ் வங்கிகள், கடன்தரு நிலையங்கள் போன்றன மக்களுக்கு இலகுக் கடனுதவி வழங்க முன்வந்துள்ளார்கள்.
- பளையில் வளிவழி மின்னியற்றும் ஆலை, வடமராட்சியில் ஆடைகள் தொழிற்சாலை, வன்னியில் பழ மரக்கறி விருத்தித் தொழில் மையம், மன்னாரில் மீன் பதனிடும் ஆலை போன்ற பலவாறான தொழில் விருத்திகளில் ஈடுபட்டு வருகின்றோம்.
- கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடித் துறையில் பல்லாண்டுத் திட்டங்களை வகுத்து முன்னேற்றப் பாதைகளில் பயணிக்க நடவடிக்கைகள் எடுத்துவந்துள்ளோம். போக்குவரத்து நடவடிக்கைகளில் சீர்திருத்தம் ஏற்படுத்தியுள்ளோம். போக்குவரத்து நடவடிக்கைகளைச் சீரமைப்பதற்கான வடமாகாண போக்குவரத்து அதிகாரசபைக்கான நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டு தற்போது வடமாகாண சபைக்கென போக்குவரத்து அதிகாரசபை வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளது.
- சுற்றுலாத்துறை பற்றிய ஆராய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். பல தடங்கல்கள் மத்தியில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளோம். இத்துறை தமிழர் வரலாறு, பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பிரதிபலிக்கும் சுற்றுலா மையங்களை அடையாளப்படுத்தி அவற்றை வெளிக்கொணர்ந்து அதன் மூலம் எமது வரலாற்று கலாசாரப் பெருமையைப் பறைசாற்றுவதற்கும் எமது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வழிகோலுவதற்கும் அடி எடுத்து வைத்துள்ளோம்.
- கூட்டுறவில் இதுகாறும் இருந்து வந்த குறைகளை நீக்கி கூட்டுறவைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.
- விளையாட்டுக்களில் எமது இளையோர்கள் பயிற்சி பெற்று போட்டிகளில் வெற்றி பெற ஆவன செய்து வந்துள்ளோம்.
- எமது கலைகளை, நுண்கலைகளை, மொழியை மேம்படுத்த இயைபான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.
- தீவுப் பகுதிகளின் அபிவிருத்திக்காக ஆக்க பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. வரட்சியில் வாடிய இடங்களுக்கு வளமான குடிநீர் கிடைக்க வழி வகுத்துள்ளோம்.

### வருமான அதிகரிப்பு

- இதுவரை காலமும் உள்ளளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களூடாக முத்திரைத் தீர்வைகளால் பெறப்பட்ட வருமானம், கொழும்பு அரசுக்கே சென்றது. ஆனால் தற்பொழுது வடக்கு மாகாணத்திற்கென புதிதாக வருமான வரித் திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டு. முத்திரைத் தீர்வைகளால் கிடைக்கப்படுகின்ற வருமானங்கள் எமது மாகாணத்திற்கே கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளோம்.

### பன்னாட்டு சமூகத்துக்கு எமது பிரச்சினைகள் தெளிவாக முன்வைப்பு

- மிக முக்கியமாக எமது வடமாகாணம் பற்றிய உண்மை நிலையை உலகறியச் செய்து வருகின்றோம். இந்தியப் பிரதமர், பிரிட்டன் பிரதமர், ஐ. நா. செயலாளர் நாயகம், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர், ஐ. நா. அமெரிக்க வதிவிடப் பிரதிநிதி மேலும் பன்னாட்டு இராஜதந்திரப் பிரதிநிதிகள் போன்றோர் எம்மை நாடி வந்து வடக்கு மாகாணத்தில் சந்தித்த போது அவர்களுக்கு எமது உண்மையான நிலையை அறிந்து கொள்ள வழி அமைத்து வந்துள்ளோம். மூடி மெழுகாமல் எமது உண்மை நிலையையும் எம் மக்களின் உளப் பாங்கையும் அரசுடனான உறவு நிலையையும் நாம் அவர்களுக்குத் தெரியப்படுத்தி வந்துள்ளோம்.
- பலமற்ற ஒரு நிறுவனமான 13ஆவது திருத்தச் சட்டம் தந்த மாகாணசபையை வடமாகாண மக்களின் ஏகோபித்த உரி மைக்குரல் கொடுப்பதற்கான ஒரு நிறுவனமாக மாற்றி அமைத்துத் தந்துள்ளோம். மக்கள் குரல் உரக்கக் கேட்டுவருகின்றது.

### சமூகச் சீரழிவுகளுக்கு இடமளிக்க முடியாது

- சுற்றுச் சூழல் மாசுக்களை அகற்றி, கழிவகற்றலைத் திறம்பட நடத்த ஆவன செய்து வந்துள்ளோம். யாழ் நகர மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சகல உதவிகளும் தரப்பட்டு வருகின்றன. எமக்கெதிரான பொதுவான குற்றச்சாட்டு பெரியளவில் பொருளாதார செயற்பாடுகளில் இதுவரையில் இறங்காமையே. இதுபற்றிய எமது கொள்கைகளை எம்மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். பொருளாதார விருத்தி என்பது எமது மாகாணத்தை இருந்த இடம் தெரியாமல் பிற மக்களின் முதலீட்டில் அமிழ்ந்து போகச் செய்வதாக அமையக் கூடாது.

தெற்கிலிருந்து பெரியளவில் முதலீடுகள் இங்கு கொண்டு வர வேண்டும் என்று எமது ஆளுநர் துடிக்கின்றார். அவற்றின் அந்தரங்கம் என்ன என்பதை நாம் புரியாதவர்கள் அல்ல. என் அறையினுள் தென்றல் வருவதை நான் வரவேற்கின்றேன். ஆனால் அதுவே சூறாவளியாக மாறி என்னை என் அறையில் இருந்து அடித்துப் போக விட மாட்டேன் என்றார் காந்திஜி.

நாம் எம் மக்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்று துரிதமாக எடுக்கும் நடவடிக்கைகள் எம்மைப் பின்னர் மனவருத்தப்படச் செய்யக்கூடாது. பாதிக்கப்பட்ட எம்மக்கள் படிப்படியாக அபிவிருத்தியில், தொழில் விருத்தியில் ஈடுபட, வாழ்வாதாரங்களை மேம்படுத்த நாம் எம்மால் முடிந்த சகலதையும் செய்தே வருகின்றோம்.

புலம்பெயர் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றோம். இனியும் ஏற்படுத்துவோம். தேவைகள் கணிப்புடன் பல்லாண்டுத் திட்டங்களை வகுத்து விஞ்ஞான ரீதியாக விருத்தியில் ஈடுபடுவோம். எமது சுற்றுச் சூழலை மாசடையச் செய்யவோ, எமது பாரம்பரியங்களை, பண்பாடுகளைக் காற்றில் விட்டுவிடவோ, பொருளாதார மேம்பாடு என்ற வகையில் பன்னாடுகளில் ஏற்பட்ட சமூகச் சீரழிவுகளை இங்கும் ஏற்படுத்தவோ நாம் இடமளிக்க மாட்டோம்.

எமது பயணத்தை நாம் ஆன்ம ரீதியாகவே வழிநடத்தி வருகின்றோம். ஆத்திரத்திற்கும், பேராசைக்கும், ஆணவத்திற்கும், அதிவேக ஆற்றுப்படுத்தல்களுக்கும் இங்கு இடமில்லை. எமது பயணம் இறையாசியுடன் செவ்வனே தொடரும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலநிலை மாற்றம் தொடர்பான பரிஸ் உடன்படிக்கையினை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஒப்புதல் அறிக்கையினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூ யோர்க்கில் இடம்பெறும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் வைத்து ஐ.நாவின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் நேற்றுக் கையளித்தார்.

## வீடுகளை இழந்தவர்களுக்கு கொடுப்பனவுக் காலம் நீடிப்பு

கொழும்பு, செப். 22
சாலவ வெடிப்புச் சம்பவத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு மேலும் மூன்று மாத காலம் தலா 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அரசு தீர்மானித் துள்ளதாக நிதியமைச்சர் கருணாநாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பான அமைச்சரவைப் பத்திர மொன்றை இடர் முகாமைத்துவ அமைச் சுடன் இணைந்து நிதியமைச்சு முன்வைக் கவுள்ளது. நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.
கொடுப்பனவை வழங்குவதில் மோசடிகள் இடம்பெறுவதாக மக்கள் தெரிவித்திருந்தனர். மோசடி குறித்து சில அரசியல்வாதிகளிடமும் முறையிட்டு இருந்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். அவை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நிதியமைச்சர் கருணாநாயக்க தெரிவித்தார். (வ-5)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வெள்ளிக்கிழமை இரவு பழக்கடை ஒன்றில் தீ பரவியது. அது வேகமாகப் பரவி சந்தையிலிருந்த பழக்கடைகள், புடவைக்கடைகள் எனப் பரவி 124 கடைகளை நாசம் செய்தது. கிளிநொச்சியில் தீயணைப்புப் படை இல்லாமையினால் பெரியளவிலான பாதிப்பு ஏற்பட்டது. 220 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகின.
இந்தநிலையில் அந்த தீ விபத்துக்கான காரணம் தற்போது பலராலும் பேசப்படுகிறது. வெள்ளிக்கிழமைகளில் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையம் முன்பாக திருஷ்டி கழிப்பு எரிப்பார்கள். அதேபோன்று அன்று வெள்ளிக்கிழமை எரிக்கப்பட்ட திருஷ்டி கழிப்புத் தனல் பறந்து பழக்கடை ஒன்றில் பிடித்துள்ளது. அதுவே பெரியளவில் எரிந்து தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில், கிளிநொச்சி பொதுச் சந்தையில் தீ விபத்து ஏற்பட்டு நான்கு தினங்களின் பின்னர், கொழும்பிலிருந்து வருகை தந்த சிறப்பு தடயவியல் நிபுணர் நேற்று ஆய்வுகளை மேற்கொண்டார்.
கொழும்பிலிருந்து சிறப்பு தடயவியல் நிபுணர் நேற்றுப் புதன் கிழமை கிளிநொச்சிக்கு வருகை தந்தார். தீ விபத்து ஏற்பட்ட பகுதியைச் சென்று அவர் பார்வையிட்டார். ஆய்வுகளையும் மேற்கொண்டார். இதன் போது கிளிநொச்சிப் பொலிஸாரும் அங்கு சமுகமளித்திருந்தனர். (வ-5-ரி3-34-35)

### இணையத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த பல்கலைக்கழகம் மாணவருக்கு அழைப்பு விடுக்கப்படும். பதிவுகள் இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே மேற்கொள்ள வேண்டும்.
இந்தமுறை பல்கலைக்கழக அனுமதிக்காக 68 ஆயிரத்து 299 பேர் விண்ணப்பித்துள்ளனர். எந்தவொரு மாணவருக்காவது மேன்முறையீடு செய்ய வேண்டுமாயிருந்தால், அதற்கென நேற்று முன்தினம் தொடக்கம் ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த முறை 27 ஆயிரத்து 603 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர்-என்றார்.
2015 ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. கடந்த வருடத்திலும் பார்க்க இந்தவருடம் மேலதிகமாக 10 வீதமான மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கான அனுமதியைப் பெறவுள்ளனர். (வ-4)

### வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளூராட்சி மன்றங் களுக்கு மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் வலி. வடக்குப் பிரதேச சபைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்கும் மாத்திரமே நிதி வைப்பிலிடப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-101)

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா. சபையின் 71ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கு பற்றும் அரச தலைவர்களுக்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபா மாவினால் இராப்போசன விருந்துக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அழைக்கப் பட்டிருந்தார்.
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐ. நா. பொதுச்சபையில் உரையாற்றிய இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும்.
மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பயங்கரவாத செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்த அதேநேரம், இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு ஒரு பூகோள ஒத்துழைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தினார். (வ-5)

### தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் கோரிய போதும், அவர் அந்தக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. அநுராதபுரம் மற்றும் வவுனியா சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடரும் என்று தெரிவித்தனர். (வ-5)

### 2,436 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜித சேனாரத்ன.
நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.
2011ஆம் ஆண்டில் 32 பேரும், 2013ஆம் ஆண்டில் 30 பேரும், 2013ஆம் ஆண்டில் 27 பேரும், 2014ஆம் ஆண்டில் 26 பேரும், 2015ஆம் ஆண்டில் 31 பேரும் எயிட்ஸ் நோய் காரணமாக உயிரிழந்தனர்.
எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ள ஆள்களின் ஆயுள்காலத்தை அதிகரிக்கச் செய்வதற்கு மருத்துவ மட்டத்தில் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
அதேபோல், எச்.ஐ.வி. பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
குறிப்பாக பல்கலைக் கழகத்துக்கு மாணவர்கள் சேர்க்கப்படும் போதும், அரச சேவைக்கு ஊழியர்களை இணைத்துக் கொள்ளும்போதும் எச்.ஐ.வி. சோதனை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தெற்காசிய வலயத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எயிட்ஸ் நோய் தொற்றுக்குள்ளாவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது என்று அமைச்சர் ராஜித தெரிவித்தார். (வ-5)


## மரண அறிவித்தல்கள்

### தவில் வித்துவான் சின்னத்தம்பி கல்யாணசுந்தரம் (கலாபூஷணம்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவில் வித்துவான் சின்னத்தம்பி கல்யாணசுந்தரம் (கலாபூஷணம்) 19.09.2016 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இராசநாயகி தம்பதியரின் அன்பு மகனும் ஞானேஸ்வரி காலஞ்சென்றவர்களாகிய சரஸ்வதி சண்முகரத்தினம் ஆகியோரின் சகோதரனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கலியமூர்த்தி மற்றும் கலியுகவரதன், கலைவாணி, கருணாகரன், காந்தரூபன், காந்தரூபி ஆகியோரின் தந்தையுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.09.2016 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 313 5012

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம்



காவில் கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம் கடந்த (20.09.2016) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் சரசுவதி தம்பதி யரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுப்பிரமணியத்தின் (நெதர்லாந்து) அன்பு மனைவியும் சுஜிதா (பிரான்ஸ்), சுமிதா (பிரான்ஸ்), சுஜிகரன், சுகன்னியா, சுஜீவா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுபாகரன் (பிரான்ஸ்) சர்வானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சானுஜா, சந்தோஸ், சஞ்சய், சயானி, சித்தார்த் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பகவதி (கனடா) காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மகேஸ்வரி (வண்ணார் பண்ணை), கமலா (நவாலி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23..09.2016) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வெல்லங்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காவில்
கரணவாய், கரவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்
077 8936162

## கதிரவேலு வீரசிங்கம் (சிங்கராசா)



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிட மாகவும், 395/2, நாவலர் வீதி நல்லூரை வசிப்பிட மாகவும் கொண்ட கதிரவேலு வீரசிங்கம் (சிங்கராசா) 20.09.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ் சென்றவர்களான கதிர வேலு - பாறி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி அரிய மலரின் பாசமிகு கணவரும் கனகம்மா, பரிபூரணம், நாகம்மா, தம்பித்துரை, முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர் களான சங்கரப்பிள்ளை, தருமர் மற்றும் தங்கராசா ஆகியோரின் மைத்துனரும் வசந்தா, கணேசன் (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), ரவீந்திரன் (கனடா), சாந்தா (கனடா), கவிராஜ் (மஹா விஸ்ணு ஹாட்வெயார்) ஆகியோரின் அன்புத்தந்தையும் உதயகுமார், காஞ்சனாதேவி, ராஜி, நிசாந்தனா, ஜெயபால் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜனார்த்தனன் (சுவிஸ்), ரேணுஜன், பிரவீனன், டக்ஸ்சனா, கபின்சன், தருணிகா, சிதார்த்தன், சந்தியா, பானுகா, சுபாங்கி, சரண்ஜன், அருண்ஜன் ஆகியோரின் பேரனுமாவார்
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2016) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

395/2, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 7298060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா–நியூசி. ஆட்டம் ஆரம்பம்

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள நியூசிலாந்து மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கான்பூரில் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் ஆட்டமென்பதால் சில விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்திய அணியின் முன்னாள் டெஸ்ட் தலைவர்கள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர். (ம)



## ஈடன் கார்டன் அரங்குக்கு கங்குலி, டால்மியா பெயர்

கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் உள்ள இரண்டு அரங்குகளுக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர்களான கங்குலி, டால்மியா ஆகியோரின் பெயர்கள் வைக்கப்படவுள்ளன.

கொல்கத்தா கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே குறித்த முடிவு எடுக்கப்பட்டது.


இந்திய அணி கண்ட சிறந்த தலைவர்களில் கங்குலி, டால்மியா இருவரும் கொல்கத்தாவைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்களுக்குக் கௌரவம் கொடுக்கும் விதமாகவே இந்த முடிவு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## முரளிக் கிண்ணத்தில் இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப், 22

முரளிக் கிண்ணத்துக்காக நடைபெற்று வரும் துடுப்பாட்டத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில், யாழ். மத்திய கல்லூரி அணி சாகிராக் கல்லூரியை எதிர்த்து மோதவுள்ளது. இந்த ஆட்டம் பிற்பகல் 1.40 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும். பிறிதொரு ஆட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணியை எதிர்த்து சென். அலொசியஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த ஆட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)






# அகதிகள் அணியின் உருவாக்கம்; நன்றி தெரிவித்தார் பான் கீ– மூன்

ரியோ ஒலிம்பிக் தொடரில் அகதிகளுக்கு என ஓர் அணியை உருவாக்கிக் களமிறக்கியமைக்கு பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்துக்கு நன்றி தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரான பான் கீ - மூன்.

சிரியா, துருக்கி, ஈராக் போன்ற நாடுகளில் உள்நாட்டு போர் நடைபெற்று வருவதால் அங்குள்ள மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கிறார்கள். இதைப்போல் இலங்கை, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டு விவகாரம் காரணமாக ஏராளமானோர் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து குடியேறினார்கள். இப்படிச் சென்றவர்கள் உலகளவில் லட்சக்கணக்கானோர் உள்ளனர். ஆனால் அங்கெல்லாம் அவர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பதென்பது சந்தேகமே.

சமீபத்தில் பிரேஸில் நாட்டில் ரியோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. இதில் 206 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரம் வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்தத் தொடரில் அகதிகளுக்கு என முழுமையான அங்கீகாரம் கிடைத்தது. அகதிகளுக்கு என ஓர் அணி உருவாக்கப்பட்டது. இந்த அணியில் 10 வீர, வீராங்கனைகள் இடம்பிடித்தனர். அவர்கள் ஒலிம்பிக் கொடியின் கீழ் களமிறங்கினார்கள்.

அகதிகள் அணிக்கு என்று பாடலும் இயற்றப்பட்டது. இந்த நிலையில் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தின் இந்த ஏற்பாடுகளுக்காக நன்றி தெரிவித்தார் பான் கீ மூன். நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் உச்சி மாநாட்டில் வைத்தே பான் கீ - மூன் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்துக்கு நேற்றுமுன்தினம் தனது நன்றியைத் தெரிவித்தார். (ம)

# ஸ்ராக், டேல் ஸ்ரெய்ன் இருவரும் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள்

ஆஸ்திரேலியாவின் மிச்செல் ஸ்ராக், தென்னாபிரிக்காவின் டேல் ஸ்ரெய்ன் இருவருமே நிகழ்கால கிரிக்கெட் உலகின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் எனத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அதிரடி வீரரான கில்கிறிஸ்ட்.

நிகழ்கால கிரிக்கெட் உலகம் ஏகப்பட்ட வேகப்பந்துவீச்சாளர்களைக் கொண்டுள்ளது. மலிங்க, ஆமிர், போல்ட், அண்டர்சன், புரோட், சவுத்தி, ரியாஸ், யாதேவ், ஹசில்வூட், ஸ்ரெய்ன் ஆகியோர் அவர்களில் சிலர். ஆனால் இவர்களில் சிறந்த பந்துவீச்சாளர்கள் என்று இருவரைக் குறிப்பிட வேண்டுமாயின் ஆஸ்திரேலியாவின் ஸ்ராக், தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன் இருவரையுமே குறிப்பிடலாம். ஸ்ரெய்ன் நீண்டகாலமாக பந்துவீச்சத் தரப்படுத்தலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். அதுமட்டுமல்லாமல் நீண்டகாலமாக காயத்திலிருந்த அவர் தற்போது அதிலிருந்து மீண்டு அபாரமாகப் பந்து வீசுகிறார். இவை ஸ்ரெய்ன் ஒரு சிறந்த பந்துவீச்சாளர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையின் ஆடுகளங்கள் சுழல்பந்துவீச்சுக்கு சாதகமானவை. ஆனால் கேரத் போன்ற அனுபவமிக்க சுழல்வீரர்களுக்குஈடுகொடுத்து ஸ்ராக் கிரிக்கெட் வேட்டை நடத்தினார். சுழல்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் வேகப்பந்துவீச்சாளர் ஒருவர் இலக்குகளைக் கைப்பற்று வதென்பது அபாரமானது. வேறு எந்தவொரு பந்துவீச்சாளர்களாலும் இலங்கையின் ஆடுகளங்கள் போன்ற சுழலுக்குச் சாதகமான ஆடுகளத்தில்அவ்வாறுஆதிக்கம்செலுத்த முடியாது என கில்கிறிஸ்ட் மேலும் தெரிவித்தார். (ம)

# வார்த்தை மோதல் அவசியம் இப்படிச் சொல்கிறார் சிமித்

ஆஸ்திரேலிய வீரர்களிடத்தில் ஆக்ரோசம் குறைந்து வருகிறது. எதிரணியினரைச் சீண்டும் தன்மை தற்போது இல்லை. இவை மீண்டும் வேண்டும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித்.

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் 5 ஒருநாள் ஆட்டங்கள், மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்காக ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் பயிற்சிமுகாமில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சிமித் இவ்வாறு வலியுறுத்தினார்.

ஆஸ்திரேலிய வீரர்களிடத்தில் தற்போது ஆக்ரோசம் இல்லை. எமது முன்னைய வீரர்களிடம் இருந்த அணுகுமுறைகள் எம்மிடத்தில் குறைந்து வருகின்றன. சிலவீரர்கள் அதிகம் அமைதி காக்கின்றனர். எல்லை மீறாத வார்த்தைப் பிரயோகங்கள் களத்தில் எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ள உதவும். இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் டேவிட் வோர்ணர் வெளிப்படையாக தனது ஆக்ரோசத்தை உடல்மொழியிலும், வார்த்தைகளிலும் வெளிப்படுத்தினார். அத்தகைய ஆற்றல் மற்ற வீரர்களிடத்திலும் தேவை. களத்தில் நெஞ்சை நிமிர்த்துவது போன்ற செயல்கள் கொஞ்சம் ஆற்றலை அதிகப்படுத்தும் என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



# சிங்கப்பூர் தொடரைக் கைப்பற்றி முன்னேறினார் நிகோ ரஸ்பேர்க்

உலக கார்பந்தயத் தொடரில் 16 ஆவது சுற்றாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிங்கப்பூர் சுற்றைக் கைப்பற்றினார் ஜேர்மனிய வீரரான நிகோ ரஸ்பேர்க்.

நடப்பு வருடத்துக்கான உலக கார்பந்தயத் தொடர் 21 சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. இதன் 16 ஆவது சுற்று சிங்கப்பூர் ஓடு தளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வழக்கம் போல் ரஸ்பேர்க், ஹமில்டன் இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. ஹமில்டன் சிறப்பான ஆரம்பத்தை வெளிப்படுத்திய போதிலும் திரும்பல் வளைவுகளில் ரஸ்பேர்க் துல்லியமாகச் செயற்பட்டு படிப்படியாக ஹமில்டனை வீழ்த்தினார். 308 கிலோ மீற்றர் தூரமுடைய பந்தயத்தில் முதல் 40 கிலோ மீற்றர் தூரத்துக்கு முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்திய ஹமில்டன், பின்னர் தனது இடத்தை ரஸ்பேர்க்கிடம் இழந்தது மட்டுமல்லாமல் பின்லாந்து வீரரானரிக்கார் போவிடம் இரண்டாம் இடத்தையும் பறிகொடுத்தார். இதனால் நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் வலம்வரும் ஹமில்டன் மூன்றாமிடத்துக்கு பின்தள்ளப்பட்டார். முடிவடைந்த 16 சுற்றுக்களில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ரஸ்பேர்க் முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் ஹமில்டன் உள்ளார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 22

**குறிஞ்சிக்குமரன் வி.கழகத் தொடர்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ். அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும் இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா அணியும், தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் மோதவுள்ளன.

**ஞானமுருகன் வி.க. தொடர்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் 5 ஸ்ரார் அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் அணியும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணியும் மோதவுள்ளன.

**நெடியகாடு வி.க. தொடர்**

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வடமராட்சி கரணவாய் மத்திய அணியை எதிர்த்து வலிகாமம் விளான் அன்ரனிஸ் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதயதாரகை அணியும் மோதவுள்ளன.

**பொலிகை பாரதி வி.க. தொடர்**

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும், இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும் மோதவுள்ளன.

(ம-422-23-108)



பவுண்டரிக்குப் பந்தை விரட்டும் யாழ். மத்தியின் வீரர்.

# யாழ். மத்திய கல்லூரியை வீழ்த்தியது சென். ஜோசப்

யாழ்ப்பாணம், செப். 22

முரளிக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ். மத்திய கல்லூரி அணியை வீழ்த்தியது கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணி.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோசப் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக ரெவின் கெலி மற்றும் திசநாயக்க. 19 வயதுக்குட்பட்ட இலங்கைத் தேசிய அணியில் ரெவின் கெலி இடம்பிடித்துள்ளார். இவரே சென். ஜோசப் அணியின் பெரும்பலம். இதற்கேற்ப அவர் ஆரம்பம் முதலே தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 50 ஓட்டங்கள் கடந்த பிற்பாடே ஜோசப் அணியின் முதல் இலக்கு வீழ்த்தப்பட்டது. திசநாயக்க 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மடுவல்ல 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ரெவின் கெலி, டானியல் இணை நீண்டு நிலைபெற்றது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். ரெவின் ஒருபடி மேலே சென்று சதத்தையும் பதிவுசெய்தார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சென். ஜோசப் கல்லூரி அணி 2 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைக் குவித்தது. ரெவின் கெலி 101 ஓட்டங்களுடனும், டானியல் 67 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.



ஆட்ட நாயகனான ரெவின் கெலி

பதிலுக்குக் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணிக்கு ஆரம்ப வீரர்களான டினோஜன், கௌதமன் இணை நம்பிக்கை கொடுத்தது. இருவரும் முறையே 34, 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ரி-20 ஆட்டங்களைப் பொறுத்தமட்டில் இது சிறந்த ஆரம்பமே. ஆனால் கார்த்தீபன் 2 ஓட்டங்களுடனும், கோமேதகன் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்து தடுமாற்றம் காட்டினர். சராசரியில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் எவரும் இன்னிங்ஸைக் கட்டமைக்கவில்லை. 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்து 155 ஓட்டங்களையே மத்தியால் எடுக்க முடிந்தது. (ம)

# யாழ். இணைந்த அணி றோயலிடம் படுதோல்வி

யாழ்ப்பாணம், செப். 22

முரளிக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ்.மாவட்ட இணைந்த அணியை இலகுவாக வீழ்த்தியது கொழும்பு றோயல் கல்லூரி அணி.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட இணைந்த அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பிளெமின், சயந்தன் இருவரையும் தவிர வேறு எவரும் இரட்டை இலக்கத்தில் ஓட்டங்களைப் பெறவில்லை. அதிகபட்சமாக பிளெமின் 28 ஓட்டங்களைப் பெற்றார். சயந்தனால் முடிந்தது 11 ஓட்டங்கள். வேறு எவரும் இரட்டை இலக்கத்தில் ஓட்டங்களை எட்டவில்லை. 81 ஓட்டங்களில் சுருண்டது யாழ். மாவட்டத்தின் இணைந்த அணி.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றோயல் கல்லூரி அணிக்கு ஆரம்ப வீரரான சூரிய பண்டார ஒரு ஓட்டத்துடன் ஏமாற்றம் காட்டினாலும் மத்திய வரிசை வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் அந்த அணி 43 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்து 8 இலக்குகளால் வெற்றிபெற்றது. (ம)

# காமாட்சி சம்பியன்



ஆட்ட நாயகனான விதுசன்

இருபாலை விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் காமாட்சி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

காமாட்சி வி.கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. காமாட்சி அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 16 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக அயன் 29 ஓட்டங்களையும், டெஸ்மன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 15.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக விதுசன் 51 ஓட்டங்களையும், சிந்து ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அயன் இரு இலக்குகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகன் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக காமாட்சி அணியைச் சேர்ந்த விதுசன், சிறந்த பந்துவீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த மோகனதீபன், சிறந்த சகலதுறை வீரராக சங்கானை கிங்ஸ் அணியை சேர்ந்த அயன் ஆகியோர் தெரிவாகினர். நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கலந்துகொண்டார். (ம-422)

# கிளி., முல்லை இணைந்த அணி நாலந்தக் கல்லூரியிடம் வீழ்ந்தது

கிளிநொச்சி, செப். 22

முரளிக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணியை சுருட்டியது நாலந்தக் கல்லூரி அணி.

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நாலந்தக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 19.1 பந்துப் பரிமாற்றங்களில் அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணியின் சார்பில் பிரணவன், அகிலன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பார்த்தீபன் இரு இலக்குகளையும், நிலவன், டானியேல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணி 78 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக அனுசன் 12 ஓட்டங்களைப் பெற்றார்.

(ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய இந்திய அணி எதையும் சாதிக்கக்கூடியது

### கோக்லி பெருமிதம்

அதிகளவான இளம் வீரர்களைக் கொண்ட தற்போதைய இந்திய அணி எந்த அணியையும் வீழ்த்தி, எதையும் சாதிக்கவல்லது எனத் தெரிவித்தார் அந்த அணியின் டெஸ்ட் தலைவரான கோக்லி.


இந்தியா-நியூசிலாந்துக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில், நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய இந்திய அணி முழுவதும் இளம் வீரர்களைக் கொண்டுள்ளது. இந்த அணியால் எந்த அணியையும் வீழ்த்த முடியும். எமக்குச் சவாலான அணியென நாம் எந்த அணியையும் கருதவில்லை. துடுப்பாட்டம், பந்துவீச்சு என அனைத்தும் சீரான முறையில் அணியில் பேணப்படுகிறது. எமது



களத்தடுப்பாளர்கள் எமது கூடுதல் பலம். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் அஸ்வின் அதிக இலக்குகளைக் கைப்பற்றுவார் என்று நம்புகிறேன். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் வெளிப்படுத்தியது போல நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலும் அஸ்வின் ஓட்டங்களைக் குவிக்கவும் முயல வேண்டும் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

சட்டக்கல்லூரி சட்டமாணி நுழைவுப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு
வெள்ளவத்தையில் சனிக்கிழமை (24/9) காலை 8.30 -4.30மணிவரை
T.P : 076 6883394
BBA கல்வி நிலையம் No. 36, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை.



## ஊக்கமருந்தைப் பயன்படுத்தினாராம் ரென்னிஸ் ஜாம்பவான் ரபேல் நடால்

பன்னாட்டு ரென்னிஸ் உலகில் ஆதிக்கம் செலுத்திவரும் ஜாம்பவனான ரபேல் நடால், கடந்த சில மாதங்களாக ஊக்க மருந்தைப் பயன்படுத்தி வந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

பன்னாட்டு ஊக்கமருந்து தடுப்பு சம்மேளனத்தின் இணையத்தளங்கள் இனந் தெரியாத நபர்களால் அண்மையில் ஊடுவப்பட்டு அதிலிருந்து ஊக்கமருந்து தொடர்பான முடிவுகள் வெளியிடப்பட்டன. அதிர்ச்சிகளை அள்ளிக் குவிக்கும் வகையில் இந்த முடிவுகள் அமைந்தன. அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனையான செரீனாவில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், மேலும் பல நட்சத்திர அந்தஸ்து பெற்ற வீரர்கள், வீராங்கனைகள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாக இணையத்தை ஊடுருவியவர்கள் வெளிப்படுத்தினர். ஊடுருவியவர்கள் யார் என அடையாளம் காணப்படவில்லை. ஆனால் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேலும் சில வீரர்களின் ஊக்கமருந்து முடிவுகளை ஊடுருவலாளர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டனர். இதில் ஸ்பெய்னின் ரென்னிஸ் வீரரான ரபேல் நடால் ஊக்கமருந்தைப் பயன்படுத்தி வருகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

நடாலைத் தவிர, ஆர்ஜென்ரீனா, பெல்ஜியம், புரூண்டி, கனடா, டென்மார்க், பிரான்ஸ், பிரிட்டன், ஹங்கேரி, ஸ்பெய்ன், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 26 வீரர்களின் மருத்துவ அறிக்கைகளும் வெளியிடப்பட்டன. பிரிட்டனின் நெடுந்தூர ஓட்டப்பந்தய வீரரும் ஒலிம்பிக் சம்பியனுமான பராவும் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாகக் குறிப்பிடப்பட்டது. (ம)



ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியமைக்காக இலங்கை அணியினருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் விதத்தில் வீரர்களைச் சந்தித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பிரதமர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ம)

## தம்மிக பிரசாத்துக்கு அறுவைச் சிகிச்சை

தோள்பட்டைக் காயத்தால் அவதிப்பட்டு வந்த இலங்கை வேகப்பந்துவீச்சாளர் தம்மிக பிரசாத்துக்கு நேற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்ந்து வந்த பிரசாத், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தோள்பட்டைக் காயத்தால் அணியிலிருந்து விலகியிருந்தார். காயம் குணமடையாத நிலையில் ஆஸ்திரேலியாவில் நேற்று அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அடுத்த ஒரு மாத காலப்பகுதிக்கு பிரசாத் பயிற்சிக்குத் திரும்ப முடியாது என்று மருத்துவ குழு எச்சரித்தது.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கை அணியின் உப தலைவரான சந்திமல் கைவிரலில் ஏற்பட்ட காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்துகொண்டார். அவரும் அடுத்த ஒரு மாதத்துக்கு பயிற்சிக்குத் திரும்ப வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டார். (ம)

## கலைமதி வி.க. முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 22

புத்தூர் கலைமதி விளையாட்டு கழகம் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்:

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 25:18, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டு கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 25:20, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் வெற்றியைப் பதிவுசெய்தது.

மூன்றாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் மல்லாகம் நியூவாரியஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. இதில் புத்தூர் வளர்மதி அணி 25:14, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் நேர் செற் வெற்றியைப் பதிவுசெய்தது.

நான்காவதாக நடைபெற்ற ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது. முதல் செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய அணி, இரண்டாவது செற்றை 25:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தது. மூன்றாவது செற்றைக் கைப்பற்றுபவரே ஆட்டத்தின் வெற்றியாளர் என்ற நிலையில் அந்த செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்தி 2:1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

இறுதியாக நடைபெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதியது. இதில் புத்தூர் கலைமதி அணி 25:14, 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-108-422)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 24.09.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி



பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்.
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
கம் முழுவதும் 1000 கிளைகள்.
ங்கையில் சர்வதேச பிரெஞ்சு CERTIFICATES ஐ AF மட்டுமே
ங்குகின்றது.
ரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
ழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
வசம்: PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA
RM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
ான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...



ஆரம்பம்: அடுத்தமாதம் உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
சேரி பஸ்நிலையம் —> புகையிரதகடவை —> AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2016 இல் சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

